# முகவுரை

தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்தில் பள்ளி ஆசிரியராயிருந்த தந்தைக்கும் கடின உழைப்பிலும் எளிமையிலும் அவருக்கு இணையான தாய்க்கும் மூத்த மகளாகப் பிறந்து வளர்ந்த எனக்கு 1970ஆம் ஆண்டில் பி.யு.சி படிப்பு ஒரு சவாலாக முன் நின்றது. அப்போது என்னுடைய ஆதிகுருவான அப்பா அளித்த ஆதரவால் அந்தச் சவால் எனக்குச் சாதகமான திருப்புமுனையாக அமைந்தது. அன்று எனக்குக் கல்வியில் ஏற்பட்ட தீவிர ஆர்வம் இன்றளவும் குன்றாமல் தொடர்ந்து வருவதையும் ‘பெண்களின் சுதந்திரம்’ என்ற சக்தியை நான் வாழ்க்கையின் போக்கில் துழாவிக் கண்டுபிடித்து அதை இல்லறத்திலும் வங்கிப் பணியிலும் நடைமுறைப்படுத்தி நிறைவு பெற்றதையும் பற்றி ஆர்வமுள்ளவர்களுடன் பகிர்ந்துகொள்ள எண்ணினேன். அந்த நினைவுகளுக்கு ‘வாழ்க்கைச் சித்திரங்கள்’ என்று பெயரிட்டு ‘அப்பா கொடுத்த கல்வி’, ‘இல்லறம்’, ‘ஐஓபி தந்த செல்வமும் கல்வியும்’ மற்றும் ‘விட்டு விடுதலையாக...’ என நான்கு பாகங்களாகத் தொகுக்கும் முயற்சியில் இப்புத்தகம் ‘அப்பா கொடுத்த கல்வி’ என்ற முதல் பாகத்தைத் தாங்கி வருகிறது.

இந்த முதல் பாகத்தில் நடுத்தரக் குடும்பத்துப் பாதுகாப்பான சூழ்நிலை, பெற்றோரின் கண்டிப்பான வளர்ப்பு, பாட்டி-தாத்தாவின் இதமான அருகாமை, சகோதர சகோதரிகளுடனான பாசம், குழந்தைகளின் கல்விக்காக அப்பா எடுத்துக்கொண்ட முயற்சிகள், அம்மாவின் அயராத உழைப்பு, நான் பல பரிசுகளுடன் கணிதத்தில் பட்டமேற்படிப்பு கல்வி பெற்றது, தேர்வு முடிவுகள் வருமுன்பே நான் திருமணம் செய்துகொடுக்கப்பட்டது, தங்கைகள் ஒவ்வொருவரின் கல்வி மற்றும் திருமணம், ஐம்பத்தி ஒரு ஆண்டுகள் வாழ்ந்து மறைந்த தம்பியின் வாழ்க்கை மற்றும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அம்மா-அப்பாவின் நயமான அணுகுமுறைகள் ஆகியவற்றைப் பற்றிப் பகிர்ந்துகொண்டிருக்கிறேன்.

கணிதம், வங்கியியல், கணக்கியல், பொருளாதாரம், மென்பொருள் உருவாக்கம், மொழிகள், இலக்கியம், ஆன்மீகம், நாட்டு நடப்பு எனப் பல துறைகளில் எனக்குத் தொடர்ந்து உள்ள ஆர்வம் காரணமாக ஒரு நீண்ட வீச்சிலிருந்து பொருத்தமான உதாரணங்களையும் மேற்கோள்களையும் எழுத்தில் எதிர்பார்க்கலாம். படிப்பதற்குப் பொதுவாக விறுவிறுப்பாகவும் சில இடங்களில் சிந்தனையைத் தூண்டுவதாகவும் வாழ்க்கைப் பதிவுகளுடன் ஆங்காங்கே இடம் மற்றும் காலத்தின் பதிவுகளும் அமையுமாறு கட்டுரை முயற்சிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை லலிதா சீதாராமன்

21.09.2020



# Table of Contents


1. கடவுள் வாழ்த்தும் குரு வந்தனமும்
2. அம்மா-அப்பா திருமணம்
3. பிறப்பும் ஆரம்பக் கல்வியும்
4. பள்ளிச் சேர்க்கை
5. உயர் நிலைப் பள்ளிக் காலம்

   **5.1 பள்ளி நினைவுகள்**

   5.2 குழந்தைப்பருவ உலகம்

   5.3 குடந்தை நகரின் கோயில் திருவிழாக்கள்

   **5.4 கலாசாரத் தொட்டில் குடந்தையில் மாணவப் பருவம்**

   5.5 பள்ளியிறுதிப் பொதுத் தேர்வு

6. படிப்பு தொடருமா?
7. திருப்புமுனையாக அமைந்த பி.யு.ஸி படிப்பு
8. வரப் பிரசாதமாக அமைந்த பட்டப் படிப்பு
9. பரிசாகக் கிடைத்த காந்திஜியின் சுயசரிதைப் புத்தகம்
10. தங்கை வஸந்தாவின் பி.யு.ஸி. பொதுத்தேர்வும் மேற்கல்வியும்
11. பட்ட மேற்படிப்பும் திருமணமும்
12. வாழ்க்கைச் சித்திர ஆல்பங்கள்
13. தம்பியின் நலக் குறைவு
14. தங்கைகளின் கல்வியும் திருமணங்களும்
15. வீட்டுப் பெரியவர்களின் திருப்தி
16. பழமொழிகளால் உரையாடிய பாட்டி
17. அம்மாவுக்கு ஏற்பட்ட பலமுனைச் சோதனைகள்
18. கர்மயோகி தாத்தா
19. கும்பகோண வீட்டிலிருந்து விடை பெற்றது

20. அப்பா-அம்மா மற்றும் தம்பியின் சென்னை வாழ்க்கை
21. அம்மா சற்று ஓய்வாகப் பெண்களின் வீட்டில்...
22. எல்லைகளற்ற கல்வி
23. முடிவுரை

# வாழ்க்கைச் சித்திரங்கள்

## அப்பா கொடுத்த கல்வி

**லலிதா சீதாராமன்**

### 1. கடவுள் வாழ்த்தும் குரு வந்தனமும்

வாசநறு மலரளித்து விநாயகனையும் குலதெய்வம் முருகனையும் வணங்கி
மாசில் வீணையின் இசையென மனவமைதி தரும் ஈசன் இணையடியையும்
தனமும் கல்வியும் தளர்வறியா மனமுந்தரும் அன்னையின் இன்னருளையும்
வினைகளகலத் தெய்வத்தின் குரலில் குறிப்பளிக்கும் குருவையும் கும்பிட்டு
குறையேதுமில்லை கோவிந்தாவென வாழ்ந்த நினைவுகளைச் சூரியனிடம்
அர்ப்பணித்துச் சென்னையிலிருந்து இரண்டாயிரத்திருபதில் எழுதுகிறேன்.

### 2. அம்மா-அப்பா திருமணம்

வளமான தஞ்சாவூர் மாவட்டத்தில் கோயில் நகரமான கும்பகோணத்தில் கடின உழைப்பிலும் கலாசாரத்திலும் நிகராக நின்ற பாகீரதி-பாலசுப்பிரமணியன் என்ற மணமக்களுக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. அத்திருமணம் நிச்சயிக்கப்பட்ட விதத்தைப் பாட்டியும் அம்மாவும் சுவை படக் கூறுவார்கள். தாத்தா ஒரு நாள் ஒரு கிலோ சர்க்கரையுடன் வீட்டுக்கு வந்து பாட்டியிடம் “இந்தா! பிடி! பாகீரதிக்குத் திருமணம் நிச்சயித்து விட்டேன் என்றாராம்! நான் குழந்தையாக இருந்த போது இப்படிச் சுருக்கமாகக் கேள்விப் பட்டிருந்ததைச் சமீபத்தில் விளக்கமாகக் கேட்டறிந்தேன். அம்மாவிடமிருந்து தெரிந்துகொண்ட உறவுமுறைகளைக் கீழே வரைபடம் போலக் கொடுத்திருக்கிறேன்.

தாத்தாவுக்கு நாகம்மா மற்றும் தையம்மாள் என இரண்டு ஒன்றுவிட்ட அத்தைகள். நாகம்மா அத்தை தனது சகோதரி வீட்டுக்கு வருகை தந்தபோது அவரைச் சந்திக்க வந்த தாத்தா அங்கு தையம்மாள் அத்தையின் பிள்ளையைப் பார்க்கிறார். பள்ளி ஆசிரியராக இருக்கிறார் என்றும் இன்னும் மணமாகவில்லை என்றும் தெரிந்து கொள்கிறார். அவரைப் பிடித்துப்போனதால் பிள்ளையைப் பெற்றவர்களிடம் தன் பெண்ணைப் பற்றிய விவரங்களைக் கூற அவர்களும் திருப்தி அடைந்து அந்த சம்பந்தத்தில் ஆர்வம் காட்டுகிறார்கள். தாத்தா வீட்டிற்குப் போனவுடன் “இந்தா! பிடி! சர்க்கரை!” என்று பாட்டியின் கையில் கொடுக்கிறார்!

வரைபடத்தை எழுதியபோது என்னுடைய அம்மா வழி எள்ளுப் பாட்டியும் அப்பா வழி கொள்ளுப் பாட்டியும் சகோதரிகள் என்பது புரிந்தது.

செல்லா அம்மாள் (மதுராம்பாள்) — சகோதரி சாலா அம்மாள்

↓ ↓ ↓

A.P.வெங்கடராமய்யர் - நாகலக்ஷ்மி அம்மாள் — நாகம்மாள் — தையம்மாள் - M.மஹாதேவய்யர்

↓ ↓

V.வேணுகோபாலய்யர் - சுப்பலக்ஷ்மி அம்மாள் . M.பாலசுப்பிரமணியன்

↓ ↕

பாகீரதி ↔ ↔

மஹாதேவத் தாத்தா தேப்பெருமாள்நல்லூர்ப் பள்ளியில் வேலை பார்த்த போது அம்மா அங்கு படித்தார் என்பதும் தாத்தா அம்மாவைப் பள்ளியின் நடன நிகழ்ச்சிகளில் பார்த்திருந்தார் என்பதும் பெண் பார்க்கும் நிகழ்ச்சியில் தெரிந்த கூடுதல் விவரங்களாகும். அம்மா-அப்பாவின் திருமணம் 1953ஆம் வருடம் மே மாதம் இருபத்தி நான்காம் தேதியன்று கும்பகோணம், மஹாமஹக் குளத்தின் தென்புறத்திலிருந்த கல்யாண மண்டபத்தில் விமரிசையாக நடைபெற்றது.

## 3. பிறப்பும் ஆரம்பக் கல்வியும்

தாய்-தந்தைக்குத் தலைச்சன் பிள்ளையாகப் பிறந்த எனக்கு அம்பாள் பெயராக லலிதா எனப் பாட்டியும் வீட்டில் அழைக்கும் பெயராகப் பிரேமா என அப்பாவும் வைத்ததாக அம்மா கூறுவார். சிறு வயதில் அதிகமாக விஷமம் செய்யாமல் சொன்ன பேச்சைக் கேட்டு நடந்து கொண்டிருந்த என்னை அம்மா ‘பொம்மை’ எனச் செல்லமாக அழைத்தது இலேசாக ஞாபகத்திலிருக்கிறது.



’வயிற்றில் கட்டி விழுதல்’ எனச் சொல்லப்படும் ஈரல் நோய் (liver-complaint) கண்ட பிறகு என்னுடைய உடல்நலம் கடுமையாக பாதிக்கப்பட்டது எனவும் டாக்டர் பாப்பையா கிளினிக் என்ற பெயருள்ள குழந்தைகள் கட்டி சிகிச்சை மருத்துவ மனையின் சிகிச்சையில் நோய் மூன்று வயதளவில் குணமானது எனவும் வீட்டில் கூறுவார்கள்.

அப்பா ஆதிகுருவாக இருந்து எனக்கு ‘அ, ஆ, இ, ..’ சொல்லிக் கொடுத்து என்னுடைய கல்விக்கு வித்திட்டார். ‘ஸெகண்டரி கிரேட்’ (secondary grade) ஆசிரியரான அப்பா குழந்தைகளின் மனப்போக்கை அறிந்து பாடம் சொல்லிக் கொடுப்பதில் வல்லவர். எம்.இ.எல்.டி. (M.E.L.T.) முதலிய பயிற்சிகளுக்குச் சென்று வந்திருந்த திறத்தாலும் அவரது நகைச்சுவை உணர்வாலும் அப்பா சொல்லிக் கொடுப்பது மனதில் பசுமரத்தாணி போல் பதியும். அப்பாவுடைய ஆசிரியத் திறமையால் நான் ஐந்து வயதுக்கே சிறுவர் கதைப் புத்தகங்களை வாய்விட்டுச் சரளமாகப் படிக்கத் துவங்கினேன். அப்பா மூன்றெழுத்து மற்றும் நான்கெழுத்து தமிழ் வார்த்தைகளைச் சொல்லிக் கொடுத்துப் பயிற்சி செய்யச் சொன்னால் அவற்றை வீட்டின் சிமெண்டுத் தரைகள் முழுவதும் எழுதிப் பயிற்சி செய்துகொண்டேயிருப்பேன் என்பதும் ‘இப்படி வீடு முழுவதும் எழுதி வைத்தால் யார் துடைப்பது!’ என்ற இராதா அத்தையின் செல்லமான கோபமும் இலேசாக நினைவிலிருக்கிறது.

## 4. பள்ளிச் சேர்க்கை

கும்பகோணத்தில், அறுபதுகளின் ஆரம்ப வருடங்களில், தனிப்பட்ட முறையில் படித்ததாகக் (private study) கூறி பள்ளியின் இடைப்பட்ட வகுப்புகளில் சேர அனுமதி கேட்க முடியும். அக்காலத்தில் பள்ளியில் சேர பிறப்புச் சான்றிதழின் அவசியமுமில்லை. படிப்பின் தரத்தைப் பரிசோதனை செய்து திருப்தியாக இருந்தால் சேர்த்துக்கொள்வார்கள்.

அப்பா என்னைச் சுமார் ஆறு வயதுக்கு வீட்டின் அருகில், வேதவிநாயகர் கோயிலுக்குப் பக்கத்திலிருந்த கிருஷ்ணா துவக்கப் பள்ளிக்கு அழைத்துச் சென்று மூன்றாம் வகுப்பில் சேர்க்க அனுமதி கேட்டார். அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் என் அப்பா எடுத்து வந்திருந்த புத்தகங்களைப் படிக்குமாறு என்னிடம் கூறினார். அவற்றைப் படித்த பிறகு

பள்ளியிலிருந்த ஒரு புத்தகத்தைப் படிக்கக் கொடுத்தார். அதையும் நான் படித்த பிறகு அவர் என் அப்பாவிடம் என்னை நான்காம் வகுப்பில் சேர்த்துக் கொள்வதாகக் கூறினார். ஆனால் அப்பா 'நான்காம் வகுப்பில் சேர்த்தால் மிகவும் வயதுக் குறைவாகி (underage) விடும், மூன்றாம் வகுப்பில் சேர்த்தால் போதும், சார்' என்று கேட்டுக்கொண்டார்.

லலிதா என்ற பெயருடன் அப்பாவின் பெயரின் முன்னெழுத்து (initial) சேர்க்கப்பட்டு B.லலிதாவாக மூன்றாம் வகுப்பில் சேர்க்கப்பட்டேன். அந்த பள்ளிச் சேர்க்கை நிகழ்ச்சி என் மனதில் பசுமையாகப் பதிந்துவிட்டது. என்னைப் பள்ளியில் சேர்த்துக் கொண்ட மதிப்பிற்குரிய தலைமை ஆசிரியர் கோபாலகிருஷ்ணய்யர் சார், சுசீலா டீச்சர், பத்மா டீச்சர், ஸரஸ்வதி டீச்சர், ஜயராம சார், கல்யாணசுந்தரம் சார் முதலியவர்கள் துவக்கப் பள்ளியின் மறக்க முடியாத ஆசிரியர்களாவர்.

## 5. உயர் நிலைப் பள்ளிக் காலம்

### 5.1 பள்ளி நினைவுகள்

ஆறாம் வகுப்பிலிருந்து பாணாதுறை உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கப்பட்டேன். அதுவும் நான் படித்தத் துவக்கப் பள்ளியைப் போலவே அரசு உதவி பெறும் பள்ளியாகும். வருடத் துவக்கத்தில் செலுத்தப்படும் சிறிய தொகையான சிறப்புக் கட்டணத்தைத் தவிர இதரக் கட்டணம் ஏதும் கிடையாது.

பள்ளியில் நான் பாடம் கவனித்ததில் இரண்டு விதங்களிருந்தன. அப்பா போல் மாணவர்களின் கவனத்தை இழுத்து நிறுத்தி வைத்துப் பாடம் நடத்தும் ஆசிரியர்களின் வகுப்பில் நான் ஊன்றிக் கவனிப்பேன். மற்ற வகுப்புகளில் என் கவனம் சிதறி விடும். மனதில் ஏதாவது கற்பனை ஓடும். பின்னாளில் நான் ஆமிர் கானின் 'தாரே ஜமீன் பர்' (तारे जमीन पर) என்ற ஹிந்தித் திரைப்படம் பார்த்தபோது அந்தப் பள்ளிச் சிறுவனின் வகுப்புநேரக் கற்பனைகள், அதுவும் ஒரு கணிதக் கேள்விக்கு சம்பந்தப்பட்ட இரு எண்களை மனதளவில் மோதவிட்டு வென்ற எண்ணை விடையாகக் கூறியது, எனக்கு என்னுடைய பள்ளிக் காலக் கவனச் சிதறல்களையும் கற்பனைகளையும் நினைவூட்டின. மொத்தமாகப் பார்த்தால் வகுப்பில் தரவரிசைப் பட்டியலில் என் இடம் நாலைந்துக்குள் இருந்ததாக ஞாபகம்.

நான் படித்த உயர்நிலைப் பள்ளி இரு பாலரும் படிக்கும் பள்ளியாக (co-education school) இருந்தாலும் ஒன்பதாம் வகுப்பிலிருந்து பெண்களுக்கான தனிப்பிரிவு என்று பிரிந்துவிடும். மேலும் அந்த வருடத்தில் மூன்றாம் வகுப்பிலிருந்து என்னுடன் படித்துக் கொண்டு முத்துமுத்தான கையெழுத்துடன் வகுப்பின் முதலிடத்திலிருந்த G.இராஜலக்ஷ்மி என்ற தோழி வேறு ஊருக்குப் படிக்கச் சென்றுவிட்டாள். இக் காரணங்களால் என்னுடைய முயற்சி ஏதுமின்றி நான் அநேகமாக வகுப்பின் முதலிரண்டு மதிப்பிடங்களுக்குள் வரத் துவங்கினேன்.

## 5.2 **குழந்தைப்பருவ உலகம்**



எனக்கு நினைவு தெரிய ஆரம்பித்த வயதில் நான், வஸந்தா, சுந்தர் மற்றும் ஞானம் என நான்கு குழந்தைகளாக இருந்தோம். என்னுடைய எட்டாம் வயதில் எனது மூன்று வயதுத் தம்பி சுந்தர் சிகிச்சை பலனளிக்காமல் கட்டி நோய்க்குப் பலியான சோக நிகழ்ச்சி நடந்தது. பின் வருடங்களில் பிறந்த ரவி என அழைக்கப்பட்ட இரவிச்சந்திரன் என்ற தம்பியுடனும் ஜயந்தி என்ற கடைசித் தங்கையுடனும் நாங்கள் ஐந்து குழந்தைகளானோம்.

எங்கள் வீடு டபீர் நடுத் தெருவில் இருந்தது. ‘இது யாகம் நடந்த வீடு, பல தலைமுறைகளாக நம்மிடம் உள்ள வீடு’ என்று அப்பா பெருமையுடன் கூறுவார். வீடு 14

அடிக்குள்ளான அகலமும் வெளித் திண்ணை, உள் திண்ணை, முதல் ரேழி, இரண்டாம் ரேழி, மேல் கூடம், கீழ்க் கூடம், முதல் முற்றம், இரண்டாம் முற்றம், இரண்டாம் கட்டின் முதல் தாழ்வாரம் மற்றும் இரண்டாம் தாழ்வாரம், உட்கொல்லை மற்றும் வெளிக் கொல்லை என 140 அடிக்கு மேல் நீளமும் என்பது போல நீளவாக்கில் அமைந்திருக்கும். எங்கள் அப்பா வழிப் பாட்டிக்கும் கும்பகோணமே பூர்வீக ஊர். அவரது உறவினர் சோலையப்பன் தெருவில் வசித்ததாக அம்மா கூறுவார்.

அப்பாவுக்கு ஆறு சகோதரிகள். தனக்கு வைத்தி என்று ஒரு தம்பியும் இருந்ததாக அப்பா கூறுவார். குஞ்சு என அழைக்கப்பட்ட ஜானகி அத்தையின் கணவரான பிச்சை அத்திம்பேர் இளமையிலேயே தவறிவிட்டதால் தன் குழந்தைகளுடன் முன்பு டபீர் நடுத் தெரு இல்லத்திலேயே வசித்த அத்தை தன் பெண்ணுக்குத் திருமணமான பிறகு பிள்ளையுடன் சேலத்தில் வசித்தார். கொக்கூர் என்ற கிராமத்தில் வசித்த இராஜம் என்று அழைக்கப்பட்ட இராஜலக்ஷ்மி அத்தை-இராமையா அத்திம்பேருக்கு இரண்டு பெண்கள். பட்டு என அழைக்கப்பட்ட ஜயலக்ஷ்மி அத்தை-இராமமூர்த்தி அத்திம்பேர் தங்கள் பிள்ளை மற்றும் மூன்று பெண்களுடன் மாயவரத்தில் வசித்துக்கொண்டிருந்தார்கள். பேபி என அழைக்கப்பட்ட மஹாலக்ஷ்மி அத்தையும் இராமகிருஷ்ண அத்திம்பேரும் மதராஸில் வசித்தார்கள். தஞ்சாவூரில் வசித்துவந்த சம்பு என அழைக்கப்பட்ட சண்பகலக்ஷ்மி அத்தை-கோபாலகிருஷ்ண அத்திம்பேருக்கு மூன்று பெண் குழந்தைகள். ஒரு பெண் குழந்தையும் ஒரு ஆண் குழந்தையும் கொண்ட இராதா அத்தையும் பாலசுப்பிரமணிய அத்திம்பேரும் தஞ்சாவூரில் வசித்தனர்.

அப்பா கும்பகோணம் நகராட்சியின் எட்டாம் வகுப்பு வரையிலான இடைநிலைப் பள்ளிகளில் ( Middle Schools) முதலில் ஆசிரியராகவும் பிறகு தலைமை ஆசிரியராகவும் பணி புரிந்தார். பிறகு அவர் செலக்ஷன் கிரேட் (selection grade) ஆசிரியராக அறிஞர் அண்ணா நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் ( Arignar Anna Municipal High School) பணிபுரிந்து கொண்டிருந்த போது அப்பள்ளி மாநில அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டு அறிஞர் அண்ணா அரசு உயர்நிலைப் பள்ளி எனவும் 1978ஆம் வருடத்திலிருந்து பன்னிரண்டாம் வகுப்பு சேர்க்கப்பட்ட பிறகு அறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப் பள்ளி ( Arignar Anna Government Higher Secondary School) எனவும் அழைக்கப்பட்டது. அப்பா உறவினர்களாலும் நண்பர்களாலும் 'மணி' எனவும் மாணவர்களால் 'பாலு சார்' எனவும் அன்புடன் அழைக்கப்பட்டார்.

அப்பா பள்ளியிலிருந்து கொண்டுவரும் விகடன், கல்கி, கலைமகள் போன்ற பத்திரிகைகளை நான் வாசலுக்கே சென்று வாங்கிக் கொண்டுவிடுவேன். அப்பா கொண்டுவரும் தீபாவளி மலர்களை நானும் தாத்தாவும் போட்டி போட்டுக்கொண்டு படிப்போம். நான் எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோதே பாட்டி காலமாகிவிட்டிருந்தார். தாத்தா பெரண்டையையும் தூதுவளையையும் உட்கொல்லையின் வேலியிலிருந்து பறித்து வருவதும் அம்மா அவற்றை அவருக்காகத் துவையல்கள் செய்வதும் ஞாபகத்திலிருக்கிறது. ஓய்வு பெற்ற ஆசிரியரான அவர் நான் கணிதத்தின் வீட்டுப் பாடங்களைச் செய்யும்போது அருகிலிருந்து பார்த்து 'குட்டி நன்றாகச் செய்கிறாளே' என்று சந்தோஷப்படுவார்.

நான் ஒன்பதாம் வகுப்பில் இருந்தபோது வந்த மஹாமஹப் பண்டிகைக்கு மூன்று நாட்களுக்கு முன்பு தாத்தா, தன்னுடைய எழுபத்தி ஏழாவது வயதில், வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தபோது அப்படியே சாய்ந்து அனாயாசமாகக் காலமானார். ஆறு அத்தைகளுக்கும் தந்தியில் தகவல் தெரிவித்தார் அப்பா. தந்தி கிடைக்கும் முன்பாகத் தஞ்சாவூரிலிருந்து சாதாரணமாக மஹாமகத்துக்காகக் கிளம்பி வந்திருந்த இராதா அத்தை வீட்டு வாசலுக்கு வந்து சமாசாரம் அறிந்தவுடன் கதறியது பல நாட்கள் என்னை வருத்தியது. அந்த மஹாமகத்தின் அன்று எங்கள் வீட்டின் வாசலில் இருந்தபடியே, 'எள் போட்டால் எள் விழ இடமில்லை' எனக் கூறும் தன்மையுடைய கூட்டத்தைக் கும்பகோணத்தின் வீதிகளில் பார்க்க முடிந்தது.

அதே வருடத்தில் எனது பெரிய அத்தையான குஞ்சு அத்தையின் பிள்ளை தன்னுடைய மனைவியின் வளைகாப்பு-சீமந்தத்தை தன்னுடைய தாத்தா-பாட்டி வீட்டில் நடத்த ஆசைப்பட்டு டபீர் நடுத் தெரு வீட்டிற்கு வந்து நடத்தியது ஞாபகத்திலிருக்கும் இன்னொரு நிகழ்ச்சியாகும்.


தனது தாழம்பூ வண்ண முகத்தில் பளிச்சிட்ட அரக்குக் குங்குமமும் பழைய சிவப்புக் கல் தோடுகளும் இரண்டு மூக்குத்திகளும் கழுத்தில் பவழ மாலையும் அரக்குச் சேலை-இரவிக்கையுமாகத் தையுப்பாட்டியும் சிக்கனத்துக்கும் கண்டிப்புக்கும் இடையில் பாசத்தைக் காட்டியவராக மஹாதேவத் தாத்தாவும் மனதில் பதிந்து போயினர்.



எங்கள் வீட்டின் வெளிக்கொல்லையில் தென்னை, பாக்கு, பாதாம் மற்றும் நெட்டிலிங்க மரங்கள் அணிவகுத்து நிற்கும். உட்கொல்லையில் கிணற்றை ஒட்டி சந்தன முல்லை, செம்பருத்தி, ஒற்றை நந்தியாவட்டை, கனகாம்பரம் என நறுமணமும் வண்ணக் கலவையுமாக கொடிகளும் செடிகளும் கவர்ந்திழுக்கும். அப்பாவிற்குத் தோட்ட வேலைகளில் மிகுந்த ஈடுபாடு உண்டு. நிறையக் காய்கறிச் செடிகள் பயிர் செய்திருப்பார். அப்பா கையால் பயிர் செய்து அப்பாவே பறித்துக் கொடுத்த அவரைக்காய், கத்தரிக்காய், வெண்டைக்காய், பாகற்காய், தக்காளி, சுண்டைக்காய், பச்சை மிளகாய் முதலியவை மனதில் இன்னும் பசுமையாக நினைவிலிருக்கின்றன.

குழந்தைகளின் வீட்டுத் தோட்டங்களின் சமீப காலத்திய வண்ணப் படங்கள் சில கட்டுரையின் இப்பகுதியை அலங்கரிக்க உதவுகின்றன! அப்பா பயிர் செய்திருந்த பூச்செடிகளையும் காய்கறிச் செடிகளையும் அவரது பேத்திகள் மற்றும் பேரன் மனைவி ஆகியவர்களின் ஆர்வத்திலும் கவனத்திலும் உருவான செடிகள் கண்முன் நிறுத்துகின்றன.





















அப்பா பள்ளியிலிருந்து திரும்பிய பிறகு ட்யூஷன் வகுப்புகள் எடுக்கச் செல்லும் முன்னும் விடுமுறை நாட்களிலும் தோட்ட வேலைகளைக் கவனிப்பார். உட்கொல்லையில் முள்வேலி தளர்ந்துவிட்டால் அதை இழுத்துக் கட்டுவார். வீட்டில் ஏழெட்டு தென்னை மரங்கள்

இருந்ததால் இளநீருக்கும் தேங்காய்க்கும் குறைவில்லை. அப்பா கடப்பாரையை முற்றத்து மூலையில் ஊன்றி கால்களால் முட்டுக் கொடுத்தவாறு மட்டைத் தேங்காய்களை வேகமாக உறிப்பார். வீட்டு உபயோகத்திற்கு எடுத்துக்கொண்டது போக மீதித் தேங்காய்களை காய்க்கு இருபத்தி ஐந்து பைசா என விலைக்குக் கொடுப்பார். அப்போதைய விலைவாசி நிலவரப்படி ஒரு லிட்டர் தேங்காய் எண்ணெயின் விலை ஆறரை ரூபாய் என்று ஞாபகம்.

அப்பா வீட்டு வரவு செலவுக் கணக்குகளை அன்றாடம் தவறாமல் எழுதித் துல்லியமாகப் பராமரித்து வருவார். முதல் தேதி சம்பளம் வாங்கி வீடு வந்த பிறகு அந்த மாதத்தின் பால், தயிர், மளிகை, மின்சாரக் கட்டணம், வீட்டுவேலை செய்யும் பணிப்பெண்ணின் சம்பளம் முதலிய அனைத்துச் செலவுகளுக்கும் உண்டான தொகைகளைக் கணக்குப் பார்த்து அம்மாவிடம் கொடுத்த பிறகுதான் வேறு வேலைகளைக் கவனிப்பார். அப்பா ஹிந்தி ட்யூஷன் வகுப்புகளும் எடுப்பார். ஒரு முறை ஒரு முன்ஸிஃபிற்கு (Munsif court’s judge) ஹிந்தி சொல்லிக்கொடுத்து அவருடைய பாராட்டைப் பெற்றார்.

அம்மா வழித் தாத்தா-பாட்டியின் வீடு மடத்துத் தெருவில் காவிரிக் கரையின் அருகில் சங்கர மடத்துக்கு எதிரில் இருந்தது. தாத்தா-பாட்டி வீட்டுக் கொல்லையில் வாழை மரங்களும் தென்னை மரங்களும் இரு புறமும் வரவேற்பு சொல்லி நிற்கும். அடுக்கு நந்தியாவட்டை, வெண்மை நிறச் சங்கு, நீல நிறச் சங்கு, தும்பை, மஞ்சள் டிஸம்பர் எனப் பூச்செடிகளும் நிறைந்திருக்கும். பாட்டி வீட்டு வாசலில் நாகம்மாள் என்பவர் பூ வியாபாரம் செய்து கொண்டிருப்பார். அவர் பூத்தொடுப்பதை நான் சிறு வயதிலிருந்தே கவனித்து வந்ததால் எனக்கு நன்கு பூத்தொடுக்க வரும். பாட்டி வீட்டில் கூடை கூடையாகப் பூக்கும் மஞ்சள் டிஸம்பர்ப் பூக்களை நானே பறித்துச் சரங்களாக நெருக்கித் தொடுத்து நானும் வைத்துக் கொண்டு தங்கைகளுக்கும் வைத்துவிடுவேன்.

தாத்தா-பாட்டி வீட்டு வாழைமரங்களையும் வாழைக்கன்றையும் அவர்களது கொள்ளுப்பேத்தி மற்றும் கொள்ளுப்பேரனின் வீட்டுத் தோட்டங்கள் சித்தரிக்கின்றன!











பாட்டி வீட்டு வாசலுக்கு நேர் எதிரில் ஒரு பெரிய அரசமரம் இருக்கும். அரசமரத்தின் ஒவ்வொரு பகுதியிலும் கடவுள் வாசம் செய்வதால் காலை எழுந்தவுடன் அந்த மரத்தைப் பார்ப்பது நன்மை தரும் எனப் பாட்டி கூறுவார். மடத்துத் தெருவின் அரசமரத்தைச் சித்தரிக்க இப்போது எங்கள் வீட்டின் அருகிலுள்ள அரசமரம் உதவுகிறது!



வேணுகோபாலய்யர் என்று அழைக்கப்பட்ட தாத்தாவுக்கும் சுப்பலக்ஷ்மி என்றழைக்கப்பட்ட இரமணிப் பாட்டிக்கும் அப்போதைய பிரிக்கப்படாத தஞ்சாவூர் மாவட்டத்தின் பெருமாளகரமும் செதலப்பதியும் முறையே பூர்வீக ஊர்களாகும். 'பாகி' என்று செல்லமாக அழைக்கப்பட்ட எங்கள் அம்மா அவர்களது ஒரே மகள். தாத்தா கும்பகோணத்திலிருந்த ஒரு மிராசுதாரரின் பிராஞ்சேரி என்ற கிராமத்துப் பண்ணையில் (Estate) அவரது ஏஜண்டாக (Agent) வேலை பார்த்து வந்தார். இப்போதைய மேனேஜர் என்னும் பதவி அன்று ஏஜண்ட் என்று அழைக்கப்பட்டது. அக்காலத்தில் வங்கிக் கிளைகளின் நிர்வாகிகளும் ஏஜண்ட் என்றே அழைக்கப்பட்டனர். தாத்தாவுக்கு மாட்டு வண்டி ஓட்டத் தெரியும். அறுவடைக்கு முன்னால் விளைந்து நிற்கும் பயிர்களிலிருந்து எவ்வளவு கலம் நெல் அறுவடையாகும் என்று மதிப்பிடும் 'புள்ளி பார்த்தல்' எனக் கூறப்படுவதில் தாத்தா

வல்லுநர் என்று பெயரெடுத்தவர். தாத்தா-பாட்டி கிராமத்தில் இருந்த போது பசுமாடு வைத்துப் பராமரித்ததாகவும் பாட்டி பதவிசாக பசுமாட்டிடம் உட்கார்ந்து கொண்டு பால் கறப்பார் என்றும் அம்மா சொல்லியிருக்கிறார்.



தாத்தா-பாட்டி வீடும் எங்கள் வீடும் அடுத்தடுத்த தெருக்களிலிருந்ததால் அவர்கள் வாரம் இரு முறைகளாவது எங்களைப் பார்க்க வருவார்கள். அவர்கள் எங்கள் மீது காட்டிய தன்னலமற்ற பாசத்திலும் அம்மாவுக்கு அடிக்கடி உடல்நலம் குன்றிய போதெல்லாம் தங்களுடைய தள்ளாத வயதிலும் எங்களுக்கு உதவ ஓடோடி வந்து தங்கள் உடலுழைப்பைக் கொட்டியதிலும் எங்களுக்கு இன்னொரு அப்பா-அம்மாவாகவே இருந்தார்கள்.

தாத்தா கிராமத்திலிருந்து தாழம்பூ கொண்டுவருவார். பாட்டியும் அம்மாவும் அதைச் சீராக வங்கி வடிவத்தில் கத்தரித்து எனக்கும் என் தங்கைகளுக்கும் குஞ்சலம் வைத்து நீளமாகப் பின்னி அதில் தைத்துவிடுவார்கள். தாத்தா கொண்டுவரும் மருதாணியைப் பாட்டி அரைத்துத்

தர அம்மா எங்கள் கைகளில் இட்டுவிடுவார். கிராமத்திலிருந்து குடலைகளில் பன நுங்குகள் வரும். அம்மா குடலைகளின் பனை ஓலைகளை வைத்து பூஜை நேரங்களில் உட்கார்ந்து கொள்ளத்தக்கச் சதுரத் தடுக்குகளாக அழகாக முடைந்துவைப்பார்.

எங்களுடைய அம்மாவின் உறவினர்களை எங்கள் அம்மா அழைக்கும் உறவு முறைகளைச் சொல்லியே நாங்களும் அழைத்தோம். பாட்டியின் ஊரான செதலப்பதிக்கும் தாத்தாவின் ஊரான பெருமாளகரத்துக்கும் தாத்தா-பாட்டி என்னையும் வஸந்தாவையும் ஓரிரு முறைகள் திருமண விழாக்களுக்கு அழைத்துச் சென்றிருந்தார்கள்.

செதலப்பதியிலிருந்த பாட்டியின் அண்ணாவான S.M.இராஜகோபாலய்யர் என்ற பெயருடைய கோபால மாமா வீட்டிற்குச் சென்றபோது மாமா குடும்பத்தினர் பாட்டி-தாத்தாவிடம் காட்டிய பாசத்தையும் தாத்தா அவர்களிடம் வைத்திருந்த அக்கறையையும் நன்கு அறியமுடிந்தது. பாட்டிக்குத் தன்னுடைய அண்ணாவைப் பற்றிய தனிப் பெருமையும் அவரிடமும் அவரது குடும்பத்தினரிடமும் மிகுந்த பாசமும் உண்டு.

பெருமாளகரத்தில் தாத்தாவின் தம்பியான கல்யாண சித்தப்பாவின் வீடும் தங்கையான யோக அத்தையின் வீடும் மணியப்பா என அழைக்கப்பட்ட தாத்தாவின் சித்தப்பாவின் வீடும் இருந்தன. இராமச்சந்திர சித்தப்பா என அழைக்கப்பட்ட தாத்தாவின் இன்னொரு தம்பி கொடுமுடி என்னும் ஊரிலிருந்தாலும் விழாக்காலங்களில் அவரையும் பெருமாளகரத்தில் பார்க்கமுடியும். தாத்தா தன் கூடப் பிறந்தவர்களிடமும் மணியப்பா வீட்டிலிருந்த அவரது ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகளிடமும் காட்டிய பாசமும் அக்கறையும் அவர்கள் அனைவரும் அவரை ‘வேணு அண்ணா’ என அழைத்து மிகுந்த அன்புடனும் மரியாதையுடனும் பேசியதும் நினைவில் பெருமையாக நின்றன. தாத்தா-பாட்டியின் திருமணம் அவர்களது சிறு வயதிலேயே நடந்துவிட்டதால் தங்களுடைய திருமணத்திற்குப் பின் பிறந்த தாத்தாவின் தம்பிகளைப் பாட்டி குழந்தைகள் என்று குறிப்பிடுவதுண்டு. ‘குழந்தைகள் நன்றாக இருக்க வேண்டும்’ எனப் பாட்டி எல்லோரையும் மனமார வாழ்த்துவார்.

கட்டுரையின் இப்பகுதியை எழுதிக் கொண்டிருந்தபோது என் பிறந்த வீட்டின் குடும்ப மரத்தை வரைந்து பார்க்கத் தோன்றியது. மரத்தில் சில முன்னோர் பகுதிகளை வரைய நான் அம்மாவிடம் விவரங்கள் கேட்டபோது அவருக்கு மிகவும் மகிழ்ச்சி. நான் கேட்ட விவரங்களை நினைவிற்குக் கொண்டுவந்து பதிலளித்ததோடு மட்டுமல்லாமல் தானாகவே

சில கிளைகளைச் சேர்க்கவும் சொல்லி உற்சாகமாகப் பங்குகொண்டு என்னை வாழ்த்தவும் செய்தார். பாட்டியின் அண்ணா பிள்ளையான சிவராமனும் தாத்தாவின் தம்பியான ராமச்சந்திரத் தாத்தாவும் சில பெயர்களைக் கூறி உதவினர். குடும்ப மரத்தை எளிதான புரிதலுக்காக ஒரு அட்டவணை வடிவத்தில் வரைந்தேன்.

எட்டு இணைகளான பதினாறு எள்ளுப்பாட்டி-தாத்தாக்களில் எட்டு பெயர்கள்தான் கிடைத்தன. நான்கு இணைகளான எட்டு கொள்ளுப்பாட்டி-தாத்தாக்களில் ஏழு பெயர்கள் கிடைத்துவிட்டன. இரு இணைகளான நான்கு பாட்டி-தாத்தாக்களின் உடன் பிறந்தவர்களையும் அவர்களது ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகளையும் கூடத் தெரிந்த அளவுக்கு அட்டவணை காட்டியது. அத்தை பிள்ளையான கணேச அத்தான் குடும்பமரம் தனது குழந்தைப் பருவத்து நினைவுகளைக் கொண்டுவந்ததாகக் கூறி மகிழ்ந்தார். தங்கைகள் அட்டவணை ஒரே நோட்டத்தில் பல உறவினர்களைத் தெளிவாகக் காட்டுவதாகக் கூறிப் பாராட்டினர். மிகவும் முயற்சியுடன் வரையப்பட்டதாகத் தெரிந்த அதைப் பத்திரமாகப் பாதுகாப்பதாகக் குழந்தைகள் உறுதியளித்தனர்.

## 5.3 குடந்தை நகரின் கோயில் திருவிழாக்கள்

கும்பகோணத்தைக் குடந்தை என்றும் அழைப்பது வழக்கம். ‘தேரோடும் வீதியாம் திருவல்லிக்கேணியில் ஈராறு மாதங்களும் இன்பமான திருவிழா’ என்ற பக்திப் பாடலில் வருவது போல பழமையான திருக்கோயில்கள் நிறைந்த குடந்தையிலும் பன்னிரண்டு மாதங்களிலும் கோயிலில் திருவிழாக்கள் இருக்கும்.



ஆதி கும்பேஸ்வரர் கோயிலின் ஐந்து தேர்கள்

(நன்றி : http://adhikumbeswarar.org/

கோயிலின் அதிகாரபூர்வ இணையதளம்)

பெரும்பாலான விழாக்களுக்கு வீதியில் சுவாமி புறப்பாடும் நிகழும். அவற்றில் அக்ஷய திருதியை, விஜயதசமி மற்றும் திருவாதிரை அன்று நடைபெறும் புறப்பாடுகள் குறிப்பிட்ட இடங்களுக்குப் பல்லக்குகளில் வந்து சேர்ந்து ஒன்று சேரக் காட்சியளிப்பதால் மிகப் பிரசித்தி வாய்ந்தவை.

சித்திரை மாதத்தில் அக்ஷய திருதியை விழாவின் போது நடைபெறும் கருட சேவைக்காக பெரிய கடைத்தெருவில் தென்னங்கீற்றுகளால் மிகப் பெரிய பந்தல் குளுகுளுவென்று அமைத்திருப்பார்கள். அன்றைய தினம் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் (காலை சுமார் பத்து மணி அளவில்) நன்கு அலங்கரிக்கப்பட்ட மிகப் பெரிய கருட வாஹனங்களில் வைணவக் கோயில்களின் பெருமாள் உற்சவ மூர்த்திகள் கண்ணைக் கவரும் மலர் மாலைகளுடனும் ரஸனையுடன் அணிவிக்கப்பட்ட நகையலங்காரத்துடனும் அந்தப் பந்தலில் எழுந்தருளிக் காட்சி தருவார்கள். பன்னிரண்டு கருட வாஹன தரிசனத்தை ஒரே இடத்தில் காணமுடியும். கருட சேவை தரிசனத்தைப் பாட்டி தவறவே விடமாட்டார். குழந்தைகளாகிய நாங்களும் தவறாமல் அழைத்துச் செல்லப் படுவோம். கருட சேவையைக் காண உள்ளூரிலிருந்தும் வெளியூரிலிருந்தும் பெருந் திரளாக மக்கள் வருவார்கள். அந்த மாதத்தின் இன்னொரு

முக்கிய நாளான சித்ரா பௌர்ணமி அன்று எல்லாக் கோயில்களிலும் அம்பாளுக்குச் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். சித்திரை மாதத்தில் திருவையாற்றிலிருந்து கிளம்பி அவ்வூர் உட்பட ஏழு ஊர்களுக்கு வருகை தரும் சப்தஸ்தான பல்லக்கு கும்பகோணத்தின் வழியாகச் செல்வதால் எங்களுக்கும் அந்த அழகிய பல்லக்குகளைப் பார்க்கும் வாய்ப்புக் கிட்டும். சித்திரை (அல்லது பங்குனி) மாதத்தில் வரும் ஸ்ரீராமநவமியை ஒட்டிக் கோயிலில் சிறப்பு வழிபாடுகளும் இராமாயண நவாஹம் எனப்படும் ஒன்பது நாட்களுக்கான இராமாயண உபந்யாஸமும் நடைபெறும்.

வைகாசி மாதத்தில் கும்பேஸ்வரர் கோயிலில் ஈஸ்வரனுக்கும் மங்களாம்பிகைக்கும் திருமண விழா நடக்கும். எங்களது பெற்றோரின் திருமணம் கோயிலின் திருமண விழா நாள் அன்று நடந்ததாக எனது அப்பா வழிப் பாட்டி கூறுவார் என்பதை அம்மா மூலமாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்.



ஆதி கும்பேஸ்வரர் கோயிலின் கோபுரம்

(நன்றி : http://adhikumbeswarar.org/

கோயிலின் அதிகாரபூர்வ இணையதளம்)

வைகாசி மாதப் பௌர்ணமியில் வரும் வைகாசி விசாகம் முருகனின் அவதார தினமாக வணங்கப் படுவதால் அன்று முருகன் சந்நிதிகளில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறும்.

ஆனி மாதத்தில் சிவாலயங்களில் ஆனித் திருமஞ்சனம் நடைபெறும். வீட்டுப் பெரியவர்கள் அருகிலிருக்கும் காளஹஸ்தீஸ்வரர் கோயிலுக்குச் சென்று அபிஷேக தரிசனம் செய்து வருவார்கள்.

ஆடி வெள்ளிக் கிழமைகளில் கோயில்களில் அம்பாள் தரிசனத்திற்காகவும் மாவிளக்கு போடுவதற்காகவும் பெண்கள் அதிக அளவில் வருகை தருவார்கள்.

ஆவணி ஞாயிறுகளில் அருகிலிருக்கும் படைவெட்டி மாரியம்மன் கோயிலில் உற்சவங்களும் அம்மன் வீதி உலாவும் நடைபெறும். பிள்ளையார் சதுர்த்தி எப்போதும் ஆவணி மாதத்தில் வரும். (மிக அரிதாகப் புரட்டாசி மாதத்தில் வருவதுண்டு.) அருகிலிருக்கும் பகவத் விநாயகர் கோயில் உட்பட பல கோயில்களிலிருந்து விநாயகரது புறப்பாடு செய்யப்பட்டு வீதிகளில் பக்தர்கள் பின்தொடர ஊர்வலங்கள் நடக்கும்..

புரட்டாசி மாதத்தில் நவராத்திரியின் போது கோயில்களில் கொலு வைக்கப்பட்டுச் சிறப்பு வழிபாடுகள் நடக்கும். விஜய தசமி அன்று மணிக்கூண்டு அருகில் அம்பு போடும் வைபவத்திற்காக மாலை சுமார் நான்கு மணியிலிருந்து எல்லாக் கோயில்களிலிருந்தும் ஸரஸ்வதி அம்மன் எழுந்தருளியிருப்பார்கள். சிவன் கோயிலின் அம்பாளும் வைணவக் கோயிலின் தாயாரும் வண்ண ஜரிகைக் கரையிட்ட வெண்பட்டுச் சேலை, ரோஜா, முல்லை, மல்லிகை முதலிய நறுமண மலர்களால் நேர்த்தியாகக் கட்டப்பட்ட மாலைகள், முத்தும் இரத்தினமும் இழைத்த ஆபரணங்கள், புத்தகம் மற்றும் வீணை ஆகியவற்றுடன் ஸரஸ்வதி அலங்காரத்தில் கைகளில் வில்லும் அம்பும் ஏந்தி அன்ன வாஹனத்துடன் பல்லக்குகளில் எழுந்தருளியிருப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். அம்பு போட நேரமாகுமாதலால் நாங்கள் ஸரஸ்வதி அம்மனின் தரிசனத்துடன் வீடு திரும்பிவிடுவோம்.

ஐப்பசி மாதப் பௌர்ணமி அன்று சிவாலயங்களில் நடைபெறும் அன்னாபிஷேகத்தைப் பார்க்க பக்தர்கள் அலை மோதுவார்கள்.

கார்த்திகை மாதத்துப் பௌர்ணமியில் வரும் கார்த்திகை தீபத் திருநாளை ஒட்டி நடக்கும் சொக்கப்பானை கொளுத்தும் விழாவிற்கு அப்பா அல்லது தாத்தாவுடன் நாங்கள் செல்வோம்.

மார்கழி மாதம் முழுவதும் அதிகாலை நான்கு மணியிலிருந்தே திருப்பாவை, திருவெம்பாவை உட்பட பல பக்திப் பாடல்கள் அருகிலுள்ள கோயில்களிலிருந்து ஒலிபெருக்கி வழியாக மிதந்து வரும். அந்த மாதத்துப் பௌர்ணமியை ஒட்டி வரும் திருவாதிரை எனப்படும் ஆருத்ரா தரிசனம் கும்பகோணத்தில் விமரிசையாக நடக்கும். நாகேஸ்வரன் கோயில் சந்நிதித் தெருவில் கும்பகோணத்தின் எல்லாச் சிவன் கோயில்களிலிருந்தும் இடது பாதம் தூக்கி ஆடும் நடராஜரும் பக்கத்தில் கையில் தாளக் கருவியுடன் சிவகாமி அம்மனும் கண்கொள்ளா மலர் அலங்காரங்களுடன் பல்லக்குகளில் அதிகாலையிலிருந்து எழுந்தருளியிருப்பார்கள். அகலமான அந்த வீதியின் இரு புறமும்

வீட்டு வாசல்களில் பெரிய பெரிய வண்ணக் கோலங்கள் பளிச்சிட நாதஸ்வரங்களின் மல்லாரி இசையுடன் நடனம் போல அசையும் சிவகாமி-நடராஜ வீதி உலா தரிசனங்களை நாங்கள் வருடந் தவறாமல் கண்டு களிப்போம்.

நாகேஸ்வர ஸ்வாமி கோயிலின் சந்நிதித் தெரு கோலங்களை சமீப காலங்களில் தங்கை வஸந்தா அவள் வீட்டு வாசலில் தீட்டிய பளிச்சிடும் வண்ணக் கோலங்கள் உருவகப்படுத்துகின்றன!











மார்கழி மாதத்தில் வரும் வைகுண்ட ஏகாதசிக்குப் பத்து நாட்கள் முன்னும் பத்து நாட்கள் பின்னும் வைணவ ஆலயங்களில் பகல்பத்து மற்றும் இராப்பத்து என அழைக்கப்படும் நாலாயிரத் திவ்யப் பிரபந்தங்கள் ஓதும் அத்யயன உற்சவங்கள் நடைபெறும். வைகுண்ட ஏகாதசி அன்று ஒவ்வொரு வருடமும் தாத்தா எங்களை சாரங்கபாணி கோயில், ராமஸ்வாமி கோயில் மற்றும் சக்ரபாணி கோயில் என மூன்று கோயில்களுக்கும் அழைத்துச் செல்வார்.



சாரங்கபாணி கோயிலின் கோபுரங்கள்

(நன்றி : http:sarangapanitemple.org/

கோயிலின் அதிகாரபூர்வ இணையதளம்)

தை மாதத்தில் தைப் பொங்கல், தை வெள்ளிக் கிழமைகள் மற்றும் தைப்பூசம் நாட்களில் கோயில்கள் திருவிழாக் கோலம் பூண்டிருக்கும்.

மாசி மாதப் பௌர்ணமி அன்று வருடா வருடம் மாசி மகம் நடக்கும். மாசி மகத்தை ஒட்டிக் கோயில்களில் கொடியேற்றப்பட்டு உற்சவங்கள் நடக்கும். அச்சமயத்தில் நகராட்சியால் பொருட்காட்சி (exhibition) நடத்தப்படும். அநேகமாக ஒரு மாதத்திற்குக் குறையாமல் நடக்கும் அந்த பொருட்காட்சியில் தினசரி மாலை வேளைகளில் நாடகங்கள் நடைபெறும். பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடக்கும் மஹாமகம் கும்பகோணத்திற்கே உரிய தனிப் பெரும் விழாவாகும். அன்று மஹாமகக் குளத்தில் நீராடப் பல இலட்சம் மக்கள் வருகை தருவர்.



மாசிமகத் திருவிழா

(நன்றி : http://adhikumbeswarar.org/

ஆதி கும்பேஸ்வரர் கோயிலின் அதிகாரபூர்வ இணையதளம்)

பங்குனி மாதத்தில் சிவன் கோயிலில் முருகன் சந்நிதிகளில் நடக்கும் பங்குனி உத்திரத் திருவிழாவில் முருகன்-தெய்வானை திருமண வைபவம் நடைபெறும். பங்குனி (அல்லது சித்திரை) மாதத்தில் வரும் ஸ்ரீராமநவமியை ஒட்டிக் கோயிலில் சிறப்பு வழிபாடுகளும் இராமாயண நவாஹமும் நடைபெறும்.

இவ்வாறு எங்களது குழந்தைப் பருவ வாழ்க்கைக்குக் குடந்தை நகரின் திருவிழாக்களும் வளம் சேர்த்தன.

## 5.4 கலாசாரத் தொட்டில் குடந்தையில் மாணவப் பருவம்

அந்தக் காலத்தில் பள்ளிக் குழந்தைகளுக்கு இப்போது இருப்பது போல் இதர வகுப்புக்களின் நெருக்கடி கிடையாது. நானும் தங்கைகளும் சிறுமிகளாக இருந்த போது தெருவின் மற்ற குழந்தைகளுடன் வீட்டு வாசலில் ஓடிப் பிடித்து விளையாடியிருக்கிறோம். பிறகு வீட்டிற்குள்

விளையாடும் பல்லாங்குழி போன்ற ஆட்டங்களே எங்களுக்குப் பொழுதுபோக்க உதவின. அப்பா எங்களை மாலை வேலைகளில் சில நாட்கள் காந்தி பூங்காவிற்கு அழைத்துச் செல்வார். காளஹஸ்தீஸ்வரர் கோயில் அருகில் நடக்கும் பொம்மலாட்ட நிகழ்ச்சிகளுக்கும் வருடத்திற்கு இரண்டு அல்லது மூன்று எனக் கணக்கு வைத்துத் திரைப்படங்களுக்கும் அழைத்துச் செல்வார். சங்கர மடத்தில் இலவசமாக நடந்த ஸம்ஸ்க்ருத வகுப்புக்கு அப்பா அனுப்ப முயன்ற போதும் முறைப்படி சங்கீதம் கற்றிருந்த அம்மா பாட்டு சொல்லித் தருவதாகக் கூப்பிட்ட போதும் நான் ஆர்வம் காட்டவில்லை. பின்னாளில் 'ஸங்கீதமும் ஸம்ஸ்க்ருதமும் ஒருவருக்குத் தெரிந்தால் அவரது மகிழ்ச்சிக்குக் குறைவிருக்காது' என்ற இசை ஞானி இளையராஜா அவர்களின் கருத்தைக் கேட்க நேர்ந்தபோதுதான் எனக்கு அவற்றின் அருமை தெரிந்தது.

நான் சங்கீதம் கற்றுக் கொள்ளவில்லையே தவிர எனக்கு அவற்றைக் கேட்கும் வாய்ப்புக்கள் நிறையக் கிடைத்தன. அம்மா பாடுவதில் 'பாவயாமி ரகுராமம்', 'ஏன் பள்ளி கொண்டீரையா' முதலிய ஏராளமான பாடல்கள் எனக்குப் பிடிக்கும். நாள் கிழமைகளில் அம்மா பாடினால் அப்பாவும் சில சமயங்களில் சேர்ந்து பாடுவார். 'ராதா ஸமேதா கிருஷ்ணா'வும் 'வாசுதேவ யனி'யும் அப்பாவுக்கு மிகவும் பிடித்த பாடல்கள். என் அப்பா கேள்வி ஞானத்தாலேயே தன்னுடைய சங்கீதத் திறமையை வளர்த்துக்கொண்டிருந்தார். பெரும்பாலான நேரங்களில் பாடகர் ராக ஆலாபனை செய்யத் துவங்கிய உடனே அப்பா இராகத்தை அடையாளம் கண்டுகொள்வார். பள்ளிகளில் நடக்கும் பாட்டுப் போட்டிகளுக்கு அவர் நீதிபதியாக இருந்திருக்கிறார். தாத்தா குழந்தைகளைத் தூளி ஆட்டித் தூங்கவைக்கும்போது நிறையப் பாட்டுக்கள் பாடுவார். 'மனவ்யாளகிஞ்சரா', 'அடடா ராவணா கேளடா' போன்ற பாடல்களைத் தாத்தா தன் கணீர்க் குரலில் பாடுவது இன்னும் காதுகளில் ஒலிக்கிறது. நவராத்திரியின்போது பாட்டி தன் மெல்லிய குரலில் பாடும் 'அன்ன வாஹன தேவி', 'என்ன அழகைப் பார் செல்வ ஸரஸ்வதிக்கு' முதலிய பாடல்களும் நினைவில் மென்மையாகத் தங்கிவிட்டன.

அம்மா-அப்பாவின் இசை ஆர்வத்தால் வானொலியில் நடக்கும் இசை அரங்க நிகழ்ச்சிகள், இசை விழா மற்றும் தியாகப்பிரம்ம ஆராதனை நாட்களில் ஒலிபரப்பப்படும் பாட்டுக்

கச்சேரிகள் முதலியவற்றைக் கேட்கும் வாய்ப்புக்கள் நிறைய கிடைத்தன. உப்பிலியப்பன் கோயிலின் திருவிழாக்களில் நடைபெறும் பெரிய வித்வான்களின் கச்சேரிகளுக்குத் தாத்தா அழைத்துச்செல்வார்.

'எதையும் புரிந்துகொண்டு செயலாற்ற வேண்டும்' என்ற என்னுடைய இயல்புக்கேற்ப ஆரம்பத்தில் எனக்குத் தமிழ்ப் பாட்டுக்களே பிடித்திருந்தன. மற்ற மொழிக் கீர்த்தனைகளை என்னால் இரசிக்க முடியவில்லை. எனக்குப் பிடித்தத் தமிழ்ப் பாடல்கள் கச்சேரியின் கடைசியில் வந்ததும் அதற்கு வீட்டுப் பெரியவர்களும் அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்காமலிருந்ததும் எனக்கு ஏமாற்றமாக இருந்தன. பிறகு மெள்ள மெள்ள பக்தி மற்றும் இசை ஆகிய அம்சங்களாலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக வார்த்தைகளுக்கு அர்த்தம் புரிந்ததாலும் இதர மொழிக் கீர்த்தனைகளையும் இரசிக்கத் துவங்கினேன்.

அம்மாவுக்கும் எனக்கும் எங்களுடைய செயல் வேகங்களிலிருந்த வேறுபாடுகள் எங்களது ஸங்கீத இரசனையிலுமிருந்தன. இராகங்களும் பாடல்களும் மிகவும் விறுவிறுப்பாக இருந்தாலே அம்மாவுக்குப் பிடிக்கும். எனக்கு அவை மிதமான வேகத்திலிருந்தாலும் பிடிக்கும். தேவாரப் பண்கள் என்றென்றும் எனக்கு மிகப் பிடித்தமானவை. அம்மா 'ஈசனே! சிவகாமி நேசனே!' என மனமுருகிப்பாடும் நடராஜப் பத்தும் 'விளக்கே! திருவிளக்கே!' என குத்துவிளக்கு பூஜை செய்யும்போது சொல்லும் பாடலும் தமிழின் காரணமாக எனக்குச் சிறப்பாகப் பிடிக்கும்.

காலப் போக்கில் நானும் அடாணா, காம்போதி, பூபாளம், நீலாம்பரி, கல்யாணி, தன்யாசி, பைரவி, ஆனந்த பைரவி, தோடி, சிம்மேந்திர மத்யமம் எனச் சில இராகங்களை அடையாளம் கண்டுகொள்ளும் திறனைப் பெற்றேன். நான் கண்டுகொண்டது சரியா என்று அம்மாவிடம் கேட்டுத் தெரிந்துகொள்வேன். பெரும்பாலான நேரங்களில் அம்மா நான் அப்பாவைப் போலவே விரைவாக இராகத்தைச் சரியாக அடையாளம் கண்டுகொண்டதற்காகப் பாராட்டுவார். சில சமயங்களில், 'இது அந்த இராகம் இல்லை, ஆனால் அதன் ஜன்ய ராகம்' அல்லது 'அதோடு தொடர்புடைய இராகம்' என்று சொல்வார்.

ஹிந்து ஆங்கில நாளிதழ் 2014ஆம் வருடத்தில் பிரசுரித்திருந்த ஒரு செய்தியில் இஸ்ரோவின் (ISRO) தலைவராக இருந்த டாக்டர் கே. ராதாகிருஷ்ணன் அவர்கள் தனக்குப் பிடித்தப் பல இராகங்களில் பைரவி, அடாணா, காம்போதி, தோடி, கல்யாணி முதலியன

தன்னை அதிகம் கவர்ந்திழுப்பதாகவும் தான் சமீபத்தில் பாட இருந்த ஒரு இசை நிகழ்ச்சியில் சிம்மேந்திர மத்யம இராகத்தில் ஒரு கீர்த்தனை பாடப்போவதாகவும் கூறியிருந்ததைப் படித்தபோது எனக்குப் பிடித்த அந்த இராகங்கள் தங்களது தனித்துவம் வாய்ந்த சக்தியால் பலரையும் ஈர்க்கின்றன எனத் தோன்றியது. அந்த அளவு நான் பாட்டில் ஈடுபட்டு இரசித்தாலும் பாட்டு, சுருதி மற்றும் தாளம் என்ற கூட்டணி எனக்கு எட்ட இருந்து வியக்கும் பிரமிப்பாகவே நின்று போனது.

கலாசாரத் தொட்டில் என ஒரு காலத்தில் கருதப்பட்ட கும்பகோணத்தில் நிறைய பஜனைகளும் உபந்யாஸங்களும் கதாகாலட்சேபங்களும் நடக்கும்.

வீடுகளில் பண்டிகைகளை விமரிசையாகக் கொண்டாடுவார்கள். பண்டிகைகளில் சில குறிப்பாக ஞாபகத்துக்கு வருகின்றன. தமிழ் வருடப்பிறப்பு கடவுள் வழிபாடுடனும் அறுசுவை விருந்துடனும் பக்தியுடன் கொண்டாடப்படும். சித்திரா பௌர்ணமி அன்று சித்திரகுப்தன் நினைவுகூரப்படுவார். அவர் எல்லோருடைய கணக்கு வழக்கையும் ஓலைச்சுவடியில் எழுதிக் கொண்டிருப்பதால் எப்பொழுதும் உண்மையாக இருக்க வேண்டும் என்று பாட்டி கூறுவார்.

ஆடி மாதம் பண்டிகைகள் நிறைந்த மாதம். அது மட்டுமல்ல, ஆடிப் பண்டிகை எனப்படும் ஆடி முதல் தேதியிலிருந்து தைப்பொங்கல் வரையிலான ஆறு மாதங்களில்தான் இந்துக்களின் பெரும்பாலான பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன. ஆடி மாதத்தின் பதினெட்டாம் நாளில் வரும் ஆடிப்பெருக்கு விழா ‘பதினெட்டாம் பேறு’ என்றும் அழைக்கப்பெறும். அன்று மாலை நான்கு மணிக்கு எங்களைப் பாட்டியும் அம்மாவும் காவேரி ஆற்றங்கரைக்கு உணவு உண்ண அழைத்துச் செல்வார்கள். குழந்தைகள் சப்பரங்கள் இழுத்துச் செல்வது வழக்கம். வழியில் சில சப்பரங்கள் சிறப்பு அம்சங்களுடன் எல்லோருடைய கவனத்தையும் கவரும். ஆற்றை அடைந்தவுடன் பெரியவர்கள் தாம்பூலம் சமர்ப்பித்துக் காவேரித் தாயை வழிபடுவார்கள். பிறகு எல்லோரும் ஆற்றங்கரையில் அமர்ந்து சிலுசிலுப்புக் காற்றை அனுபவித்த படி வீட்டிலிருந்து கொண்டு சென்றிருந்த சித்திரான்னம் முதலிய உணவுகளை உண்போம்.

ஆடி அல்லது ஆவணி மாதத்தில் மரபை ஒட்டிக் கொண்டாடப்படும் வரலக்ஷ்மி விரத பூஜை எங்கள் வீட்டு வழக்கத்தில் இல்லாததால் நாங்கள் தாத்தா-பாட்டி வீட்டுப் பூஜைக்குச் சென்று பங்குகொள்வோம். தாத்தாவின் யஜூர்வேத ஆவணி அவிட்டத்திலிருந்து எட்டாவது நாளில் கிருஷ்ண ஜயந்தி வரும். அன்று நானும் தங்கைகளும் போட்டி போட்டுக்கொண்டு

உப்புச் சீடையும் வெல்லச் சீடையும் உருட்டிப் போடுவோம். அப்பாவின் சாம வேத ஆவணி அவிட்டமும் பிள்ளையார் சதுர்த்தியும் பெரும்பாலும் ஒரே நாளில் வரும்.

அப்பா-அம்மாவின் திட்டவட்டமான நெறிமுறைகளின்படி எங்களுக்கு வருடத்திற்கு நவராத்திரிக்கு ஒன்றும் தீபாவளிக்கு ஒன்றுமென இரண்டு செட் (set) உடைகள் வாங்கப்படும். தாத்தா-பாட்டி தீபாவளிக்கு எங்கள் எல்லோருக்கும் ஒரு செட் உடை வாங்குவார்கள். ஆக இந்த மூன்று செட் உடைகளுக்கான துணிகளும் ஆவணி மாதத்திலேயே வாங்கப்பட்டு தையற்காரர் சற்று ஒய்வாக இருக்கும்போதே தைத்து வாங்கப்படும். அந்தக் காலத்தில் பெரும்பாலும் நடுத்தர வீட்டுக் குடும்பங்களில் பிறந்த நாள் கொண்டாடும் வழக்கமில்லை.

நவராத்திரிக்கு அம்மா ஐந்து படிகளில் கொலு வைப்பார். விஜயதசமி உட்பட பத்து நாட்களுக்கும் அம்மா அக்கம்பக்கத்துப் பெண்மணிகளை அழைத்து வெற்றிலை-பாக்கும் மஞ்சள்-குங்குமமும் சுண்டலும் கொடுப்பார். நவராத்திரி வெள்ளிக் கிழமைகளில் அம்மா செய்யும் புட்டு மிகவும் நேர்த்தியாக அமைந்து அனைவரின் பாராட்டையும் பெறும். விமரிசையாகக் கொலு வைக்கப்பட்டிருக்கும் வீடுகளுக்கு நாங்கள் அழைத்துச்செல்லப்படுவோம்.

ஐப்பசி மாதத்தில் காவிரியில் நீராடுவது துலா ஸ்நானம் என விசேஷமாகப் போற்றப்படுவதால் அந்த மாதத்தில் தாத்தா, பாட்டி மற்றும் அப்பா முடிந்த வரை காவிரியில் நீராடிவிட்டு வருவார்கள். தீபாவளிக்கு அம்மா ரவாலாடு, மைசூர்பாகு, ஒமப்பொடி, முள்ளுத் தேன்குழல் முதலியவற்றை நாலைந்து தினங்களாகச் செய்வார். பண்டிகையின் முன் தினத்தன்று மாலையில் பஜ்ஜி-பக்கோடாவும் தீபாவளி மருந்தும் செய்வார். தீபாவளி அன்று காலை நான்கு மணிக்கு வெந்நீர் தயார் செய்துவிடுவார். ஆறு மணிக்குள் அனைவரும் குளித்துப் புத்தாடை உடுத்திக்கொள்வோம். காசைக் கரியாக்கக் கூடாது என்ற கொள்கையில் குறைந்த அளவு வெடிகளே வாங்கப்படும்.

கார்த்திகை தீபம், பொரி மற்றும் அடை வகையறாக்களின் நைவேத்தியத்துடனும் தீப வரிசைகளுடனும், விமரிசையாகக் கொண்டாடப்படும்.

மார்கழி மாதத்தில் தினமும் அதிகாலையில் வீதிகளில் சில பக்தர்கள் பஜனை செய்துகொண்டு வருவார்கள். அம்மா அதிகாலையிலேயே எழுந்து வாசலில் புள்ளிக் கோலங்கள் இடுவார். சில நாட்களில் அம்மா இடும் பெரிய நட்சத்திர வடிவ புள்ளிக்

கோலமும் எதிர் வீட்டு வாசலில் இடப்படும் பெரிய புள்ளிக் கோலமும் நடுச் சாலையில் சந்தித்துக்கொள்ளும். அம்மாவின் புள்ளிக் கோலங்களை ஒரு நோட்டுப்புத்தகத்தில் வரைந்து பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன். திருவாதிரை நோன்பு அன்று களியும் கூட்டும் சாப்பிட்ட பிறகு நடராஜர்-சிவகாமி தரிசனத்துக்குக் கிளம்புவோம். வீதி பஜனைகள் மாத முடிவில் இராதா கல்யாணத்துடன் நிறைவுறும். ஸ்ரீவாஞ்சியம் இராமச்சந்திர பாகவதரின் பஜனைக் குழு நடத்தும் அபிநய நயம் வாய்ந்த இராதா கல்யாணத்துக்குக் கூட்டம் திரண்டு வரும்.



தங்கை வஸந்தாவின் கைவண்ணத்தில் காவியிட்ட இழை கோலம்

தைப் பொங்கலுக்கு ஒரு வாரம் முன்னதாகவே புது மண் பானைகளும் மாடுகளுக்கு அணிவிக்கப்படும் வண்ண மயமான நெட்டி மாலைகளும் மடத்துத் தெருவில் விற்பனைக்காகக் குவிந்திருக்கும். தஞ்சாவூர்ப் பகுதிகளில் செய்யப்படும் நெட்டி மாலை மற்றும் வேலைப்பாடுகளுக்கு 2020ஆம் வருடத்தின் மே மாதத்தில் புவிசார் குறியீடு (geographical indication tag) தரப்பட்டுள்ளது என்னும் பெருமையான செய்தி இங்கு குறிக்கத் தக்கது. புதுச்செந்நெல், கரும்பு, காய்கள், பழங்கள் முதலியன தரும் உற்சாகத்தில் பொங்கல்

பண்டிகை மணக்கும். மாட்டுப் பொங்கலன்று சிலர் அலங்கரிக்கப்பட்ட மாடுகளை வீதிகளில் ஊர்வலமாக அழைத்துவருவர். மாசியும் பங்குனியும் கூடும்போது செய்யப்படும் காரடையான் நோன்பிற்காக அம்மா செய்த வெல்லடை-உப்படைகளை உருகாத வெண்ணெயோடு உண்ட சுவையுடனும் இராம நவமிக்காக அம்மா நைவேத்தியம் செய்த பானகம்-நீர்மோரை அருந்திய சுவையுடனும் பண்டிகை நினைவுகள் நிறைவு பெறுகின்றன!

நகர உயர் நிலைப்பள்ளி, அப்பள்ளியின் பந்தடி மேடை என அழைக்கப்பட்ட விளையாட்டு மைதானம், மஹாமஹக் குளக்கரை முதலிய இடங்களில் மஞ்சக்குடி ராஜகோபால சாஸ்திரிகள், சேங்காலிபுரம் அனந்தராம தீட்சிதர், வடகுடி நாராயண தீட்சிதர், கிருபானந்த வாரியார் சுவாமிகள், சிவானந்த விஜயலக்ஷ்மி முதலிய புகழ் பெற்ற உபந்யாஸகர்கள் நடத்திய இராமாயணம், மஹாபாரதம், பாகவதம், ஸ்காந்தம், கந்தபுராணம் முதலிய உபந்யாஸங்களும் அண்ணாசாமி பாகவதர் மற்றும் கமலா மூர்த்தி ஆகிய புகழ் பெற்ற கதாகாலட்சேபக்காரர்கள் நடத்திய கதாகாலட்சேபங்களும் ஏராளமானவை. இந்த நிகழ்ச்சிகளுக்குத் தாத்தா தவறாமல் செல்வார். எனக்கு நினைவு தெரிவதற்கு முன்பிலிருந்தே தாத்தா என்னையும் இந்நிகழ்ச்சிகளுக்கு அழைத்துச் செல்வதைப் பழக்கமாக வைத்திருந்தார். எனக்கு நினைவு தெரிந்த பின் பள்ளி இறுதிப் படிப்பு முடியும் வரை நானாகவே இந்நிகழ்ச்சிகளுக்குத் தாத்தாவுடன் விரும்பிச் சென்றேன். அவ்வாறு சென்றதில் எனக்கு இராமாயணமும் மஹாபாரதமும் மட்டுமல்லாது கஜேந்திர மோட்சம், பிரஹலாத சரித்ரம், துருவ சரித்ரம், கோவர்த்தன கிரி தாரணம், காளிங்க நர்த்தனம், குசேலோபாக்கியானம், திரௌபதி மான ஸம்ரக்ஷணம், ருக்மிணி கல்யாணம், உஷா பரிணயம், மீனாட்சி கல்யாணம், வள்ளி கல்யாணம், விட்டலோபாக்கியானம், அரிச்சந்திரன் கதை என நிறைய உப கதைகளும் தெரிய ஆரம்பித்தன.

கதை சொல்பவர்கள், முதலையின் வாயில் அகப்பட்டுக் கொண்டு ‘ஆதிமூலமே!’ என்று கதறிய கஜேந்திரன் என்ற யானையையும் அதைக் கேட்டுக் கருடன் மேல் பறந்தோடி வந்த நாராயணனையும் கண் முன்னே கொண்டுவருவார்கள். உண்மை பேசுவதை விரதமாகக் கொண்ட அரிச்சந்திரன் விதி வசத்தால் தன்னுடைய மனைவி சந்திரமதியை அரிவாளால் வெட்ட நேர்ந்தபோது அது அவள் கழுத்தில் பூமாலையாக மாறியதைக் கண்ணெதிரில்

காட்சியாக்குவார்கள். எல்லாவற்றிலும் உள்ளடங்கிய ஒரு நீதி இருக்கிறது என்பது அந்தப் பெரியவர்கள் கதை சொல்லிய விதத்திலிருந்து புரிந்தது.

நான் பல உபன்யாஸங்கள் கேட்டிருந்தாலும் எனக்கு மிகவும் பிடித்தது இராமாயணமே. இராமநவமியை ஒட்டி வஸந்த காலத்தில் நடக்கும் இராமாயண உபந்யாஸங்களுக்கு நான் மிகுந்த விருப்பத்துடன் தாத்தாவுடன் செல்வேன். இவை அருகிலிருக்கும் நகர உயர் நிலைப்பள்ளியில் (Town High School) நடந்தால் பாட்டியும் உடன் வருவார். இராமாயணம் கேட்கப் போகும்போது பாட்டி மல்லிகைப்பூ வாங்குவார். நாங்கள் தலையில் வைத்துக்கொண்டு கொஞ்சம் வீட்டிற்காக வைத்துக்கொள்வோம். இராமாயணத்தைப் பள்ளியின் மைதானத்தில் வேப்பமரங்களுக்கடியில் அமர்ந்து கேட்கும்போது வீசும் இதமான காற்று வேப்பம்பூவின் நறுமணத்துடன் நிரம்பி வஸந்தகாலம் விரைவில் வரப்போவதை அல்லது வந்துவிட்டதை விளம்பரம் செய்யும். குடந்தையில் இருந்த இராமன் & இராமன் என்ற பஸ் நிறுவனத்தின் உரிமையாளர் நாராயணய்யர் என்ற பெரியவரும் பெரும்பாலும் இராமாயண நிகழ்ச்சிகளுக்கு வருகை தருவார். அவருடைய மகன் காசிராமன் அவர்கள் கும்பகோணத்தின் எம்.எல்.ஏவாக (MLA) இருந்திருக்கிறார். ஒருமுறை நிகழ்ச்சியின் வரவேற்பாளர், ‘இராமாயணம் எங்கு நடந்தாலும் முன் வரிசையில் அமர்ந்து கேட்கும் அநுமனைப் போலவே ஸ்ரீமான் நாராயணய்யரும் கேட்டுக் கொண்டிருப்பார்’ என்று கூறியதும் நான் என் மனதுக்குள், ‘தாத்தாவும் நானும் கூட கேட்டுக் கொண்டிருப்போம்’ என எண்ணிக்கொண்டதும் பசுமையாக நினைவிருக்கிறது. உபன்யாஸகர், ‘இராமா! இராகவா! இரகுவீரா! இரணதீரா! இராமச்சந்திரா!’ என்று கதறும்போதெல்லாம் எனக்கு மெய்சிலிர்க்கும். அவர்கள் துளசி ராமாயணத்திலிருந்து இனிமையாகப் பாடி மேற்கோள் காட்டும் நேரங்களில் எனக்கு அதைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் எழும். இராமாயணம் முடிந்து திரும்பிப் போகும்போது தாத்தா வீட்டிற்காகப் பலாச்சுளைகள் வாங்குவார். இந்த நடைமுறையில் நான் பல வருடங்கள் இராமநவமி உபன்யாஸங்களுக்குச் சென்று வந்ததால் இன்றும் வஸந்தகால நறுமணங்கள் எனக்குத் தாத்தா-பாட்டியுடன் இராமாயணம் கேட்கச் சென்றதை நினைவுக்குக் கொண்டுவருகின்றன.

பள்ளி நாட்களில் வீட்டிற்கு வந்த பிறகு நானாகப் பாடப் புத்தகங்களை எடுத்துப் படித்ததாக ஞாபகமில்லை. இருந்தாலும் புத்தகமும் கையுமாகத்தான் இருந்தேன்! நான் படித்த முதல்

நாவலான 'யாத்திரை'யில் வரும் நாணா என்ற கதாபாத்திரம், பின்னாளில் ரஜினி நடித்து திரைப்படமாக வந்த, உமா சந்திரன் அவர்களின் 'முள்ளும் மலரும்' நாவலில் வரும் காளி என்ற பாத்திரம், ர.சு.நல்லபெருமாள் அவர்களின் 'கல்லுக்குள் ஈரம்' நாவலில் வரும் ரங்கமணி என்ற பாத்திரம், பி.வி.ஆர் அவர்களின் 'மணக்கோலம்' நாவலில் வரும் ஜானா, சந்தானம் முதலிய பாத்திரங்கள், கல்கி அவர்களின் 'சிவகாமியின் சபதம்' நாவலில் வரும் சிவகாமியும் மாமல்லனும் எனப் பலக் கதாசிரியர்களும் பாத்திரங்களும் கதை மறந்த பிறகும் பெயர் மறக்க முடியாமல் என் நெஞ்சில் இன்றளவும் நீங்கா இடம் பெற்றிருக்கின்றனர். இந்த நாவல்கள் அனைத்தும் என்னுடைய பள்ளி நாட்களில் படித்தவை.

என் அப்பா ஊக்கப்படுத்தியதால் நான் ஒன்பதாம் வகுப்பு படித்துவந்த காலத்திலிருந்தே தவறாமல் செய்தித்தாள் படிக்கத் துவங்கினேன். செய்திகளைத் தொடர்பு படுத்திப் படித்ததோடல்லாமல் தினமணி ஆசிரியர் ஏ.என்.சிவராமன் அவர்கள் எழுதிக் கொண்டிருந்த 'ஒன்றேகால் ஏக்கர் பேர்வழி' என்ற கட்டுரைத் தொடரையும் ஆர்வத்துடன் படித்து வந்திருக்கிறேன்.

## 5.5 பள்ளியிறுதிப் பொதுத் தேர்வு

எஸ்.எஸ்.எல்.ஸி. (SSLC) என்று அழைக்கப்பட்ட பதினொன்றாம் வகுப்பிற்கு வந்த பிறகும் எனக்குப் பெரிய குறிக்கோள் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை. பொதுத் தேர்வு நெருங்கிக் கொண்டிருந்த போது கூட என் படிப்பில் தீவிரம் ஏற்படவில்லை. அப்பா வீட்டில் இருக்கும் நேரங்களில் நாங்கள் பாடங்களைப் படிக்கிறோமா என்று கண்காணிப்பார். எனக்குப் படிக்கப் 'போர'டிக்கும் சமயங்களில் நான் படிப்பது போல் பாசாங்கு செய்து ஏதாவது ஒரு பாடத்தில் விளக்கம் கேட்பேன். ஆசிரியர் என்பதால் நன்கு விளக்கம் கூறுவார். ஒருமுறை பாசாங்கு செய்வதும் 'போர'டித்துப் போய் கேட்ட விளக்கத்தையே வரிசையாக மூன்று நாட்கள் கேட்டேன். அப்பா அதைக் கண்டு பிடிக்கிறாரா என்று பார்க்கும் ஆர்வம் எனக்கு. அவர் அதைத் தவறாமல் கண்டுபிடித்து என்னைக் கடிந்துகொண்ட பிறகு என்னுடைய பாசாங்குப் பழக்கம் முடிவுக்கு வந்தது.

பொதுத் தேர்வு நடந்து தேர்வு முடிவுகளும் வந்தன. அறுநூறுக்கு நானூற்றி அறுபது என்ற என்னுடைய மதிப்பெண் பெண்கள் பிரிவின் முதலாவதாக அமைந்தது. மொழிப் பாடங்களிலும் பொதுக் கணிதத்திலும் எண்பது சதவீதத்திற்கு அதிகமாகவும் மற்றவற்றில் (ஒன்பதாம் வகுப்பிலிருந்து சேர்ந்து கொண்ட விருப்பப் பாடமான கணிதம் உட்பட) அதற்குக் குறைவாகவும் வாங்கியிருந்தேன். பள்ளியின் முதல் மதிப்பெண் நானூற்றி எண்பத்தி எட்டை இரகு என்ற மாணவன் வாங்கியிருந்தான். நான் பெண்களில் முதலாவதாக வந்ததற்காக பள்ளியிலிருந்து பதினைந்து ரூபாய் பரிசு கொடுத்தார்கள்.

அந்த வருடத்தின் மாநில முதல் மதிப்பெண் ஞாபகத்தில் இல்லை. ஆனால் அதற்கு முந்தைய வருடம் எங்கள் ஊரைச் சேர்ந்த நகர உயர் நிலைப் பள்ளி மாணவர் ஜயக்குமார் அறுநூறுக்கு ஐநூற்றி அறுபத்தி ஒன்று மதிப்பெண்கள் வாங்கி மாநிலத்தில் முதலாக வந்திருந்த விவரம் தோராயமாக ஞாபகம் இருக்கிறது.

உயர்நிலைப் பள்ளியில் டி.ஆர் சார், ரங்கமணி சார், சேஷாத்ரி சார் எனக் கணிதம் சொல்லிக் கொடுத்தவர்களும், ஏகாம்பரம் சார், ஏ.வி. சார் எனத் தமிழ் சொல்லிக் கொடுத்தவர்களும், கலாவதி டீச்சர், ருக்மிணி டீச்சர் என விஞ்ஞான பாடம் சொல்லிக் கொடுத்தவர்களும், நான் ஒன்பதாவது வகுப்பு வந்த பிறகு மூன்றாவது மொழியாகத் துவங்கிய ஹிந்தி சில மாதங்களுக்குப் பிறகு ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் காரணமாகக் கைவிடப்பட்டு விட்டாலும் அது வரை ஹிந்தி சொல்லிக் கொடுத்த ஜானகி டீச்சரும், உயர் வகுப்புக்களில் ஆங்கிலமும் சமூகவியல் பாடமும் சொல்லிக் கொடுத்த கே.எம். டீச்சரும் மற்றும் பள்ளித் தலைமை ஆசிரியர் கே.ஜி.கே. சார் அவர்களும் மறக்க முடியாதவர்கள்.

## 6. படிப்பு தொடருமா?

பள்ளிப் படிப்பை முடித்த பிறகுதான் கல்லூரிப் படிப்பு என்பது இயற்கையாகப் பின்தொடர்வதல்ல என்பது எனக்குப் புரிந்தது. கும்பகோணத்தில் பெண்களுக்கென்று பிரத்தியேக அரசினர் கல்லூரி 1963லிருந்து செயல்பட்டு வந்ததால், என்னுடைய தோழிகள்

பி.யு.ஸியில் எந்தப் பிரிவு எடுத்துக் கொள்வது என்பது பற்றித்தான் பேசிக் கேட்டிருந்தேனே தவிர மேல் படிப்பு தொடரப் போவதில்லை என்று யாரும் பேசி நான் கேட்டிருக்கவில்லை.

பள்ளியிறுதி வகுப்பு வரை நான் படிப்பில் தனிப்பட்ட நாட்டம் எதுவும் காட்டியிருக்கவில்லை. ஆனால் கல்லூரியில் என்னைச் சேர்ப்பதற்கு என்னுடைய அம்மாவிடமிருந்து கடும் எதிர்ப்பு கிளம்பிய போதுதான் கல்வியின் மீது எனக்கிருந்த ஈடுபாடு எனக்கே புரிந்தது! எதுவும் கிடைத்தற்கரியது என்ற நிலைக்குப் போகும் போதுதான் அதன் அருமை நமக்குப் புரியும்! என் அம்மாவைக் குறை சொல்வதற்கில்லை. 1970ஆம் வருடத்தின் கால கட்டம் அப்படிப்பட்டது. எழுபதுகளின் ஆரம்பங்களில் நடுத்தரக் குடும்ப ஆண்களே கூட எஸ்.எஸ்.எல்.ஸி. அல்லது பி.யு.ஸிக்குப் பிறகு நல்ல வேலை கிடைத்தால் அதைப் பற்றிக் கொண்டு வாழ்க்கையில் செட்டில் (settle) ஆகி விடுவார்கள். பெண்களுக்குப் பட்டப் படிப்பு அவசியம் என்ற கருத்து சமூகத்தில் அப்போது ஏற்பட்டிருக்கவில்லை. எண்பதுகளின் இடைப்பட்ட வருடங்களிலிருந்துதான் நடுத்தரக் குடும்ப மணப்பெண்ணுக்கு பட்டப் படிப்பு வலியுறுத்தப்பட்டது.

‘அப்பாவின் வருமானத்தில் நான்கு பெண்களுக்குக் கல்யாணம் நடக்க வேண்டுமே’ என்று ஏற்கெனவே கவலையிலிருந்த அம்மா, ‘பெண் படித்து விட்டால் அவளை விட அதிகம் படித்த மாப்பிள்ளை தேட வேண்டும், முதல் பெண்ணுக்கே கல்யாணம் பண்ணத் தடங்கலும் தாமதமும் ஏற்பட்டால் மற்ற பெண்களின் கல்யாணம் என்னாவது?’ என்பது போன்ற வாதங்களை அப்பாவின் முன் வைத்தார். நான் என்னுடைய முழுமூச்சுடன் தொடர்ந்து படிக்கும் என் விருப்பத்தைத் தெரிவிக்கத் தொடங்கினேன். அப்பாவிற்கு என்னைப் படிக்க வைக்க வேண்டுமென்பதில் தீவிர விருப்பமிருந்தது. அம்மாவின் கவலைகளைப் போக்க விளக்கங்கள் கூறினார். ஆனால் ஐந்து குழந்தைகளை வைத்துக் கொண்டு கம்பி மேல் நடப்பது போன்று கையாள வேண்டியிருந்த குடும்பப் பொருளாதாரத்தின் காரணத்தால் அம்மா எளிதில் இணங்கவில்லை.

பெண்கள் கல்வியைப் பற்றியும் அவர்கள் வேலைக்குச் செல்வது பற்றியும் பாட்டி தன் முந்தைய தலைமுறையின் கருத்துக்களையே கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்ததால் அவரது கருத்துக்கள் எனக்கு உதவியாக அமையவில்லை. தாத்தா உலக ஞானமும் பரந்த

மனப்பான்மையுமுடையவர். காலத்திற்கேற்ற வளர்ச்சியில் ஆர்வம் கொண்டவராதலால் நான் படிக்கவேண்டும் என்று மனதார விரும்பினார். ஆனாலும் அம்மா எழுப்பிய கேள்விகளுக்கு அப்பாவே பதில் அளிக்கவேண்டியிருந்தது. அப்பா உறுதியுடன் எனக்கு ஆதரவாக நின்றார். கடைசியில், அம்மா என்னால் போகவர மூன்று மைல் நடக்க முடியாது என்று சொல்லிப் பார்த்தார். எனக்குப் படிக்க விருப்பமிருந்ததால் கால் வலி தெரியாது என்று நான் கெஞ்சினேன். கால் வலித்தாலும் வெளியில் சொல்லக் கூடாது என்று மனதில் குறித்துக்கொண்டேன். முடிவாக, அம்மா ‘இந்த ஒரு வருடம் (பி.யு.ஸி.) மட்டும் ஆசைக்குப் படிக்கட்டும்’ என்றார்.

## 7. திருப்புமுனையாக அமைந்த பி.யு.ஸி படிப்பு

பி.யு.ஸி (P.U.C.) என்று சொல்லப்பட்ட ப்ரி யுனிவர்சிடி கோர்ஸில் கணிதம், பௌதிகம் மற்றும் இரசாயனம் விருப்பப் பாடங்களாக இருந்த பிரிவில் சேரக் கனவு கண்டு கொண்டிருந்த நான் ஏற்கெனவே புவனா என்ற மூத்த (senior) மாணவியிடம் அவளது பழைய புத்தகங்களுக்குச் சொல்லி வைத்திருந்தேன். நான் படிக்கப்போவது உறுதியான மறு கணமே ஓடிச் சென்று அவளது முந்தைய வருடப் புத்தகங்கள் அனைத்தையும் பெற்று வந்து அப்பாவின் முன் வைத்து ‘இவற்றின் பாதி விலை நாற்பத்தி எட்டு ரூபாய்தான்’ என்று சொல்ல அப்பா மகிழ்ச்சியுடன் பணத்தை எடுத்துக் கொடுத்தார்.

நாங்கள் வசித்த டபீர் நடுத் தெருவிலிருந்து பெண்கள் கல்லூரி சுமார் ஒன்றரை மைல் தூரத்தில் இருந்தது. எங்கள் வீட்டின் இடக்கை பக்கமாகக் கிளம்பி வாய்க்கால் கரைத் தெருவில் நடந்து பெஸண்ட் ரோடைத் தாண்டி விக்டோரியா தெரு வழியாக மணிக் கூண்டை அடைந்து அங்கிருந்து மஹாமஹக் குளத்தின் தென்புறக் கரையை ஒட்டிய தெரு வழியாக நடந்தால் அரசினர் பெண்கள் கல்லூரி வரும். எங்கள் வீட்டின் வலக்கை பக்கமாகக் கிளம்பி மடத்துத் தெரு, டவுன் ஹால் ரோடு மற்றும் டைமண்ட் டாக்கீஸ் ரோடு வழியாகவும் மணிக் கூண்டை அடைய முடியும். ஆனால் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்கு

விக்டோரியா தெரு வழியே உகந்ததாக இருந்தது. கல்லூரி ஊரின் எல்லையில் அரசலாற்றங் கரையில் அமைதியான சூழ்நிலையில் அமைந்திருந்தது.



(நன்றி : கல்லூரியின் இணையதளம்

http://gcwk.ac.in )

கல்லூரி தொடங்கியவுடன் அங்கு பல பள்ளிகளிலிருந்து வந்திருந்த மாணவிகளின் அறிமுகம் கிடைத்தது. எங்கள் ஊரின் அரசுப் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, ஸரஸ்வதி பாடசாலை, செயிண்ட் ஜோஸஃப் கான்வென்ட் முதலியவற்றிலிருந்தும் சில வெளியூர்ப் பள்ளிகளிலிருந்தும் மாணவிகள் வந்திருந்தனர். பலர் என்னை விட மிக மிக அதிக மதிப்பெண்கள் பெற்றிருந்தனர். லைலா என்னும் மாணவி ஐநூற்றி முப்பத்தி நான்கு மதிப்பெண்கள் பெற்று முன்னணியில் இருந்தாள். மற்றும் ஜயந்தி, இந்துமதி, என்.லலிதா, இராஜம், கல்யாணி, இன்னும் பலர் என ஒரு நீண்ட பட்டியலில் என்னுடைய பள்ளியிறுதி மதிப்பெண்களுக்கு மேல் வாங்கியிருந்தார்கள். என்னுடைய பள்ளியிலிருந்து வந்திருந்த

நன்கு படிக்கக் கூடிய லக்ஷ்மியின் மதிப்பெண்கள் பொதுத் தேர்வுக்கு முன் அவளுக்கு வந்த டைபாய்டு காய்ச்சல் காரணமாகக் குறைந்துவிட்டிருந்தன.

ஸெயிண்ட் ஜோஸஃப் கான்வென்டிலிருந்து வந்திருந்த லைலாவும் ராஜமும் தங்கள் ஆங்கில உச்சரிப்பு (diction), அழகான கையெழுத்து, கச்சிதமாகப் 'பின்' (pin) செய்து அணியப்பட்டிருந்த தாவணி, கையில் மடித்து வைக்கப் பட்டிருந்த கைக்குட்டை (hand-kerchief) மற்றும் பேராசிரியர்களிடம் பேசும்போது வெளிப்படுத்திய மரியாதை (politeness) ஆகியவற்றால் தனித்துவத்துடன் தெரிந்தனர். ஒரு நாள் ஒரு பேராசிரியை லைலாவின் விடைத்தாளை வகுப்பில் தூக்கிக் காண்பித்து, 'இந்த மாதிரி ஒரு விடைத்தாளைத் திருத்தக் கொடுத்து வைத்திருக்கவேண்டும்' என்று கூறினார்.

பி.யு.ஸி வகுப்பில் என்னுடைய படிப்பில் ஏற்பட்ட தீவிர மாறுதலுக்கு நான் இலக்கிய ரீதியாக இரண்டு மேற்கோள்களைக் காட்டமுடியும். பாரதியார் 'சுதந்திரப் பயிர்' என்ற தலைப்பில் பாடிய 'வாராது போல வந்த மாமணியைத் தோற்போமோ?' என்ற வரியும்

'வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு'

என்ற திருக்குறளுமே அவை. நானாகவே வீட்டின் மாடிப்பகுதிகளின் அமைதியைத் தேடிச் சென்று படிக்க ஆரம்பித்தேன். பி.யு.ஸியின் பொதுத் தேர்வும் நடந்து முடிந்தது.

நான் திரும்பவும் மேலே படிக்கும் பிரச்சினையைச் கிளப்பக் கூடாது என்பதில் தீவிரமாக இருந்தார் என் அம்மா. 'ஏன், படித்தால் என்ன? நான் படித்து வேலைக்குப்போய் அப்பாவின் செலவுப் பளுவைக் குறைக்கிறேனே' என்றேன் நான். பெண்கள் படிப்பதால் அவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் என்னென்ன கஷ்டங்கள் ஏற்படும் என்று சில விபரீதக் கற்பனைகளை வைத்திருந்த என் பாட்டி என்னைத் தையல் வகுப்பில் சேர்த்து தையல் ஆசிரியை வேலைக்குப் போக அனுமதிக்கலாம் என்று ஆலோசனை கூறினார். மடத்துத் தெருவிலிருந்த ஒரு தையல் வகுப்பில் (ஆசிரியை வேலைக்குப் போவதற்காக!) தேர்வுப் பிரிவில் சேர்க்கப்பட்டேன். தேர்வுப் பிரிவல்லாமல் சாதாரணப் பிரிவில் சேர்ந்தவர்கள் இரண்டு மாதங்களில் கணிசமாகக் கற்றுக் கொண்டிருக்க, என்னுடைய நாட்கள் தையல்

கோட்பாடு (theory) பற்றிய குறிப்புகளை எடுத்துக் கொள்வதிலும் அவற்றை ஒட்டிய செய்முறைகள் (practicals) செய்வதிலுமாகக் கடந்துகொண்டிருந்தன.

ஒரு நாள் கோடையின் நடுப்பகல் வெயிலில் அம்மா பதிவுத் தபால்காரரை அழைத்துக் கொண்டு தையல் வகுப்புக்கு வந்தார். பி.யு.ஸி. பொதுத் தேர்வின் கிரேட் (Grade) தாள் வந்திருந்தது. பி.யு.ஸி.யில் மதிப்பெண்கள் முறை இல்லாமல் கிரேட் முறை மதிப்பீடு இருந்தது. கணிதம், பௌதிகம் மற்றும் இரசாயனத்தில் ஒவ்வொன்றிலும் D plus, தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் முறையே A plus மற்றும் B என கிரேட் வந்திருந்தன. சற்று கூச்சத்துடன் அம்மாவிடம் ‘நல்ல மார்க்’ என்றேன். அம்மாவுக்கும் மகிழ்ச்சி.

தேர்வு முடிவுகள் வெளி வருவதற்கு முன்பே அநேகமாக என் தோழிகள் எல்லோரும் பி.எஸ்சியில் (B.Sc) சேருவதற்கான விண்ணப்பங்களை வாங்கி விட்டார்கள் என்பது வீட்டின் அருகிலிருந்த தோழிகள் மூலமாகத் தெரிந்தது. இன்னும் சற்று நாட்களில் விண்ணப்பங்களைக் கொடுப்பதை நிறுத்திவிடுவார்கள். நான் அப்பாவிடம் சென்று பி.எஸ்சியில் சேரும் விருப்பத்தைக் கூறிக் கெஞ்ச ஆரம்பித்தேன். ‘ஒரு டேர்முக்கு (term) நூற்றி எண்பத்தி ஒரு ரூபாய்தான் கட்டணம் செலுத்தவேண்டும். ஒரு வருடத்திற்கு ஐநூற்றி நாற்பத்தி மூன்று ரூபாய்தான்’ என்று நான் சொல்ல, அம்மா, ‘என்னது? மூணு வருஷத்துக்கு ஆயிரத்தி ஐநூறு ரூபாய்க்கு மேலாகவா?’ என்று அதிர்ந்து போனார், என்னால் மீண்டும் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இடையே கருத்து வேறுபாடு சூடு பிடிக்க ஆரம்பிக்கும் முன் இரண்டு அதிசயங்கள் நிகழ்ந்தன. கடவுள் இந்த மாதிரி அதிசயங்களை என் வாழ்க்கையில் முக்கியமான தருணங்களின் கடைசி நொடிகளில் நிகழ்த்தித் தன்னுடைய தரிசனத்தை எனக்கு அளித்திருக்கிறார்.

முதலாவது அதிசயம் என்னவென்றால், ஒரு நாள் தையல் வகுப்பில் என்னுடைய இரண்டு கணுக்கால்களும் ‘புஸு புஸு’ என்று வீங்க ஆரம்பித்தன. வீட்டிற்குத் திரும்பி வருவதற்கே சிரமப்பட்டு நடந்து வரவேண்டியிருந்தது. இரு கணுக்கால்களின் பக்கவாட்டிலும் மூன்று அல்லது நான்கு அங்குல உயரத்திற்கு வீக்கங்கள் ஏற்பட்டிருந்தன. தாமதம் செய்யாமல் டாக்டரிடம் அழைத்துக் கொண்டுபோய் மருந்து வாங்கிக்கொடுத்தார்கள். வலியும் வீக்கமும்

குறைவதற்கு தென்னமரக்குடி எண்ணெயை வாங்கித் தடவினார்கள். வாதநாராயண மரத்து இலைகளைக் கொண்டுவந்து காலில் போட்டு அதன் மேல் பொறுக்கும் சூட்டில் வெந்நீர் ஊற்றினார்கள். இந்த உபசாரங்களை ஒரு வாரத்துக்கு மேல் செய்த விட்டுதான் வீக்கங்கள் குறைய ஆரம்பித்தன. இடது கணுக்காலில் ஒரு சிறிய வீக்கம் மட்டும் ஞாபகத்திற்காகத் தங்கி விட்டது. இளகிய மனம் உள்ள என் பாட்டி, 'நீ இனிமேல் தையல் வகுப்புக்குப் போக வேண்டாம்' என்றார்.

இரண்டாவது அதிசயம், மாநில அரசால் அறிவிக்கப்பட்ட ஒரு முக்கியமான முடிவு. அந்த வருடக் கல்வியாண்டிலிருந்து (1971 - 72) தமிழ் மீடியத்தில் பட்டப் படிப்பைப் படிப்பவர்கள் கட்டணம் செலுத்தாமல் இலவசமாகப் படிக்கலாம் என்ற, கலைஞர் கருணாநிதி அவர்களின் தலைமையிலான அரசின், அறிவிப்பு எனக்கென்று கிடைத்த வரப்பிரசாதமாகத் தோன்றியது, அது வரை எங்கள் கல்லூரியில் பி.எஸ்சி ஆங்கில மீடியத்தில்தான் இருந்ததாகவும் அந்த வருடம்தான் தமிழ் மீடியமும் கூடுதலாக அறிமுகப்படுத்தப்பட்டதாகவும் ஞாபகம். நான் பள்ளியிலும் பி.யு.ஸியிலும் தமிழ் மீடியத்தில்தான் படித்தேன். எனவே பி.எஸ்சியும் தமிழ் மீடியத்திலேயே படிப்பதில் எனக்கு எந்தச் சிரமமும் இருக்காது என்று அப்பாவிடம் கூறினேன். நான் படிப்பதில் பணம் மற்றும் திருமணம் என்று அம்மாவால் முன்வைக்கப்பட்ட இரண்டு பிரச்சினைகளில் பணப் பிரச்சினை தீர்ந்ததால் அம்மா சற்று அமைதியானார்.

## 8. வரப் பிரசாதமாக அமைந்த பட்டப் படிப்பு

நான் பி.எஸ்சி.யில் கணிதத்தை முக்கியப் பாடமாகவும், பௌதிகம் மற்றும் இரசாயனத்தைத் துணைப் பாடங்களாகவும் கொண்ட பிரிவில் தமிழ் மீடியத்தில் சேர்க்கப்பட்டேன். கல்லூரி முதல்வரால் அந்த வருடத்திலிருந்து பட்டப் படிப்பு மாணவிகளுக்கு சேலை-இரவிக்கை கல்லூரி உடையாக விதிக்கப்பட்டது.

கல்லூரி திறந்த பிறகுதான் என்னுடைய கிரேட் மதிப்பு கல்லூரியின் இரண்டாமிடத்தில் இருந்தது தெரியவந்தது. தோழி ஜயந்தி ஆங்கிலத்தில் மட்டும் என்னை விட ஒரு கிரேட் அதிகம் பெற்று (அதாவது அவள் பெற்றது B plus) கல்லூரியின் முதலிடத்திலிருந்தாள்.

என்னுடைய நெருங்கிய தோழிகள் ஆங்கில மீடியத்திலும் நான் தமிழ் மீடியத்திலுமாக வகுப்புகள் ஆரம்பித்தன. நான் மகிழ்ச்சியாகவே வகுப்புகளில் பங்கு கொண்டேன்.

நான் பி.எஸ்சியில் சேர்ந்து சில வாரங்களுக்குப் பிறகு ஒரு பிற்பகலில் கல்லூரி முதல்வர் என்னை அழைப்பதாகக் கூறினார்கள். நான் அங்கே சென்ற போது முதல்வருக்கு எதிரில் என் அப்பா அமர்ந்திருந்தார்.



அப்பா என்னை ஆங்கில மீடியத்துக்கு மாற்ற விரும்புவதாக முதல்வர் கூறினார். நான் அப்பாவை ஆச்சரியத்துடனும் நன்றியுடனும் பார்த்தேன். ‘ஏன், அப்பா!’ என்றேன். ‘ஆமாம், நீ நல்ல மார்க் வாங்கியிருக்கிறாய், என் மனது கேட்கவில்லை, நீ உன் ஃப்ரண்ட்ஸ் கூடவே படி’ என்றார். எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

கல்லூரியில் மாணவிகள் என்னென்ன உதவித்தொகைகளுக்கு (scholarships) விண்ணப்பிக்கலாம் என்ற விவரங்கள் அறிவித்தார்கள். அவற்றில் ஒன்று அரசாங்கத்தால் அளிக்கப்படும் தகுதி சார்ந்த கடன் உதவித்தொகை (merit based loan scholarship). அதன் திட்டப்படி மதிப்பெண் அடிப்படையில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான உதவித்தொகைகள் வருடத்திற்கு எழுநூற்றி இருபது ரூபாய் என வட்டியில்லாமல் வழங்கப்படும்; மாணவர்கள் படிப்பை முடித்த பிறகு குறிப்பிட்ட காலத்துக்குள் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். எங்கள் பல்கலைக்கழகமான மதராஸ் பல்கலைக்கழகத்தால் (Madras University) வழங்கப்படும் சர். தஞ்சாவூர் மாதவ ராவ் பரிசுகளுக்கு (Sir Tanjore Madhava Rao Prizes)

விண்ணப்பிக்குமாறு ஜயந்தியிடமும் என்னிடமும் கூறினார்கள். இதற்கிடையே பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கான தேசிய உதவித்தொகை (National Scholarship for Children of School Teachers) பற்றிய விவரமும் விண்ணப்பப் படிவமும் செய்தித்தாளில் வந்தன. ஆக நான், மேலே குறிப்பிடப்பட்ட மூன்று விண்ணப்பப் படிவங்களையும் அப்பாவின் உதவியுடன் பூர்த்தி செய்து தேவையான அத்தாட்சிகளைக் கல்லூரி அலுவலகத்திலிருந்தும் வாங்கி அவரிடம் கொடுக்க அவர் அதை ஒரே நாளில் பதிவுத் தபால்களில் உரிய முகவரிகளுக்கு அனுப்பிவைத்தார். அன்றிலிருந்து நான் கடவுளிடம், ‘மூன்றும் கிடைக்க வேண்டும்’ என்று வேண்டிக் கொள்ள ஆரம்பித்தேன். அதுவும் குறிப்பாக, எங்கள் வீட்டிற்கு அருகிலிருக்கும் மடத்துத் தெரு படைவெட்டி மாரியம்மன் கோயிலைத் தாண்டும் போதெல்லாம் இந்த பிரார்த்தனையைத் தவறாமல் செய்தேன்.

சில மாதங்கள் கழித்து ஒன்றன் பின் ஒன்றாக வந்த கடிதங்களிலிருந்து எனக்கு மூன்றுமே கிடைத்திருந்தன என்பது தெரியவந்தது. ‘கேட்டதெல்லாம் நான் தருவேன்’ என்று அம்பாள் என்னிடம் கூறுவது போலிருந்தது.

கடன் உதவித்தொகைக்குப் பல மாணவிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள். தோழி ஜயந்தியும் நானும் முறையே தஞ்சாவூர் மாவட்டத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களில் இருந்ததால் நாங்கள் சர். தஞ்சாவூர் மாதவ ராவ் பரிசுகளுக்குத் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக மதராஸ் பல்கலைக்கழகத்திடமிருந்து கல்லூரி முதல்வருக்குக் கடிதம் வந்தது. அன்று தமிழ்நாட்டில் மதராஸ், மதுரை மற்றும் அண்ணாமலை என மூன்றே பல்கலைக்கழகங்கள்தான். அதிலும் அன்றைய பிரிக்கப்படாத தஞ்சாவூர் மாவட்டமே (இன்றைய தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களை உள்ளடக்கியது) பொதுவாகக் கல்வியில் முன்னணியிலிருந்ததால் எங்களுடைய தர வரிசை (Rank order) மதராஸ் பல்கலைக்கழகத்தின் தர வரிசையிலேயே குறிப்பிட்டுச் சொல்லும் படிதான் இருந்திருக்க வேண்டும். அதன் முக்கியத்துவம் அன்று தெரியாததால் நாங்கள் அந்த விவரங்களை அறிந்துகொள்ளவில்லை. முதல் பரிசாகத் தோழிக்கு எழுபத்தி இரண்டு ரூபாயும் இரண்டாம் பரிசாக எனக்கு நாற்பத்தி எட்டு ரூபாயும் சான்றிதழ்களும் கிடைத்தன.

பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கான தேசிய உதவித்தொகைக்குத் தெரிவு செய்யப் பட்ட கடிதம் இணைப்புக்களுடன் வீட்டிற்கே வந்தது. அக்கடிதத்திலிருந்து உதவித்தொகை முதல் வருடத்தில் மாதம் ஐம்பது ரூபாயாக ஒன்பது மாதங்களுக்கும் இரண்டாம் மற்றும் மூன்றாம் வருடங்களில் மாதம் எழுபத்தி ஐந்து ரூபாயாக வருடம் முழுவதற்கும் தரப்படும் என்றும் தெரியவந்தது. ஆக அந்த உதவித்தொகை கட்டணத்திற்கும் புத்தகத்திற்கும் ஆகும் செலவுகளை ஈடுகட்டப் போதுமானதாக இருந்தது.

அந்த இணைப்புக்களிலிருந்து அந்த உதவித்தொகை இளங்கலை, இளம் அறிவியல், முது கலை, முது அறிவியல், தொழில் படிப்பு மற்றும் ஆராய்ச்சிப் படிப்பு என்ற ஒவ்வொரு பிரிவிற்கும் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் தலா இரண்டு பேருக்குக் கொடுக்கப் பட்டிருந்தது எனத் தெரியவந்தது. தமிழ்நாட்டிலிருந்து இளம் அறிவியல் பிரிவிற்கு என்னைத் தவிர தெரிவு செய்யப்பட்டிருந்த இன்னொரு மாணவரின் பெயர் வெங்கடேஷ் என்று ஞாபகம். மதறாஸில் கல்லூரி சாலையிலுள்ள கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திலிருந்து ( Director of Collegiate Education, College Road, Madras-6) வந்திருந்த அக்கடிதம் என்றென்றும் மனதுக்கு இதமாக அமைந்தது. இவ்விரு உதவித் தொகைகளில் ஒன்றைத்தான் பெறமுடியும் என்ற விதிக்கிணங்க பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கான தேசிய உதவித்தொகையைப் பெற்றுக் கொள்வதாக எழுதிக் கொடுத்து கடன் உதவித்தொகையை வேண்டாமென எழுதிக் கொடுத்தேன்.

குறிப்பிட்ட சதவீதத்திற்கு அதிகமாக மதிப்பெண் வாங்கிக் கொண்டிருக்கும் வரை இந்த உதவித்தொகை ஆராய்ச்சிப் படிப்பு வரை புதுப்பிக்கப்படும் என்ற தகவல் என்னை மனதளவில் ஆகாயத்தில் பறக்கவைத்தது. ‘நான் கட்டணம் செலவில்லாமல் தமிழ் மீடியத்திலேயே படிக்கிறேன்’ என்று சொல்லியும் கேட்காமல் என்னைப் பணம் செலவழித்து ஆங்கில மீடியத்தில் படிக்க வைத்துக் கொண்டிருந்த அப்பா ‘நான் என் பெண்ணை பிஹெச்.டி வரை ஸ்காலர்ஷிப்பிலேயே படிக்கவைக்க முடியும்’ என மனதாரவும் வாயாரவும் சந்தோஷப்பட்டார்.

கணிதத் துறையின் நூலகத்தில் நிறைய நல்ல புத்தகங்கள் இருந்ததால் நான் கணிதத்திற்காகப் பாடப்புத்தகம் எதுவும் வாங்காமல் நூலகப் புத்தகங்ளையே பயன்படுத்திக்

கொண்டேன். என்னுடைய கூச்ச சுபாவம் காரணமாக நான் வகுப்பில் அதிகமாக வாயைத் திறக்க மாட்டேன். பேராசிரியைகள் வகுப்பில் பொதுவாகக் கேட்கும் கேள்விகளுக்கு விடை தெரிந்தால் கூட, ‘இதற்கு பதில் நிறைய பேருக்குத் தெரிந்திருக்கும், நாம் முந்திரிக்கொட்டை போல சொல்லக்கூடாது’ என்று எண்ணிக்கொண்டு அமைதியாக இருப்பேன். அவர்கள் விடைக்காகச் சற்றுக் காத்திருந்த பிறகும் யாரிடமிருந்தும் குரல் வராவிட்டால் பின்னால் திரும்பிப் பார்த்து யாரும் சொல்லப் போவதில்லை என்பதை உறுதி செய்து கொண்டு விடையளிப்பேன்.

முதல் வருட முடிவில் தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் தலா ஒரு தாள் எனப் பொதுத் தேர்வு நடந்தேறியது.

அப்போது கணிதத்தில் வினாத்தாளில் மூன்றில் இரண்டு பங்கு விடையளிக்கும் முறை (answer two third of the paper) என்பது நடைமுறையிலிருந்தது. அதாவது மொத்தம் ஒன்பது வினாக்கள் கேட்கப் பட்டிருந்தால் அவற்றில் ஏதாவது ஆறு முழு வினாக்களுக்குத்தான் விடையளிக்க முடியும் என்றில்லாமல் முழு வினாத் தாளில் மூன்றில் இரண்டு பங்கு விடையளிக்கலாம். இந்த முறையின் முக்கிய நன்மை என்னவென்றால் எல்லா உட்பிரிவுகளும் தெரியும் வகையில் எந்த ஆறு வினாக்களைத் தெரிவு செய்வது எனக் குழம்பி அதில் நேரம் செலவழிக்காமல் வினாத்தாள் கையில் கிடைத்தவுடன் தெரிந்த கணக்குகளையெல்லாம் போடத் துவங்கிவிடலாம். எப்படியும் நூறு மதிப்பெண்ணுக்கு விடையளிக்கும் நேரம்தான் இருக்கப் போவதால் வேகமாக அதிக பட்சக் கணக்குகளைப் போடவேண்டும்.

இரண்டு மாதங்கள் கழித்துத் தேர்வு முடிவுகள் செய்தித்தாளில் வந்தன. அடுத்த சில நாட்களில் மதிப்பெண் பட்டியல் வந்தன. சுமார் நாற்பது பேர் இருந்த எங்கள் வகுப்பில் என்னையும் சேர்த்து ஏழெட்டு மாணவிகள் கணிதத்தில் நூற்றுக்கு நூறு பெற்றிருந்தோம்.

பி.எஸ்சியின் இரண்டாம் கல்வியாண்டும் இனிதே துவங்கி நடைபெற்றது. வருட முடிவில் தமிழ், ஆங்கிலம், கணிதம் மற்றும் பௌதிகத்தில் தலா ஒரு தாளும் பௌதிகத்தில் செய்முறைத் தேர்வும் எனப் பொதுத் தேர்வு நடந்தேறியது.

செய்தித்தாளில் தேர்வு முடிவுகள் வந்த அன்று வகுப்பிற்கு வந்த அனைத்து ஆசிரியைகளும் முதலில் கேட்ட கேள்வி ஒன்றே ஒன்றுதான். பி.எஸ்சியின் இரண்டு

மொழிப் பாடங்களும் இரண்டாம் வருடத்தோடு முடிந்துவிடுவதால் மொழிகளுக்கான தேர்வு முடிவுகள் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் வகுப்பு என வகுப்பு வாரியாக வெளியிடப்படும். செய்தித் தாளில் வந்திருந்த எங்கள் கல்லூரி எண்களில் ஒரு எண் மட்டும் தமிழின் முதல் வகுப்பில் வந்திருந்தது. தேர்ச்சி பெற்றிருந்த மற்ற எண்கள் அனைத்தும் தமிழின் இரண்டாம் அல்லது மூன்றாம் வகுப்பில் வந்திருந்தன. அதே எண் மட்டும் ஆங்கிலத்தின் இரண்டாம் வகுப்பில் வந்திருந்தது. ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றிருந்த கல்லூரியின் மற்ற எண்கள் அனைத்தும் மூன்றாம் வகுப்பில் வந்திருந்தன. ‘19672 என்ற எண் யாருடையது?’ என்ற அந்த கேள்விக்கு எழுந்து நின்று ஆசிரியர்களின் பாராட்டைப் பெற்றுக் கொள்ளும் பேற்றைக் கடவுள் எனக்குக் கொடுத்திருந்தார்.

சில நாட்களில் மதிப்பெண் பட்டியல் வந்த பிறகு கணிதத்தில் இந்த வருடமும் சில மாணவிகளுக்கு நூற்றுக்கு நூறு வந்திருந்தது தெரியவந்தது. என்னையும் சேர்த்து நான்கைந்து மாணவிகள் இரண்டு வருடமும் நூறு வாங்கிய பட்டியலில் இருந்தோம். நான்காவது பாடமான பௌதிகத்தில் நான் என்னதான் கவனம் செலுத்தினாலும் அது எனக்குச் சற்று எட்டவே நின்றதால் செய்முறையுடன் சேர்த்து நூற்றி ஐம்பதுக்கு நூற்றி ஒன்பது என்ற மதிப்பெண்கள்தான் கிடைத்திருந்தன.

பி.எஸ்சியின் கடைசிக் கல்வியாண்டும் துவங்கியது. அந்த வருடத்தில் ஐந்து கணிதத் தாள்கள், ஒரு ரசாயனத்தாள் மற்றும் அதன் செய்முறை எனப் பாடங்கள் நடந்தன. கணிதத் துறை நூலகத்தை நன்கு பயன்படுத்திக் கணக்குகளைப் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தேன். தோழி R.உஷா, ‘நான் ஒரு புத்தகம் வாங்கினேன். ஆனால் எந்தக் கணக்கும் போட்டுப் பார்க்கவில்லை. நீதான் ஆர்வமாகப் போடுகிறாயே, நீயே போடு!’ என்று ஒரு கணிதப் புத்தகத்தைக் கொண்டுவந்து கொடுக்க அந்தப் புத்தகத்துக் கணக்குகள் முழுவதையும் போட்டுப் பார்த்தது பசுமையாக ஞாபகமிருக்கிறது. தாத்தாவின் பழைய கணக்குப் புத்தகங்கள் உட்பட வீட்டிலிருந்த ஒரு பக்கத் தாள்கள் அனைத்தும் எனக்குக் கணக்குப் போட்டுப் பார்க்க உதவின. கல்லூரியின் ஆண்டு விழாக்களில் எனக்குப் பல முதல் பரிசுகள் கிடைத்தன.

நான் முதல் மதிப்பெண் வாங்கிய போதெல்லாம் எனது திருமணப் பிரச்சினை அம்மாவின் மனதில் பூதாகாரமாகத் தெரிந்தது போலத் தோன்றவே நான் அப்போதிலிருந்தே சற்று அடக்கி வாசிக்கக் கற்றுக் கொண்டேன்.

அம்மாவிற்கு என் மேல் கோபம் ஏற்பட இன்னொரு நியாயமான காரணமும் இருந்தது. எனக்குப் படிப்பிலிருந்த ஆர்வம் வீட்டு வேலைகளில் ஏற்படவில்லை. அம்மா கூப்பிட்டால் சில சமயங்களில் கையிலிருக்கும் புத்தகத்தோடு போய் நிற்பேன். 'அந்தப் புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு வருகிறாயா?' என்று சத்தம் போடுவார். பல தடவைகளுக்கு மேல் இந்த சத்தத்திற்கு ஆளான பிறகுதான் என்னுடைய இந்த அனிச்சைச் செயலை (involuntary act) என்னால் மாற்றிக் கொள்ள முடிந்தது! ஏதாவது வேலை சொன்னால் அதை மட்டும் முடித்துவிட்டு அது சார்ந்த வேலை ஏதாவது இருக்கிறதா என்று பார்க்காமல் வந்துவிடுவேன்.

கல்லுரலில் மாவு அரைப்பது போன்ற வேலைகளை என்னால் சுலபமாகச் செய்ய முடியவில்லை. நான் கல்லுரலில் மூச்சு வாங்கிக்கொண்டு திண்டாடுவதைப் பார்த்தால் அப்பா அம்மாவிடம், 'குழந்தையை ஏன் அரைக்கச் சொல்கிறாய்?' என்பார். அப்பா என்னிடம், 'ஏதாவது எளிய வேலைகளில் உதவி செய், உனக்கும் ஒரு மாறுதலாக இருக்கும்' என்பார். என்னால் அம்மாவின் மின்னல் வேக செயல்பாடுகளுக்கிடையில் வீட்டு வேலைகளைக் கற்றுக் கொள்ளவோ அல்லது உதவி செய்து பேர் வாங்கவோ முடியவில்லை.

அப்போது வீட்டில் விறகு அடுப்பில்தான் சமையல். அம்மாவிற்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டால் பெரும்பாலும் பாட்டி வந்து சமைப்பதே வழக்கம் என்றாலும் நான் கல்லூரி வந்த பிறகு என்றாவது ஓரிரு நாட்கள் எனக்கு அந்தப் பொறுப்பு தரப்பட்டது. அச்சமயங்களில் நான் பெரும்பாலும் கறி (பொரியல்) மற்றும் சாம்பார் அல்லது இரசத்தைச் சாப்பிடக் கூடிய தரத்தில் செய்தாலும், தேவைக்கேற்றபடி விறகு அடுப்பின் வேகத்தைக் கூட்டியும் குறைத்தும் எரியவிடும் சுறுசுறுப்பும் திறனும் எனக்குக் கைவராததால், சாதம் அநேகமாக அரிசி ஊறிய பதத்தில் அல்லது அடிப்பிடித்த பதத்தில் அமைந்துவிடும். என் அம்மாவின் சுறுசுறுப்பு என் தங்கைகளிடம் இருந்ததால் அவர்களால் அம்மாவுக்கு உதவி செய்து பேர் வாங்க முடிந்தது. பாடப் புத்தகங்களிலிருந்து மாறுதல் வேண்டுமென்றால் நான் செய்தித் தாளையும் வாரப்

பத்திரிகைகளையும் நாடினேன்.  தங்கைகளுடன் விளையாடும் பல்லாங்குழி விளையாட்டும் மாறுதலைத் தந்தது.

தேர்வு துவங்குவதற்கு  இரண்டு வாரங்களுக்கு முன் கடுமையான கோடை நாள் ஒன்றின் முற்பகலில் கல்லூரிக்குச் சென்று நுழைவுச் சீட்டை (hall ticket) வாங்கிக் கொண்டு உச்சி வெயிலில் வீடு திரும்பித் தலைவலி என்று படுத்தேன். இரண்டு மணி நேரப் படுக்கைக்குப் பிறகும் தலையைத் தூக்கி எழுந்திருக்க முடியவில்லை. உச்சந்தலை பல கடப்பாரைகளால் இடிக்கப்படுவது போலும் பல வெப்ப அலைகளால் மோதப்படுவது போலும் வலி பிளந்தது. அம்மா வந்து தொட்டுப் பார்த்து 'உடம்பு கொதிக்கிறது' என்று பதறினார். டாக்டரிடம் சொல்லி மருந்து வாங்கிவந்தார். நேரம் ஆக ஆக எனக்கு முகமெல்லாம் உப்பிவிட்டது போன்ற ஒரு உணர்வு ஏற்பட்டது. மறுநாள் காலையில் பாட்டி வந்து பார்த்து, 'நீர்க்குளுவான் அம்மை (chickenpox) போட்டியிருக்கிறது' என்றார். தலைக்குத் தண்ணீர் போடும் வரை தானும் தாத்தாவும் வீட்டிற்கு வெளியில் நின்றே விசாரித்துக் கொள்வதாகச் சொல்லி என்னென்ன ஆகாரம் கொடுக்கலாம் மற்றும் சமையலில் என்னென்ன நியமங்கள் தேவை என்பது பற்றிப் பேசிவிட்டு பாட்டி விடைபெற்றுச் சென்றார்.

எனக்கு நாலைந்து நாட்கள் வரை தேர்வைப் பற்றிய எந்த சிந்தனையும் தோன்றவில்லை. ஐந்தாம் நாள் அம்மாவிடம் மெதுவாக எப்போது தண்ணீர் போடுவார்களென்று விசாரித்தேன். அம்மா, 'இப்போதைக்கு இல்லை,  நிறைபாரமாகப் போட்டியிருக்கிறது' என்றார். மேலும், மூன்றாம் தண்ணீர் தலைக்குப் போட்ட பிறகுதான் வெளியில் போகலாமென்று பாட்டி கூறியிருப்பதாக அம்மா கூறினார். உடனே நான் விரல் விட்டு எண்ணிப் பார்த்தேன். ஏழாம் நாள் முதல் தண்ணீர் போட்டால் தேர்வு துவங்குவதற்கு முன் தினம் மூன்றாம் தண்ணீர் வருமென்று அம்மாவிடம் சொன்னேன். 'பார்க்கலாம்' என்று கூறி அம்மா நம்பிக்கையூட்டினார். ஏழாம் நாள் காலை ஒரு வயதான அம்மாளை அழைத்துவந்து காட்டி 'தண்ணீர் போடலாமா?' என்று அம்மா விசாரித்தார். அந்த அம்மாள் 'இரண்டு நாள் போகட்டும்' என்று கூறிச் சென்றுவிட்டார்.

முதன்முறையாக எனக்குத் தேர்வு எழுதமுடியாதோ எனப் பயம் தோன்றியது. 'இது கடைசி வருடம், தேர்வு எழுதாவிட்டால் நான் பி.எஸ்சியில் ஃபெயிலானது போல்

ஆகிவிடும், ஒரு வருடம் வீணாகிவிடும்' என அழ ஆரம்பித்தேன். 'ஒன்பதாம் நாள் முதல் தண்ணீர் போட்டால் தேர்வு துவங்குவதற்கு முன் தினம் இரண்டாம் தண்ணீர் போடமுடியும். தேர்வு அன்று காலை ஓரிரு துளி வேப்பிலை-மஞ்சள் தண்ணீரைத் தலையில் தெளித்துவிட்டு அம்பாள் பேரில் பாரத்தைப் போட்டு தேர்வுக்கு அனுப்பலாம்' என வீட்டில் முடிவெடுத்தார்கள். இதற்கிடையில் அப்பா கல்லூரிக்குச் சென்று முதல்வரிடம் நிலவரத்தைக் கூறி நான் தனி அறையில் அமர்ந்து தேர்வு எழுதுவதற்கான அநுமதியை வாங்கிவந்தார்.

தேர்வு நாள் வந்தது. வருடம் முழுவதும் அப்பா எனக்குப் பல பேனாக்கள் வாங்கிக் கொடுத்திருந்தாலும் தேர்வுகள் எழுத நான் எப்போதும் அப்பா எழுதும் பேனாவையே பெற்றுக்கொள்வேன். அம்முறையும் அப்பாவின் பேனாவைப் பெற்றுக்கொண்டேன். அப்பா என்னைத் தேர்வுக்கு அழைத்துச் சென்றதாக ஞாபகம். ஊதிப்போன உடம்பும் முழுவதும் ஆறாத தழும்புகளுமாக இருந்த நான் எல்லாத் தேர்வுகளையும் தனி அறையில் அமர்ந்து எழுதினேன். இரண்டு மாதங்கள் சென்றன.

தேர்வு முடிவுகள் செய்தித்தாளில் வெளியாகி சில தினங்களுக்குப் பிறகு நான் கணிதத்துறைக்கு மதிப்பெண் தாள் வாங்கச் சென்றபோது எனக்குச் சிறப்பு வரவேற்பு கிடைத்தது. நான் ஒவ்வொரு நூறுக்கும் ஒரு இனிப்பு வழங்க வேண்டும் எனக் கூறி வரவேற்றார்கள். மதிப்பெண் தாள் கையில் கிடைத்தவுடன்தான் நான் அந்த வருடத்திய ஐந்து கணிதத் தாள்களிலும் நூற்றுக்கு நூறு வாங்கியிருப்பது தெரிந்தது. இரசாயனப் பாடத்தில் நூற்றி ஐம்பதுக்கு நூற்றிப் பதினெட்டு வாங்கியிருந்தேன்.

நுழைவுச் சீட்டு வாங்கி வந்த நாளிலிருந்து தேர்வு முடியும் வரை நான் புத்தகத்தைக் கையில் எடுக்கவில்லை. இருந்தாலும் தேர்வில் நான் கணிதத்தில் முழு மதிப்பெண்கள் வாங்க முடிந்ததற்குக் காரணம் கணிதத் துறையின் தலைமைப் பேராசிரியையும் இதர பேராசிரியைகளான பார்வதி மேடம், லக்ஷ்மி மேடம், ஜயலக்ஷ்மி மேடம், கமலா மேடம், தேனம்மாள் மேடம், ராஜகுரு மேடம், வஸந்த மாலினி மேடம், நாக கன்னிகா மேடம், ஹில்டா மேடம் முதலியவர்களும் மூன்று வருடங்களும் எங்களுக்குக் கணிதத்தில் சிறப்பாகப் பாடம் எடுத்ததும் நான் வருடம் முழுவதும் கணக்குகள் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்ததுமே ஆகும். அதே போல் இரசாயனத்தில் சாவித்திரி மேடம் என்ற

பேராசிரியையின் சிறப்பாகப் பாடம் எடுக்கும் திறன் காரணமாக, நான் கணிதம் அளவுக்கு இரசாயனத்தில் வருடம் முழுவதும் கவனம் செலுத்தாவிட்டாலும், நல்ல மதிப்பெண்கள் பெறமுடிந்தது. முந்தைய வருடங்களில் கற்பித்த நிர்மலா மேடம், மங்கையர்க்கரசி மேடம் முதலிய தமிழ்ப் பேராசிரியைகளும், ஸரோஜா மேடம் முதலிய ஆங்கிலப் பேராசிரியைகளும், பிருந்தா மேடம், வஸந்தா மேடம் முதலிய பௌதிகப் பேராசிரியைகளும் தங்கள் கற்பிக்கும் திறனால் நினைவில் நின்றவர்கள்.

ஆக, மூன்று வருடங்களுக்கும் சேர்த்துப் பார்த்தால் கணிதத்தில் 700க்கு 700 மதிப்பெண்கள் வாங்கிய ஒரே மாணவியாகவும் முக்கியப் பாடத்தையும் துணைப் பாடங்களையும் உள்ளடக்கிய மூன்றாம் பாகத்தில் (Part III) 1000க்கு 927 மதிப்பெண்கள் வாங்கிக் கல்லூரியின் 1971-74க்கான பி.எஸ்சி, கணிதத்தின் முதல் மாணவியாகவுமிருந்தேன். தோழி லைலா இரண்டாம் இடத்தில் இருந்தாள்.

என்னுடைய எதிர்காலத் தன்னிறைவுக்கு வித்திட்ட கும்பகோணம் அரசினர் பெண்கள் கல்லூரி வாழ்க்கை இனிதே நிறைவு பெற்றது.

## 9. பரிசாகக் கிடைத்த காந்திஜியின் சுயசரிதைப் புத்தகம்

அறிவியல் பட்டதாரிகளில் முதலில் (First Among Science Graduates) வந்ததற்காக எனக்குப் பரிசு கிடைத்த புத்தகம் ‘An Autobiography or The Story of My Experiments with Truth’ (https://www.mkgandhi.org/autobio/autobio.htm) என்ற மகாத்மா காந்தியின் சுயசரிதை ஆகும். விரைவில் அந்தப் புத்தகத்தைப் படித்து முடித்தேன். அதில் என்னைக் கவர்ந்த, முக்கியமான மற்றும் நினைவில் வைத்துக் கொள்ளத் தக்கவை என நான் நினைத்த பகுதிகளை அடைப்புக் குறிகளுக்குள் குறித்து வைத்திருந்தேன் என்பதைப் பின்னாளில் அப்புத்தகத்தைப் பார்த்தபோது கவனித்தேன். அந்தப் புத்தகத்தின் முதல் பகுதியின் ஐந்தாவது அத்தியாயத்தில் காந்திஜி தான் இங்கிலாந்துக்குச் சென்றபோதும் பிறகு தென் ஆஃப்ரிகாவில் சில வழக்கறிஞர்களின் அழகான கையெழுத்தைப் பார்த்த போதும் தனது கையெழுத்துக்காக வெட்கப்பட்டதாகவும் மோசமான கையெழுத்து குறைபாடுள்ள கல்வியின் அடையாளமாகக் கருதப்படவேண்டும் எனக் கண்டுகொண்டதாகவும் குறிப்பிட்டிருந்தார். தான் அதற்கு மேல் முயன்றும் தன்னால் கையெழுத்தைச் சீர்ப்படுத்திக்கொள்ள முடியவில்லை என்றும்

குழந்தைகளுக்கு முதலில் வரையக் கற்றுக் கொடுத்தவிட்டு பிறகு எழுதக் கற்றுக் கொடுத்தால் அவர்கள் அழகாக எழுதுவார்கள் என்றும் கூறியிருந்தார். கல்லூரிக்கு வந்த பிறகு நல்ல கையெழுத்தின் அவசியத்தை உணர்ந்த பின்பும் காலங்கடந்து விட்டதால் மோசமான கையெழுத்தைச் சரி செய்துகொள்ள முடியாத ஏமாற்றத்தில் ஏற்கெனவே இருந்த என் மனதில் இந்தப் பகுதி மிகவும் பரிச்சயத்துடன் ஒட்டிக் கொண்டது.

கையெழுத்தைப் பற்றி இணையற்ற எழுத்தாளரும் பேச்சாளரும் சமூகத் தொண்டருமான திரு.வி.கலியாணசுந்தரனார் அவர்கள் தன்னுடைய சுயசரிதையான ‘வாழ்க்கைக் குறிப்புக்கள்’ என்ற நூலில் குறிப்பிட்டிருப்பது இங்கு தொடர்புடையது. அந்நூலில் அவர் தான் பள்ளியில் படித்தபோது பல பரிசுகள் பெற்றபோதும் தனது தந்தையார் மகிழாமல், ‘கையெழுத்து அழகில்லாமல் பரிசு பெறுவதால் பயனில்லை’ என்ற கருத்தை வலியுறுத்தியதையும் கையெழுத்தைப் பண்படுத்தத் தான் எவ்வளவோ முயன்றும் அது நடக்காமல் போனதையும் நினைவுகூர்ந்திருக்கிறார்.

காந்திஜியின் சுயசரிதைக்குக் கவனம் திரும்புகிறது. அந்த ஆங்கிலப் புத்தகத்தின் இருபத்தி ஓராவது அத்தியாயத்தின் தலைப்பு ‘निर्बल् के बल् राम्’ (பலவீனர்களின் பலம் இராமன்) என ஹிந்தியிலேயே அமைந்திருந்தது. பிரார்த்தனையின் சக்தியை விளக்கும் அந்த அத்தியாயத்தில் நான் குறித்து வைத்திருந்தவற்றில் சில வரிகளை இங்கு தருகிறேன். ‘நம்முடைய நம்பிக்கைகள் நம்மை விட்டு நழுவிய பிறகும் உதவிக்கு யாரும் இல்லாத நிலையிலும் எங்கிருந்து வந்தது என்று தெரியாமல் எப்படியோ உதவி கிடைக்கிறது. பிரார்த்தனை மூட நம்பிக்கை அல்ல; நம்முடைய மற்ற எந்த செயலையும் விட உண்மையான செயல் அதுவே என்றால் மிகையாகாது’ எனப் பொருள்படும், “When every hope is gone, ‘when helpers fail and comforts flee’, I find that help arrives somehow, from I know not where. Supplication, prayer, worship are not superstition; they are acts more real than the acts of eating, drinking, sitting or walking. It is no exaggeration to say that they alone are real and all else is unreal.” என்ற வரிகளில் உள்ள உண்மையை நாம் அனுபவ பூர்வமாக வாழ்க்கையில் உணரமுடியும்.

காந்திஜி தன்னுடைய அறியா வயதிலும் இளம் பருவத்திலும் செய்த சிறிதும் பெரிதுமான தவறுகளை உண்மையாகவும் நேர்மையாகவும் பகிர்ந்துகொண்டிருந்தது அச்சுயசரிதையின் சிறப்பம்சமாகும்.

பின்னாளில் நான் தமிழ்த் தாத்தா மஹாமஹோபாத்யாய உ.வே.சாமிநாதய்யர் அவர்களின் சுயசரிதையான 'என் சரித்திரம்' மற்றும் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களின் சுயசரிதையான 'வாழ்க்கைக் குறிப்புக்கள்' ஆகிய புத்தகங்களைப் படித்தபோதும் இந்த எளிமை, உண்மை மற்றும் நேர்மையைப் பார்க்க முடிந்தது. இவ்விரு அறிஞர்களின் கல்வியின் சிறப்பைப் பற்றி இக்கட்டுரையின் 'எல்லைகளற்ற கல்வி' என்ற தலைப்பில் பார்க்கலாம்.

அப்பா தக்ஷிண பாரத் ஹிந்தி ப்ரசார் சபாவின் ஹிந்தி தேர்வுகளுக்கு மாணவர்களைத் தயார் செய்து அனுப்பி வந்ததால் எனக்கு ஹிந்தி படிக்கவேண்டும் என்ற ஆர்வம் வரவே நானும் அவரிடம் கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன். அடுத்தடுத்த இரண்டு கோடை விடுமுறைகளில் ஆரம்பத் தேர்வுகளான பிராதமிக்கையும் மத்யமாவையும் முறையே மாவட்டத்தின் முதல் மற்றும் இரண்டாமிடங்களைப் பெற்றுத் தேர்ச்சியடைந்தேன். மத்யமா பாடத் திட்டத்தில் மஹாத்மா காந்தியைப் பற்றிய பாடத்திலிருந்த 'கடவுளுக்கு அர்ப்பணம் செய்து அவர் பெயரில் செய்யப்படும் செயல் ஒருபோதும் வீண்போவதில்லை' எனப் பொருள்படும் 'जो कार्य ईश्वर् को अर्पितकर् उस्के नाम् पर् किया जाता है, वह कभी बेकार् नहीं होता है' என்ற வரி ஹிந்தி வாக்கியமாகவே என் மனதில் தங்கிப் பிற்காலத்தில் எனக்கு வழிகாட்டியாக உதவியது.

## 10. தங்கை வஸந்தாவின் பி.யு.ஸி. பொதுத்தேர்வும் மேற்கல்வியும்

எனது அடுத்த தங்கை வஸந்தாவும் அப்பாவின் வழிகாட்டுதலில் என்னைப் போலவே சற்று விரைவாகப் படித்து வந்தாள். நான் பி.எஸ்சியின் கடைசி வருடத்திலிருந்த போது அவள் பி.யு.ஸி. படித்தாள். சிறப்புத் தமிழ் (Advanced Tamil), பூகோளம் (Geography), வீட்டுக்கலை (Household arts) என்பன அவளது பாடங்கள். அவள் ஒருநாள் கல்லூரியில்

மேடையேறி வீட்டுக்கலைப் பாடத்திற்காகப் பரிசு வாங்கியபோது எனக்கு அளவில்லாத பெருமையாக இருந்தது.

அவளது பொதுத் தேர்வும் துவங்கியது. வீட்டிலிருப்பவர்கள் தேர்வு எழுதிவிட்டு வந்த பிறகு வினாத்தாளை அலசி மதிப்பெண் போட்டுப் பார்ப்பது என்னுடைய வழக்கம். விடை எவ்வாறு எழுதப்பட்டது - மிக நன்றாகவா, நன்றாகவா, சுமாராகவா, தவறாகவா அல்லது எழுதவேயில்லையா என்பதை அவர்களிடமே விசாரித்து அல்லது தேவைப்பட்டால் புத்தகத்தின் உதவியுடன் விடையைச் சரி பார்த்து மிகவும் கண்டிப்பான ஆசிரியர் போல் என்னைப் பாவித்துக் கொண்டு நான் போடும் மதிப்பெண்கள் பெரும்பாலும் பின்னால் ஆசிரியர் திருத்தி வரும் அசல் மதிப்பெண்களின் அருகிலேயே இருக்கும். அதன்படி தங்கை ஒவ்வொரு தேர்வும் எழுதிவிட்டு வந்த பிறகு மதிப்பெண் போட்டு வந்தேன். எல்லாம் நன்றாக எழுதி வந்தவள் பூகோளத் தேர்வு எழுதிவிட்டு வந்த பிறகு, 'மிகவும் கடினமாக இருந்தது, நான் ஃபெயிலாகி விடுவேன்' என்று அழுதாள். வழக்கம்போல் அவளை வைத்துக்கொண்டு வினாத்தாளை அலசி மதிப்பெண் போட்டதில் பாஸ் மார்க் வரும் வாய்ப்பு இருந்ததாகத் தோன்றியது. நான் மிகவும் கடுமையாக மதிப்பிட்டே பாஸ் மார்க் வருவதால் அவள் கண்டிப்பாக பாஸ் செய்து விடுவாள் என்று கூறினேன்.

இரண்டு மாதங்கள் கழித்து தேர்வு முடிவுகள் செய்தித்தாளில் வெளியிடப்பட்டன. அப்பா செய்தித்தாள் வாங்கக் கடைக்குக் கிளம்பும் முன் தங்கையின் தேர்வு எண்ணையும் வாங்கிக்கொண்டார். சற்று கோபமாகவும் வருத்தமாகவும் செய்தித்தாளுடன் திரும்பி வந்தவர் 'நம்பர் இல்லை' என்றார். நான் முதலில் அதிர்ந்து போனாலும் சற்று சுதாரித்துக்கொண்டு, 'மூன்றாம் வகுப்பிலா பார்த்தாய், அப்பா?' என்று விசாரித்தேன். 'பிறகு வேறு எங்கு பார்க்க வேண்டும்?', என அப்பா சத்தம் போட்டார். நான் உடனே அப்பா கையிலிருந்து செய்தித்தாளை வாங்கி இரண்டாம் வகுப்பில் எண்ணைத் தேடினேன். என் நம்பிக்கை வீண் போகவில்லை. 'அவள் இரண்டாம் வகுப்பில் பாஸ் செய்திருக்கிறாள், பார் அப்பா' என்று மகிழ்ச்சியுடன் காட்டிய பிறகு தங்கைக்கு உயிரே வந்தது போல இருந்தது.

அவள் படித்த கலையியல் பிரிவில் மதிப்பெண் வாங்குவது கடினம் என்பதாலும் பூகோளத் தாள் மிகவும் கடினமாக இருந்ததாக அவள் சொல்லியிருந்ததாலும் அப்பா நேரே

மூன்றாம் வகுப்பில் எண்ணைத் தேடியிருக்கிறார். ‘அப்பா! அவள் பூகோளம்தான் சரியாக எழுதவில்லையே தவிர மற்ற தேர்வுகளை நன்றாக எழுதியிருந்தாள். எனவே அவளுக்கு பூகோளத்தில் பாஸ் மார்க் கிடைத்தால் இரண்டாம் வகுப்பில் பாஸ் பண்ணிவிடுவாள் என்று எனக்குத் தெரியும்’, என்றேன். அதே போல, சில நாட்களில் மதிப்பெண் பட்டியல் வந்த பிறகு அவள் பூகோளத்தில் சரியாகப் பாஸ் மார்க்கும் மற்ற பாடங்களில் நல்ல மதிப்பெண்களும் எடுத்திருந்ததைப் பார்க்கமுடிந்தது. (நான் பி.யு.ஸி. படித்தபோது இருந்த கிரேட் முறை மதிப்பீடு மூன்று வருடங்களுக்குள் மதிப்பெண் முறைக்கு மாறிவிட்டிருந்தது.)

தங்கையையும் பி.ஏ.(BA) படிப்பில் சேர்க்க வேண்டுமென என் விருப்பத்தை அப்பா-அம்மாவிடம் தெரிவித்தேன். ‘அவளால் மூன்று மைல் நடந்து போய்வர முடியாது’ என்றார் அம்மா. எனக்கு பி.யு.ஸி. விடுமுறையில் கால்களில் வலியும் வீக்கமும் வந்து குணமானதைப் போல அவளுக்கும் அப்போதுதான் கால்களில் வலியும் வீக்கமும் வந்து குணமாகியிருந்தன. தங்கையும் எதுவும் வற்புறுத்தவில்லை. அப்பா அவளைத் தட்டச்சு (Typewriting) வகுப்புக்களில் சேர்த்தார். ஆங்கிலத்திலும் தமிழிலும் தட்டச்சின் உயர்மட்ட (Typewriting Higher) தேர்வுகளில் தேர்ச்சி பெற்றாள். ஆங்கிலச் சுருக்கெழுத்தும் கற்றுக்கொண்டாள். அவளும் அப்பாவிடம் ஹிந்தி கற்றுக்கொண்டு ஹிந்தி ப்ரசார் சபாவின் இரண்டாவது தேர்வான மத்யமாவை நேரே எழுதி அதில் முதல் வகுப்பில் தேர்ச்சியடைந்தாள்.

## 11. பட்ட மேற்படிப்பும் திருமணமும்

எம்.எஸ்சி படிக்கவேண்டும் என்ற விருப்பத்தை நான் முன்வைத்தவுடன் அம்மா, ‘படித்துக்கொண்டே போனால் அதைவிட அதிகம் படித்த மாப்பிள்ளையைத் தேடுவது கஷ்டம்’ எனத் திரும்பவும் என்னுடைய திருமணப் பிரச்சினையை முன்வைத்தார். ‘எனக்குப் படித்தால் போதும். நீங்கள் எனக்கு மாப்பிள்ளை பார்க்கும்போது நான் எந்த நிபந்தனையும் போடமாட்டேன்’ என நான் தீர்மானமாகக் கூறினேன். அப்பாவும் எனக்கு ஆதரவாகப் பேசினார்.

கும்பகோணத்தில் அரசினர் பெண்கள் கல்லூரியில் அப்போது பட்ட மேற்படிப்பு இல்லாததால் அரசினர் ஆண்கள் கல்லூரியிலேயே பெண்களும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். 1867ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வரும் அக்கல்லூரி தென்னிந்தியாவின் கேம்பிரிட்ஜ் (Cambridge of South India) என ஒரு காலத்தில் அழைக்கப்பட்டது. காவேரி ஆற்றங்கரையில் அமைந்துள்ள அக்கல்லூரிக்குப் பல சிறப்புக்களுண்டு. அக்கல்லூரியில் தமிழ்த் தாத்தா மஹாமஹோபாத்யாய உ.வே.சாமிநாதய்யர் அவர்கள் பேராசிரியராகப் பணிபுரிந்திருக்கிறார். ரைட் ஆனரபிள் (Right honourable) வி.எஸ்.ஸ்ரீனிவாச சாஸ்திரி அவர்களும் கணித மேதை இராமானுஜன் அவர்களும் அங்கு மாணவர்களாக இருந்திருக்கிறார்கள்.

அப்பா எனக்காக அக்கல்லூரியிலிருந்து எம்.எஸ்சி சேர்க்கைக்கு விண்ணப்பம் வாங்கிவரச் சேர்க்கை நடைமுறைகளும் இனிதே முடிந்தன. எம்.எஸ்சி முதலாமாண்டு வகுப்பில் லைலாவும் நானுமாக இரண்டு மாணவிகளும் பதினெட்டு மாணவர்களுமாக மொத்தம் இருபது பேர் இருந்தோம். ஸ்ரீதர், வெங்கடேஷ், பழனிவேலு, சத்தியநாதன் எனச் சில சக மாணவர்களின் பெயர்கள் ஞாபகத்திலிருக்கின்றன.

கல்லூரி எங்கள் வீட்டிற்கு மிகவும் அருகாமையிலிருந்தது. எங்கள் வீட்டிலிருந்து கிளம்பிக் கீழ டபீர்த் தெரு வழியாகவும் ஸஹாஜி நாயக்கர் தெரு வழியாகவும் நடந்தால் பத்தே நிமிடத்திற்குள் கல்லூரி வந்துவிடும். சுவாமிமலையிலிருந்து வந்துகொண்டிருந்த எம்.எஸ்சி சீனியர் தோழி ஜயந்தியும் எம்.ஏ. பொருளாதாரத்தில் சேர்ந்திருந்த தோழி பவானியும் எங்கள் வீட்டிற்கு வர நாங்கள் ஒன்றாகக் கல்லூரிக்குச் செல்வது வழக்கம். காவிரியில் நீர் நிறைந்திருக்கும் காலங்களில் சிலுசிலுவென்ற காற்று சூழப் பாலத்தைக் கடந்து கல்லூரிக்குச் செல்வதே ஒரு சுகமான அனுபவமாக இருக்கும்.




(நன்றி : கல்லூரியின் இணையதளம்

http://www.gacakmu.in )

எம்.எஸ்சி. படிப்பின் கட்டண முறை என்பது டேர்முக்கு (per term) இருநூற்றி நாற்பது ரூபாயாக வருடத்திற்கு மூன்று முறைகள் (three terms) என இரண்டு வருடங்களுக்குச் செலுத்துவதாக அமைந்திருந்தது. பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கான தேசிய உதவித்தொகை புதுப்பிக்கப்பட்டு மாதம் நூறு ரூபாய் வீதம் இரண்டு வருடங்களுக்கும் அளிக்கப்படுமெனக் கடிதம் வந்தது. முதல் வருடத்தில் அறுநூறு மதிப்பெண்களுக்கான மூன்று தாள்களும் இரண்டாம் வருடத்தில் எண்ணூறு மதிப்பெண்களுக்கான நான்கு தாள்களுமென எம்.எஸ்சியின் பாடமுறை அமைந்திருந்தது. முதல் வருடப் பொதுத் தேர்வில் 600க்கு 446 மதிப்பெண்கள் பெற்று முதலிடத்திலிருந்தேன்.

துறைப் பேராசிரியர் எல்.ஆர் சார், டாக்டர் ஏ.கே சார், பி.எம்(PM) சார், பி.டி(PD) சார், பி.டி.ஜே(PDJ) சார், எம்.ஆர் சார், ராமமூர்த்தி சார், மங்கல்ராஜ் சார், கனகராஜ் சார், முத்துசாமி சார், டாக்டர் சடகோபன் சார் முதலிய பல பேராசிரியர்களின் சுறுசுறுப்பான வகுப்புக்களில் இரண்டு வருடங்கள் வேகமாகக் கடந்தன. (துவக்கக் கல்வி பள்ளியிலிருந்து பட்ட மேற்படிப்புக் கல்லூரி வரை நான் நினைவு கூர்ந்திருக்கும் ஆசிரியர்களின் பெயர்கள் இக்கட்டுரை எழுதிய சமயத்தில் என்னுடைய ஞாபகத்துக்கு வந்தவை.)

செய்தித்தாளையும் வாரப் பத்திரிகைகளையும் மாதப் பத்திரிகையான கலைமகளையும் கல்லூரி நாட்களிலும் விரிவாகப் படித்துவந்தேன். அக்காலத்தில் அம்பை, அய்க்கண், சு.சமுத்திரம், கரிச்சான் குஞ்சு, உஷா சுப்பிரமணியன் முதலிய பல எழுத்தாளப் பெருமக்களின் சிறுகதைகளை விரும்பிப் படித்தேன். தொடர்கதைகளுள் சிலவற்றை மட்டுமே படித்தேன். இந்துமதி அவர்களின் 'தரையில் இறங்கும் விமானங்கள்' மற்றும் சிவசங்கரி அவர்களின் '47 நாட்கள்' ஆகிய தொடர்கதைகள் என் மனம் கவர்ந்தன. கமலா சடகோபன் அவர்களால் எழுதப்பட்டுக் கலைமகளில் பிரசுரிக்கப்பட்ட பரிசு பெற்ற நாவலான 'கதவு' மிகவும் பிடித்துப்போனது. அச்சமயத்தில் வெளிவந்த வாஸந்தி அவர்களின் தொடர்கதைகள் வடக்கு அல்லது வடகிழக்கு மாநிலங்களில் நிகழ்வதாக அமைந்திருந்த தங்களது வித்தியாசமான பின்புலத்தாலும் கதையின் போக்கு வெறும் உரையாடல்களாக மட்டுமல்லாமல் ஆங்காங்கே சற்றுச் சிந்தனையைத் தூண்டியதாலும் என்னால் விரும்பப்பட்டன. டாக்டர் எம்.எஸ்.உதயமூர்த்தி அவர்களின் தன்னம்பிக்கைக் கட்டுரைகளையும் மணியன் அவர்களின் பயணக் கட்டுரைகளையும் ஆர்வத்துடன் படித்தேன்.

1975ஆம் வருடம் நடந்த மதராஸ் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு பி.எஸ்சி பட்டத்தை நேரில் பெற்றுக் கொள்வதற்காக அப்பா என்னை மதராஸ் அழைத்துச் சென்றார். தாம்பரத்திலிருந்த பேபி அத்தையின் வீட்டில் தங்கினோம். படிப்பில் எனக்கு இருந்த ஆர்வத்தைத் தாம்பரம் அத்திம்பேர் எப்போதும் பாராட்டுவார். தாம்பரத்திலிருந்து மின்சார வண்டியில் சென்று பட்டமளிப்பு விழாவில் பங்குகொண்டோம். பல்கலைக்கழகத்தில் அப்பாவின் பழைய மாணவர் ஒருவர் அவரை அடையாளம் கண்டுகொண்டு மிகுந்த மரியாதையுடன் பேசியதில் அப்பாவுக்குத் தனி மகிழ்ச்சி ஏற்பட்டது.

அவ்வருடத்தின் இரண்டாம் பாதியில் நடந்த இன்னொரு முக்கியமான விஷயம் இராஜ அத்தையின் பெண்ணின் திருமணமாகும். நான் பிறந்த வருடத்தில் ஒரு பன்னிரண்டு மாத கால இடைவெளியில் பாட்டி-தாத்தாவுக்கு நான்கு பேத்திகள் பிறந்தார்கள் என வீட்டில் கூறுவது வழக்கம். இராஜ அத்தை, பட்டு அத்தை மற்றும் சம்பு அத்தையின் பெண்களே என்னைத் தவிரப் பிறந்த மற்ற குழந்தைகள். அந்த நால்வரில் ஒரு பெண்ணுக்குத்தான் இப்போது திருமணம் நடந்தது.

எம்.எஸ்சியின் இறுதி வருடத்தின் பொதுத் தேர்விற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு என்னுடைய ஜாதகம் கணிக்கப்பட்டது. அம்மா மற்றும் பாட்டி என்னுடைய திருமணத்தைத் தாமதியாது நடத்திவிடுவதில் முனைப்பாக இருந்தார்கள். என்னுடைய படிப்பு முடிந்ததும் என்னை வேலைக்கு அனுப்புவதை வீட்டில் யாரும் விரும்பவில்லை என்பதை எனக்குத் தெளிவாக்கினார்கள். தெரிந்தவர்களிடம் வரன் இருந்தால் கூறுமாறு சொல்லி வைத்தார்கள். ஆனால் ஒரு நிலையில் அவர்கள் உறவினர்களிடம் சம்பந்தம் பேச முனைவது போலத் தோன்றவே நான் சற்று விழித்துக் கொண்டேன். நான் அடிப்படையில் ‘சுதந்திரம் விரும்பி’ என்பதால் எனக்கு அந்த அணுகுமுறை பிடிக்கவில்லை. ‘இவர்களுடைய கட்டுப்பாட்டில் யார் மீண்டும் மாட்டிக் கொள்வது! உறவினர்கள் என்பதால் திருமணம் செய்துகொள்ளுமிடத்தில் குரலை உயர்த்திப் பேசக் கூட முடியாது!’ என்று தோன்றியது. ‘எனக்கு உறவினர்கள் வீட்டில் வரன் பார்க்காதீர்கள்’ என்ற வேண்டுகோளுடன் அவர்கள் முன் போய் நின்றேன். ஏற்கெனவே நான், ‘நீங்கள் எனக்கு மாப்பிள்ளை பார்க்கும்போது எந்த நிபந்தனையும் போடமாட்டேன்’ என உறுதியளித்திருந்ததால் அம்மா என்னை முறைத்தார். ‘உண்மையாக இது மட்டும்தான் நிபந்தனை, வேறு எதுவும் சொல்லமாட்டேன்’ எனத் தீர்மானமாகக் கூறினேன்.

பாட்டி அடுத்த ஓரிரு வாரங்களில் தன் அக்கம்பக்கத்தில் தெரிந்தவர்கள் மூலமாக பி.காம். (B.com) படித்துவிட்டு ‘ப்ளூ ஸ்டார் கம்பெனி’யில் (Blue Star Ltd) வேலை பார்க்கும் ஒரு வரனைக் கொண்டு வந்தார். ஜாதகப் பொருத்தம் நன்கு அமைந்திருப்பதாக எதிர் வீட்டிலேயே இருந்த ஜோசியரிடம் கேட்டுத் தெரிந்துகொண்டு வந்தார்கள். இவர்களுடைய வேகத்தைக் கண்டு திகைத்துக் கொண்டே நான் தேர்வுக்குத் தயார் செய்து கொண்டிருந்தேன். ஆனால் தாத்தா-பாட்டியை உத்தேசித்து எனக்குக் காலாகாலத்தில் திருமணம் செய்துகொள்ளும் கடமையுமிருக்கிறது எனத் தோன்றியது. இதற்கிடையில் என்னுடைய மூன்று தங்கைகளுக்கும் தம்பிக்கும் தொடர்ச்சியாக நீர்க்குளுவான் அம்மை வார்த்து உரிய காலத்தில் தண்ணீர் போட்டு முடித்ததில் சுமார் இருபது நாட்கள் சென்றன. பிறகு ஒரு நாள் அந்த வரனுடைய பெற்றோர் உள்ளூர் உறவினர்களுடன் வந்து என்னைப் பார்த்துச் சென்றனர். என்னுடைய படிப்பு விடுமுறையின் (study holidays) போதே இதெல்லாம் நடந்ததற்குக் காரணம் அவர்களுடைய பிள்ளை கும்பகோணத்திற்குத் தன்னுடைய நண்பர் திருமணத்திற்கு

ஏப்ரல் மாதம் முதல் தேதி வரும் போது அவரை எப்படியாவது சம்மதிக்க வைத்துப் பெண் பார்க்க அழைத்து வர அந்தப் பெற்றோர் ஆசைப்பட்டதே ஆகும்.

ஏப்ரல் மாதம் முதல் தேதி வந்தது. தன் பிள்ளையை அழைத்து வர முயற்சி செய்து கொண்டிருந்த அந்த அம்மா இடையில் இரண்டு-மூன்று முறை எங்கள் வீட்டிற்கு வந்து ‘வருவது நிச்சயமில்லை’ என்றும் ‘அப்படியே வந்தாலும் கேஸரி, பஜ்ஜி, பட்டுப்புடவை முதலிய சம்பிரதாயங்கள் வேண்டாம்’ என்றும் சொல்லிச் சென்றார். ஆனால் மாலையில் பெற்றோர், அவர்களது மூத்த பிள்ளை, இப்போது திருமணம் செய்துகொள்ள இருக்கும் பிள்ளை, ஒரு உறவினர் மற்றும் ஊர்க்காரர் ஒருவர் என வந்தனர். அவர்கள் ‘வருவது நிச்சயமில்லை’ என்று சொல்லியிருந்ததால் அம்மா கேஸரி-பஜ்ஜி செய்யவில்லை. என்னையும் பட்டுப்புடவை அல்லாத ஒரு நல்ல புடவையையே கட்டிக்கொள்ளச் செய்திருந்தனர். அவர்கள் உள்ளே வரும்போதே நான் பிள்ளையைக் கவனிக்க நேர்ந்தது. அவர் என் தாத்தாவிடம் கை கொடுத்து ‘சீதாராமன்’ என்று அறிமுகம் செய்துகொண்ட போது நட்புணர்வும் பெருந்தன்மையும் அவரது முகத்தில் வெளிப்பட்டன. தாத்தாவுடன் சென்று பல முறை இராமாயணம் கேட்டிருந்ததாலும் தியாகராஜ கீர்த்தனைகளின் கேள்வி ஞானத்தாலும் அந்தப் பெயர் எனக்குப் பிடித்திருந்தது.

வரவேற்பும் அறிமுகங்களும் முடிந்து அவர்கள் அமர்ந்தனர். மைசூர்பாகு-மிக்சர்-காபி முடிந்த பிறகு என்னைப் பாடச் சொன்னார்கள். நான் பாடுவதற்கு உதவி செய்ய, முன்பே செய்து கொண்டிருந்த ஏற்பாட்டின்படி, தங்கை வஸந்தா முன்வந்தாள். அடாணா இராகத்தில் ‘ராம நாமமு ஜன்ம ரக்ஷக மந்த்ரம்’ என்ற தியாகராஜ கீர்த்தனையைத் தங்கையுடன் பாட ஆரம்பித்து, ‘இவர்களுடைய பதில் என்னவாக இருந்தாலும் என்னைக் காக்கப் போவதென்னவோ இராமர்தான்’ என இராமரை மனதார நினைத்து வரிகளின் பொருளில் மட்டும் நான் லயித்துக் கொண்டிருக்கத் தங்கை வரிகளுக்கு இசை வடிவம் கொடுத்துக் கொண்டிருந்தாள். பிறகு சற்று நேரம் அப்பா, அம்மா, தாத்தா மற்றும் பாட்டி அனைவரும் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் வீட்டிற்குச் சென்று கலந்து பேசி முடிவு சொல்லி அனுப்புவதாகக் கூறி விடைபெற்றுச் சென்றனர்.

மறுநாளே முடிவு தெரியாததால் அம்மா சற்று ஏமாற்றமடைய ஆரம்பித்தார். மூன்றாம் நாள் அவர்களுடன் வந்திருந்த, U.G. என்றழைக்கப்பட்ட U.G.ஜயராம மாமா என்ற பெயருள்ள, அவர்களது ஊர்க்காரர் எங்கள் வீட்டிற்கு வருகை தந்து அவர்கள் சம்மதம்

தெரிவிக்கச் சொன்னதாகக் கூறினார். ஏப்ரல் ஐந்தாம் தேதியே நிச்சயதார்த்தம் வைத்துக் கொள்ளலாம் என்று அவர்கள் சொல்லியனுப்பியதாகவும் கூறினார். அப்போது தொலைபேசி வசதி இல்லாததால் இரு வீட்டாருக்குமிடையே கருத்துப் பரிமாற்றங்களுக்கு கடிதப் போக்குவரத்தும் நேரடி சந்திப்பும் தவிர U.G.மாமாவின் பங்களிப்பும் கணிசமாக இருந்தது.

'சம்மதம்' என்ற செய்தி என்னுள் மணமகனிடமும் அவரது பெற்றோரிடமும் நன்றிப்பெருக்கை (gratefulness) எழுப்பியது. என்னுடைய தோழிகள் லக்ஷ்மியும் விஜியும் கிட்டத்தட்ட நான்கு வருடங்களுக்கு முன்பே, 'என்னுடைய மாமா கிராஜுவேட் (graduate), மாமி போஸ்ட் கிராஜுவேட் (post graduate)' என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்வார்கள். ஆனால் அத்தகைய திருமணங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக பரவலாக இருந்தனவே தவிர அவை சாதாரணமாக ஆவதற்கு இன்னும் பதினைந்து ஆண்டுகளாவது பிடித்தன. அந்த வித்தியாசத்தைப் பொருட்படுத்தாமல் அவர்கள் தெரிவித்த சம்மதத்தால் எனக்கு ஏற்பட்ட நன்றிப்பெருக்கு வாழ்க்கையின் பல இழுபறிகளுக்கிடையில் அழியாமல் என்னுடைய மணவாழ்க்கையை உறுதிப்படுத்தும் காரணிகளில் ஒன்றாக நின்றது. அவர்களிடமிருந்து பதில் வருவதற்குள் கடந்திருந்த நாற்பத்தி எட்டு மணி நேரத்தில் அம்மா தன் ஏமாற்றங்களையும் தவிப்புக்களையும் வெளிப்படுத்தியிருந்த விதங்களும் எனக்கு அந்த சம்மதத்தின் முக்கியத்துவத்தைப் புரியவைத்திருந்தது. வளரும் பருவத்தில் கடினமாக இருந்தாலும் என் அம்மாவின் கண்டிப்பான வளர்ப்பும் அந்த வரனைக் கொண்டுவந்திருந்த பாட்டியின் கைராசியும் என்னுடைய மணவாழ்க்கையின் உறுதிக்குப் பங்களித்தன.

கும்பகோணத்திலிருந்து பத்து கி.மீ. தொலைவிலிருந்த வேப்பத்தூர் மணமகன் வீட்டாரின் பூர்வீக ஊராகும். அங்குதான் திருமண நிச்சயதார்த்தம் நடைபெற இருந்தது. என்னுடைய அம்மாவுக்கும் பாட்டிக்கும் பஸ்ஸில் சென்றால் தலைசுற்றல் ஏற்படும் என்பதால் நிச்சயதார்த்தத்திற்கு மாட்டுவண்டியில் போக முடிவு செய்தார்கள். தாத்தா தன் பண்ணை முதலாளியிடம் கேட்டு அவரது இரட்டை மாட்டுவண்டியை எடுத்துவந்தார். தாத்தா வண்டி ஓட்ட பாட்டி, அம்மா, அப்பா மற்றும் தம்பி ரவி வண்டியில் பயணித்து வேப்பத்தூர் சென்று நிச்சயதார்த்தத்தை நடத்திக்கொண்டு வந்தனர்.

என்னுடைய திருமண நிச்சயதார்த்தத்திற்குப் பிறகே என் பொதுத் தேர்வுகள் துவங்கி நடந்ததாக ஞாபகம்.

என்னுடைய திருமணத்தின் போது ஆபரணத் தங்கம் சவரனுக்கு நானூற்றி இருபத்தி நான்கு ரூபாய் விற்றது. ஆனால் அப்பா என் திருமணத்துக்கு வேண்டிய சில நகைகளை நான் துவக்கப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் சவரன் நூறு ரூபாய்க்கு விற்றபோது செய்து வைத்திருந்தாராதலால் திருமணச் செலவுகளைச் சமாளிப்பது அவருக்குச் சற்று சுலபமாக இருந்தது. என்னுடைய பாட்டி தன்னுடைய ஏழாவது வயதில், 1920ஆம் வருடத்தில், நடந்த திருமணத்தின் போது சவரன் பதின்மூன்று ரூபாய்க்கு விற்றதை அடிக்கடி நினைவுகூர்வார்.

எங்கள் திருமணம் கும்பகோணம் மடத்துத் தெருவில் காளஹஸ்தீஸ்வரர் கோயில் பக்கத்திலிருந்த இராஜம்மாள் கல்யாண மண்டபத்தில் 1976ஆம் வருடம் ஜூன் மாதம் ஏழாம் தேதியன்று கடவுள் அருளில் இனிதே நடந்தது. என்னுடைய திருமணத்தின் போது தம்பி ரவியின் உபநயனமும் நடைபெற்றது. அந்த வருடத்தில் தங்கை வஸந்தா சுருக்கெழுத்து கற்றுக் கொண்டிருந்தாள். ஞானம், ரவி மற்றும் ஜயந்தி முறையே பத்தாம், ஏழாம் மற்றும் ஐந்தாம் வகுப்புக்களில் படித்துக்கொண்டிருந்தனர்.



எம்.எஸ்சியின் இறுதி வருடப் பொதுத் தேர்வு முடிவுகள் என் திருமணத்திற்குப் பிறகு வந்தன. இறுதி வருடத்தின் 800 மதிப்பெண்களுக்கு 596 மதிப்பெண்கள் வந்திருந்தன. இரு

வருடங்களுக்கும் சேர்த்து மொத்தமாக 1400க்கு 1042 மதிப்பெண்கள் என 74.4 சதவீதத்துடன் நான் கல்லூரியின் 1974-76ஆம் வருட எம்.எஸ்சி வகுப்பின் முதல் மாணவியாக வந்திருந்தேன். அதற்காகக் கணவர் எனக்குக் கைக்கடிகாரம் பரிசளித்தார்.

'தங்களுடைய குழந்தை குற்றம் செய்தால் பெற்றோர் பொறுக்க மாட்டார்களா என்ன!' ('जनित्री पिता च स्वपुत्रापराधं सहेते न किं') என்று வடமொழியிலமைந்த சுப்பிரமணிய புஜங்கத்தில் ஆதிசங்கரரும்

**'**எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு! பொறுப்பதுன் கடன்**'**

என்று தமிழில் கந்தர் சஷ்டி கவசத்தில் தேவராய சுவாமிகளும் பெற்றவர்களது பொறுமையை உதாரணம் காட்டிக் கடவுளின் பொறுமையை வேண்டுகிறார்கள். அறியாமலும் அறிந்தும் நான் செய்த பிழைகளையும் குற்றங்குறைகளையும் பொறுத்துக்கொண்டு என்னை வாழ்த்த எப்போதும் தயாராக இருந்த அம்மா-அப்பா மற்றும் பாட்டி-தாத்தாவின் கருணையை நினைக்கும்போது கடவுளை மனதினால் சிந்திக்கப் பிழைகள் எரிந்து தூசாகும் என ஆண்டாள் பாடிய 'மனதினால் சிந்திக்கப் போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்' என்ற திருப்பாவை வரி ஞாபகத்துக்கு வருகிறது. அவர்களது ஆசிர்வாதத்துடன் இல்லறத்தில் அடியெடுத்துவைத்தேன்.

## 12. வாழ்க்கைச் சித்திர ஆல்பங்கள்

நான் என் வாழ்க்கைச் சித்திரங்களை 'அப்பா கொடுத்த கல்வி', 'இல்லறம்', 'ஐஓபி தந்த செல்வமும் கல்வியும்' மற்றும் 'விட்டு விடுதலையாக...' என நான்கு ஆல்பங்களாகத் (album) தொகுத்துவைக்க நினைத்தேன். வீட்டின் சுப நிகழ்ச்சிகளைப் புகைப்படமெடுத்த புகைப்படக்காரர் ஆயிரக் கணக்கில் டிஜிடல் இமேஜ்களை (digital images) ஸி.டி.யிலோ (CD) அல்லது பென் டிரைவிலோ (pen drive) கொடுத்த பிறகு அவற்றிலிருந்து நிகழ்ச்சியின் தன்மைக்கேற்ப நூறு அல்லது இருநூறு இமேஜ்களை மட்டும் ஆல்பத்திற்காகத் தேர்ந்தெடுக்கும் போது எந்த கவனத்தைச் செலுத்துவேனோ அந்த கவனத்தை இந்த வாழ்க்கைச் சித்திர ஆல்பத்தின் தொகுப்பிலும் செலுத்தவிருக்கிறேன். தரம், முழுமை, நயம், தொடர்ச்சி மற்றும் தொடர்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வாழ்க்கைச் சித்திரங்களைத் தொகுத்து ஆல்பங்களை உருவாக்கத் துணை புரியுமாறு கடவுளிடம் பிரார்த்தித்துத் துவங்கியிருக்கிறேன்.

பார்க்கப்போனால் நான் இந்த நிலையில் ‘இல்லறம்’ என்ற ஆல்பத்தின் தொகுப்புக்குப் போயிருக்கவேண்டும். ஆனால் இக்கட்டுரையிலேயே என் உடன் பிறந்தவர்களின் கல்வி, திருமணம் முதலிய அம்சங்களையும் பதிவு செய்ய விரும்பினேன். பிறகு, கும்பகோணம் வீடு இருந்த வரைக்குமான நிகழ்வுகளையும், கடைசியாக, கட்டுரை எழுதும் நாள் வரையிலான பிறந்த வீட்டு நிகழ்வுகளையும் எழுதுவதற்கு இக்கட்டுரையே பொருத்தமான இடம் எனத் தோன்றியதால் கட்டுரை தொடர்கிறது. எனவே இடைப்பட்ட காலத்திய என் இல்லற வாழ்க்கையின் சில மேல் நிகழ்வுகளையும் இங்கு குறிப்பிடுவது தவிர்க்க முடியாததாகிவிட்டது. ஆனால் அவற்றைத் தேவையான அளவுக்கு மட்டுமே இங்கு அறிமுகப்படுத்தியிருக்கிறேன்.

## 13. தம்பியின் நலக் குறைவு

என்னுடைய திருமணமான முதல் வருடம் பண்டிகைகளுக்குப் போவதும் வருவதுமாக பிறந்த வீட்டினரைப் பார்க்கக் கிடைத்த வாய்ப்புக்கள் மகிழ்ச்சியளித்தன. ஆனால் என் திருமணமாகி பத்தொன்பது மாதங்களுக்குப் பின் வந்த எனது வளைகாப்பு-சீமந்தத்திற்கு என்னுடைய அப்பா, அம்மா மற்றும் தம்பி மதராஸுக்கு எங்கள் இல்லத்துக்கு வந்திருந்தபோது கொண்டாட்டங்களுக்கும் தம்பி கொடுத்த தொந்திரவுகளுக்கும் இடையில் அலைக்கழிக்கப்பட்ட அம்மாவின் கண்களில் துளித்த கண்ணீரும் அவனைச் சமாளிக்க முடியாமல் அப்பா சோர்ந்து போனதும் எனக்கு அதிர்ச்சியளிப்பவைகளாக இருந்தன. சீமந்தம் முடிந்த மறுநாள் நானும் அவர்களுடன் பிரசவத்திற்காகப் பிறந்த வீட்டிற்கு அனுப்பப்பட்டேன். கும்பகோணத்திற்குப் புகைவண்டியில் செல்லும்போது நிகழ்ந்த தம்பியின் பிடிவாதங்களும் கோபமும் அழுகையும் என்னைத் திகைப்பிலாழ்த்தின. ஐந்து மாதங்களுக்கு முன்பு பார்த்தபோது பள்ளிக்குச் சென்றுகொண்டும், பஜனைப் பாடல்களை இனிமையாகப் பாடிக் கொண்டும் கடைக்குச் சென்று சாமான்களை வாங்கி வந்துகொண்டுமிருந்த தம்பிக்கு என்னவாயிற்று என எனக்குக் குடைந்துகொண்டிருந்தது.

ஊருக்குப் போனவிட்டு சில நாட்களாக அவன் ஏதோ பயந்துகொண்டிருப்பதாகவும் அதற்கான சிகிச்சை நடந்துவருவதாகவும் தெரிந்தது. ஜோசியர்களிடம் அவன் ஜாதகத்தைக் காட்டி வீட்டுப் பெரியவர்கள் கேட்டபோது அவர்கள் அதற்குப் பல பரிகாரங்களைக்

கூறினார்கள். அவற்றையெல்லாம் செய்துகொண்டே சிகிச்சைக்காகத் தஞ்சாவூர் அரசு மருத்துவமனைக்கும் வாரம் ஒரு முறை அவனை அழைத்துச்சென்று வந்தார்கள். தம்பியின் உடல்நலக் குறைபாடுகளுக்கிடையில் பிரசவத்திற்கு வந்திருக்கும் என்னைக் குறைவின்றி அம்மா-அப்பா கவனித்துக் கொள்ள என் தாத்தா-பாட்டியும் என் தங்கைகளும் மிகவும் உறுதுணையாக இருந்தார்கள்.

பிரசவ நாள் அன்று என்னை மருத்துவமனைக்கு அவசரமாக அழைத்துச் செல்ல நேர்ந்தபோது வீட்டு வேலைகளைப் பெரிய மனுஷி போல தங்கை வஸந்தாவே கவனித்துக் கொண்டாள். வீட்டிலிருந்த பெரியவர்கள் தம்பியை கவனித்துக் கொள்ள மற்ற தங்கைகள் உதவினார்கள். எனக்குக் குழந்தை பிறந்து ‘தாயும் சேயும் நலம்’ என அறிந்ததும் வீட்டில் தம்பி உட்பட அனைவரும் மகிழ்ந்தார்கள்.

தம்பிக்குச் சிகிச்சை முறை ஒரு நிலைப்பாடுக்கு வந்த (stabilise) பிறகு அவன் சாதாரணமாக இருப்பதும் திடீரென மனநிலை மாறுவதுமாக இருந்தது. என்ன செய்வதென்று புரியாமல் பெற்றோரும் தாத்தா-பாட்டியும் அவன் மீது ஒரு கண் வைத்துக்கொள்ள ஆரம்பித்தார்கள். நான்கு மாதங்களாக வீட்டில் படிக்கும் சூழ்நிலை இல்லாமலிருந்த நெருக்கடியான நேரத்தில் தங்கை ஞானம் அவளுடைய பதினொன்றாம் வகுப்பின் பொதுத் தேர்வை எழுதித் தேர்ச்சியடைந்தாள். தமிழ்நாட்டில் அந்தக் கல்வியாண்டிலிருந்து (1978-79) 11+1+3 என்றிருந்த கல்விமுறை மாற்றப்பட்டு 10+2+3 என்ற கல்விமுறை நடைமுறைக்கு வந்து பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு சேர்க்கப்பட்டது. அந்த வருடம் கடைசி வருடமாகக் கல்லூரியில் பி.யு.ஸியும் நடைபெற்றது. தம்பியின் உடல்நலக் குறைவில் அதிர்ந்து போயிருந்த தங்கைக்கு அந்த சூழ்நிலையில் மேலும் படிக்க முடியுமெனத் தோன்றவில்லை. சிறிது நாட்கள் கழித்து அப்பா அவளைத் தட்டச்சு வகுப்புக்களில் சேர்க்க அவள் ஆங்கிலத் தட்டச்சு உயர்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றாள்.

சில மாதங்களில் நான் குழந்தையுடன் புகுந்த வீட்டிற்குக் கொண்டுவிடப் பட்டேன்.

ரவியைப் பற்றி நான் மனதளவில் கவலைப்படவும் கடவுளிடம் பிரார்த்திக்கவும்தான் முடிந்தது. ஆனால் என் பெற்றோர், தாத்தா-பாட்டி மற்றும் தங்கைகள் அன்றாடம் அவன் படும் இன்னல்களை அவர்களும் கூட இருந்து அனுபவித்துக் கொண்டு அவனுக்கு ஆதரவாக

இருந்தனர். மெல்ல மெல்ல ரவிக்கு வந்திருந்தது ஸ்கிசோஃப்ரினியா (schizophrenia) எனப்படும் மன நோய் என மருத்துவர்களிடமிருந்து தெரிய வந்தது. அதைப் புரிந்து ஏற்றுக் கொண்டு தங்களுடைய இதர கடமைகளையும் கவனித்து வந்ததில் பெற்றோர் காட்டிய பக்குவம் அலாதியானது. தாத்தா-பாட்டியும் அமைதியாகத் தங்களால் முடிந்த உதவிகளை அம்மா-அப்பாவுக்குச் செய்துவந்தார்கள். அவனால் அதற்குமேல் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை. அப்பா பள்ளி சென்று அவன் எட்டாவது வகுப்பு தேர்ச்சியடைந்த சான்றிதழை வாங்கிவந்தார். 'பல குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தேனே, என் பிள்ளையைப் படிக்க வைத்துப் பார்க்க முடியவில்லையே' என்ற அப்பாவின் ஏக்கத்துக்கு யாராலும் பதில் சொல்லமுடியவில்லை. ஓரிரு முறை அப்பா-அம்மா அவனை மதராஸ் அழைத்து வந்து பிரபல டாக்டர்களிடம் காட்டியும் பலனில்லை.

## 14. தங்கைகளின் கல்வியும் திருமணங்களும்

தங்கை வஸந்தாவுக்கும் பாட்டியே ஒரு வரனைக் கொண்டுவந்தார். ஜாதகமும் நன்கு பொருந்தி திருமணம் நிச்சயமாகியது. மாப்பிள்ளை கைலாசம் அவர்கள் வடலூரில் நெய்வேலி சிராமிக்ஸ் என்ற கம்பெனியில் வேலை பார்த்துக்கொண்டிருந்தார். அவர்களது திருமணம் 1979ஆம் வருடம் ஏப்ரல் மாதம் இருபத்தி ஒன்பதாம் தேதியன்று கும்பகோணம், பச்சையப்ப முதலித் தெரு, V.P.V. பாக்கியம் கல்யாண மஹாலில் கடவுள் அருளில் இனிதே நடந்தது. அவர்கள் தங்கள் இல்லற வாழ்க்கையை வடலூரில் துவங்கினார்கள்.

1980ஆம் வருடத்தின் முற்பகுதியில் அப்பா அறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து பதவி ஓய்வு பெற்றார். சம்பளம் வந்துகொண்டிருந்த இடத்தில் ஓய்வூதியம் என்றாயிற்று.



அவ்வருடத்தின் பிற்பகுதியில் வஸந்தாவின் தலைப்பிரசவம் 'தாயும் சேயும் நலம்' என நிகழ்ந்த தினத்திலிருந்து இரு வாரங்களுக்குள் நான் என்னுடைய இரண்டாவது பிரசவத்திற்காகப் பெற்றோர் வீடு வந்துசேர்ந்தேன். குழந்தை பெற்ற அவளும் கர்ப்பமாக இருந்த நானும் குழந்தைக்கு இருபத்தி இரண்டு நாட்கள் ஆகும் வரை சந்தித்துக்கொள்ளக்கூடாதென்று இருந்த மரபின் காரணமாக வீட்டிற்குள் தங்கைக்கும் எனக்கும் சில போக்குவரத்து விதிமுறைகளை அனுசரித்தார்கள்! நான் ஊரிலிருந்து வந்த ஐந்தாம் நாளன்று எனக்குக் குழந்தை நலமுடன் பிறந்தவுடன் மறுநாளில் வஸந்தாவைக் குழந்தையும் கையுமாக மருத்துவமனைக்கு வரவழைத்து என்னையும் குழந்தையையும் சந்திக்கவைத்து சம்பிரதாய அனுசரிப்பை முடிவுக்குக் கொண்டுவந்தனர். வஸந்தா தான் இது தொடர்பாக அனுசரித்திருந்த வேறு ஒரு நடைமுறையையும் நினைவுகூர்ந்தாள். தனது நாத்தனாரும் தானும் ஒரே காலத்தில் கர்ப்பமாக இருந்தபோது முதன்முறையாகச் சந்தித்த அன்று இருவரும் நிரம்பிய தண்ணீர்க் குடங்களைத் தூக்கிவந்து சந்தித்துக்கொண்டதாகக் கூறினாள்.

அப்போதெல்லாம் சமையல் வாயு இணைப்பிற்கு விண்ணப்பித்துவிட்டுப் பல வருடங்கள் காத்திருக்கவேண்டுமாதலால் வீட்டில் இன்னும் விறகு அடுப்பில்தான் சமையல் மற்றும் குளிக்க வெந்நீர் போடுவது எல்லாம் நடந்துகொண்டிருந்ததன. அம்மாவுக்கு மதிய வேளைகளில் கூடச் சற்று ஓய்வெடுக்கமுடியாது. உடல்நலம் சரியில்லாத தம்பி, இரட்டைப் பிரசவங்கள், உதவிக்கு இருக்கும் தாத்தா-பாட்டி உட்படச் சுமார் பத்து பேருக்குச் சமையல் என அம்மா ஈடு கொடுத்ததற்குத் தங்கை ஞானம் அம்மாவுக்குப் பாந்தமாக கைக் காரியங்களில் கூடமாட ஒத்தாசை செய்ததுதான் காரணம். ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த ஜயந்தியும் அவளால் இயன்ற உதவிகளைச் செய்வாள். பாட்டி குழந்தைகளைக் குளிப்பாட்டிவிடுவார். எழுபது வயதுக்கு மேல் ஆகிவிட்ட தாத்தா சிறிதும்

ஓய்வெடுக்காமல் ரவியைத் தன் பொறுப்பில் பார்த்துக்கொள்வார். மாதங்கள் ஓடின. நான் குழந்தைகளுடன் மதராஸுக்கு வந்தேன். வஸந்தா குழந்தையுடன் வடலூருக்குச் சென்றாள்.

ரவிக்கு முன்பும் பின்பும் பிறந்திருந்த சகோதரிகளான ஞானமும் ஜயந்தியும் அவன் நன்றாக இருந்த நாட்களில் அவனுடன் அதிகமாகப் பேசியும் விளையாடியும் அவனது அபிலாஷைகளை அறிந்தவர்களாக இருந்தது மட்டுமல்லாமல் அவனது உடல்நலம் பாதிக்கப்பட்ட பிறகும் எட்டு வருடங்களுக்குக் குறையாமல் அவனுடன் இருந்து அவனைப் பாதுகாப்பதில் அம்மா-அப்பாவுக்கும் தாத்தா-பாட்டிக்கும் உறுதுணையாக இருந்ததால் ரவி மீது அவர்களுக்கு அதிக பாசமும் அம்மாவிற்கு அவர்களிடம் தனிப் பரிவும் ஏற்பட்டதில் வியப்பில்லை.

1982ஆம் வருடத்தில் அப்பாவின் அறுபதாவது பிறந்த தினத்தை வீட்டளவில் புத்தாடை அணிந்து வடை-பாயஸத்துடன் சாப்பிட்டுக் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்து கொண்டாடினோம்.

1983ஆம் வருடத்தின் முற்பகுதியில் வஸந்தாவுக்கு இரண்டாவது குழந்தையும் பிற்பகுதியில் எனக்கு மூன்றாவது குழந்தையும் நல்லபடியாகப் பிறந்தனர். என்னுடைய பிரசவத்திற்காக அம்மா மதராஸ் வந்த மூன்று மாத காலமும் கும்பகோணம் வீட்டில் பெரும்பாலான வேலைகளுக்கு ஞானம் பொறுப்பெடுத்துக்கொள்ள அப்பாவும் தாத்தா-பாட்டியும் ஜயந்தியின் உதவியுடன் இதர வேலைகளைக் கவனித்துக் கொண்டு அனைவரும் ரவியையும் பராமரித்து வந்தார்கள்.

1984ல் ஜயந்தி மிக நல்ல மதிப்பெண்களுடன் பன்னிரண்டாம் வகுப்பின் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றாள். அப்பா அவளை தொலைதூரக் கல்வியில் பி.காம் (B.com) படிப்பிலும் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து வகுப்புக்களிலும் சேர்த்துவிட்டார்.

1985ல் மதராஸ் வந்திருந்த அப்பா ஊர் திரும்பும் முன் மகாலிங்கபுரம் பிள்ளையார் கோயிலின் ஜாதகப் பரிவர்த்தனை மையத்திலிருந்து வரன்களின் .அட்டவணையை (chart) வாங்கிச் சென்றார். அந்த அட்டவணையிலிருந்து கிடைத்த ஒரு வரனுக்கும் தங்கை ஞானத்துக்கும் ஜாதகப் பொருத்தம் நன்கு அமைந்து அவளுக்குத் திருமணம் நிச்சயமானது. மாப்பிள்ளை ரங்கராஜன் அவர்கள் மதராஸில் அலஹாபாத் வங்கியில் வேலை செய்துகொண்டிருந்தார். அவர்களது திருமணம் 1985ஆம் வருடம் டிஸம்பர் மாதம்

பதின்மூன்றாம் தேதியன்று கும்பகோணம், பச்சையப்ப முதலித் தெரு, K.G.K. கல்யாண மண்டபத்தில் கடவுள் அருளில் இனிதே நடந்தது. அவர்கள் தங்கள் இல்லற வாழ்க்கையை மதராஸில் மயிலாப்பூரில் கூட்டுக் குடும்பத்தில் துவங்கினார்கள்.

1985ஆம் வருடத்தின் மழைக் காலத்தில் தாத்தாவுக்கு நீண்ட காலத்திற்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டுப் பிறகு குணமானது. எழுபத்தி ஐந்து வயதுக்கு மேல் ஆன தாத்தா அதற்கு மேல் வேலைக்குப் போகக்கூடாது என்று வீட்டில் முடிவு செய்யப்பட்டது. மேலும் ஞானம் திருமணமாகிப் போய்விட்டதால் தாத்தா-பாட்டி டபீர் நடுத் தெரு வீட்டிலேயே இருந்தால் ரவியைப் பார்த்துக் கொள்ள எளிதாக இருக்கும் என்றும் அம்மா நினைத்தார். அப்படியானால் தங்களது மடத்துத் தெரு வீட்டை விற்றுக் கையில் பணத்தை வைத்துக்கொள்ளலாமென தாத்தா முடிவு செய்தார். ஆனால் பார்த்துப் பார்த்துக் கட்டிய வீட்டை விற்கப் பாட்டி சம்மதிக்க வில்லை. இருவருக்கும் வாக்குவாதம் நடந்துகொண்டிருந்தது.

நான் 1986ஆம் வருடக் கோடை விடுமுறைக்குக் குழந்தைகளுடன் கும்பகோணம் சென்ற போது பாட்டி தன்னுடைய ஏமாற்றத்தை என்னுடன் பகிர்ந்து கொண்டார். நாங்கள் அப்போது எனது அலுவலகத்தில் கொடுக்கும் வீட்டு வசதிக் கடனைப் பயன்படுத்தி மதராஸில் அபார்ட்மெண்ட் வாங்கப் பார்த்துக்கொண்டிருந்தோம். ஆனால் வீட்டுவசதிக் கடனான தொண்ணூறாயிரம் ரூபாய்க்கு மதராஸில் எங்களுக்குத் தோதான எந்த அபார்ட்மெண்டும் கிடைக்கவில்லை. மேலே சேர்த்துப்போட்டு வாங்க எங்களிடம் எந்த சேமிப்புமில்லை. நான் பாட்டியிடமிருந்து அந்த வீடு ஒன்றேகால் இலட்சம் ரூபாய்க்குப் போகுமென எதிர்பார்க்கிறார்கள் எனத் தெரிந்துகொண்டேன். தாத்தா-பாட்டியிடமிருந்து அலுவலகத்திலிருந்து கொடுக்கும் கடன் தொகையை மட்டும் அவர்களிடம் கொடுத்துவிட்டு மீதித் தொகையை நான் மாதம் கொஞ்சமாக அவர்களுக்குக் கொடுத்தால் அவர்களுக்குச் சம்மதம் என்று தெரிந்துகொண்டேன். பிறகு என் புகுந்த வீட்டினரிடம் கடிதம் எழுதிக் கேட்டு அவர்களுக்கும் அந்த வீட்டை வாங்குவதில் திருப்தி என அறிந்துகொண்டேன். வீடு குடும்பத்தை விட்டு வெளியில் போகாததால் பாட்டிக்கு இந்தத் தீர்வு மிகவும் பிடித்திருந்தது.

விடுமுறை முடிந்து மதராஸ் சென்றதும் என்னுடைய அலுவலகத்தில் வீட்டுவசதிக் கடனுக்கு விண்ணப்பம் செய்து சிறிது நாட்களில் ஒப்புதல் கடிதம் (sanction letter) கிடைத்தது. மாநகரம் அல்லாத வெளியூர்ப் பகுதிகளிலுள்ள வீடுகளுக்கு எண்பதாயிரம்

ரூபாய்தான் கடன் தொகை தரப்படும் என்பது ஒப்புதல் கடிதத்தைப் பார்த்த பிறகுதான் தெரிந்தது. தாத்தா-பாட்டிக்குக் கடிதமெழுதி என்ன செய்வதென்று கேட்டேன். 'எந்தப் பிரச்சினையுமில்லை, உன்னால் எப்போது முடியுமோ அப்போது திருப்பிக் கொடுக்கலாம்' என்று மறு தபாலிலேயே பதில் எழுதினார்கள். வங்கி கொடுத்த வீட்டுக் கடன் தொகை போக மீதித் தொகைக்கு தாத்தா-பாட்டிக்கு நானாகவே முன்வந்து ப்ராமிஸரி நோட்டு எழுதிக்கொடுத்தேன். தாத்தா-பாட்டியிடமிருந்து வீடு வாங்கப்பட்டாலும் அது முழங்கை அளவு தூரத்தில் நிகழ்ந்த பரிவர்த்தனை (arm's length transaction) என்பதை வங்கிக்கும் தெரிவித்தேன்.

இவ்வாறாக தாத்தா-பாட்டி வீட்டை நாங்கள் வாங்கி கிருஹப்பிரவேசம் செய்தோம்.







கிருஹப்பிரவேச தினத்தன்று தாத்தா-பாட்டியுடன்

பிறகு அந்த வீட்டிற்கு வாடகைக்கு ஆள் பார்த்து வைக்கும் பொறுப்பை அம்மாவும் வரவு-செலவுக் கணக்கைப் பராமரித்து வங்கியில் வாடகையைக் கட்டும் பொறுப்பைத் தாத்தாவும் எடுத்துக்கொண்டனர். தாத்தா-பாட்டி என் மீது வைத்திருந்த நம்பிக்கையை வீணாக்காமல் காசைக் கருத்தாகச் சேமித்து நான் தர வேண்டிய மீதிப் பணத்தை மூன்று வருடங்களில் கொடுத்து முடித்தேன்.

எனவே 1986ஆம் வருடத்தின் இடைப்பட்ட மாதங்களிலிருந்து தாத்தா-பாட்டியும் தங்கள் பெண்-மாப்பிள்ளையுடன் டபீர் நடுத் தெரு வீட்டிலேயே வசிக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் வந்ததில் தாத்தாவின் அருகாமை அதிகம் கிடைத்ததால் ரவியும் சற்று பாதுகாப்பாக உணர்ந்தது போல் தோன்றியது. அந்த வருடக் கடைசியில் ஞானத்தின் தலைப்பிரசவத்தில் குழந்தை இறந்து பிறந்தது அனைவரையும் சோகத்திலாழ்த்தியது.

தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்தின் உயர்நிலைத் தேர்வுகளில் முதல் வகுப்புக்களில் சிறப்பான தரவரிசைகளில் தேர்ச்சி பெற்றிருந்த ஜயந்தி 1987ஆம் வருடத்தில் பி.காம் பொதுத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று மதறாஸில் ஒரு கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தாள்.

1988ஆம் வருடத்தில் மதராஸில் ஞானம் தன் இரண்டாம் பிரசவத்தில் நல்லபடியாக ‘தாயும் சேயும் நலம்’ எனக் குழந்தையைப் பெற்றெடுத்தாள். தாத்தா-பாட்டி ரவியைக் கும்பகோணத்தில் பார்த்துக் கொண்டதால் அம்மா-அப்பாவால் இரண்டு மாதங்களுக்கு மதராஸ் வந்து செல்ல முடிந்தது.

1990ஆம் வருடத்தின் ஜூன் மாதத்தில் தாத்தா-பாட்டியின் சதாபிஷேக விழாவைச் சிறிய அளவில், நெருங்கிய உறவினர்கள் சூழ, எளிமையாகக் கொண்டாடி மகிழ்ந்தோம். விழா மடத்துத் தெருவிலிருந்த தாத்தாவின் முதலாளி வீட்டில் நடந்தது.



தாத்தா-பாட்டியின் சதாபிஷேக தினத்தன்று

அதே வருடத்திலிருந்து ஜயந்திக்கு ஜாதகம் பார்க்க ஆரம்பித்தார்கள். மகாலிங்கபுரம் பிள்ளையார் கோயிலின் ஜாதகப் பரிவர்த்தனை மையத்தின் .அட்டவணையிலிருந்து கிடைத்த ஒரு வரனுக்கும் ஜயந்திக்கும் ஜாதகப் பொருத்தம் நன்கு அமைந்து அவளுக்குத் திருமணம் நிச்சயமானது. மாப்பிள்ளை இரவிச்சந்திரன் அவர்கள் மதராஸில் அஞ்சல் துறையில் வேலை பார்த்துக்கொண்டிருந்தார். அவர்களது திருமணம் 1991ஆம் வருடத்தில் பிப்ரவரி மாதம் பதினெட்டாம் தேதியன்று கும்பகோணம், டபீர் புதுத் தெரு, S.P.R. கல்யாண மண்டபத்தில் கடவுள் அருளில் இனிதே நடந்தேறியது. அவர்கள் தங்கள் இல்லற வாழ்க்கையை மதராஸில் மடிப்பாக்கத்தில் கூட்டுக் குடும்பத்தில் துவங்கினார்கள்.

தனது திருமணத்துக்கு முன் ஜயந்தி விண்ணப்பித்திருந்த அஞ்சலக உதவியாளர் வேலை கும்பகோணத்து அஞ்சலகம் ஒன்றில் அவளது குழந்தை பிறப்பதற்குச் சில மாதங்களுக்கு முன் கிடைத்தது. அந்த வேலையை ஒத்துக்கொண்டு இடமாற்றம் கிடைக்கும் வரை அவள் கும்பகோணத்தில் வேலை செய்யலாம் என அவளும் அவளது கணவரும் முடிவெடுத்தனர். அந்த வருடக் கடைசியில் அவளது பிரசவம் ‘தாயும் சேயும் நலம்’ என நல்லபடி நிகழ்ந்தது.

## 15. வீட்டுப் பெரியவர்களின் திருப்தி

ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பெண்ணை மணம் முடித்துக் கொடுக்கும்போது மகாகவி பாரதியார் சுதந்திரப் பயிருக்காகப் பாடிய ‘தண்ணீர் விட்டா வளர்த்தோம்? சர்வேசா! இப்பயிரைக் கண்ணீரால் காத்தோம்!’ என்ற வரிகள் காட்டும் மனநிலையில்தான் இருக்கிறார்கள். என் தாய்-தந்தைக்கு நான்கு மாப்பிள்ளைகளும் சம்பந்திகளும் நல்லபடி அமைந்ததில் மிகத் திருப்தி. தாத்தா-பாட்டியும் தங்கள் பேத்திகளின் இல்லற வாழ்க்கை நல்லபடி அமைந்ததில் நிம்மதியடைந்தார்கள்.

வஸந்தா பின்னாளில் தொலைதூரக் கல்வியில் மதராஸ் பல்கலைக்கழகத்தில் பி.ஏ.(தமிழ்), மதுரைப் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ.(தமிழ்) மற்றும் எம்.ஃபில்.(தமிழ்), பிறகு பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் எம்.ஏ.(ஹிந்தி) எனப் பல பட்டங்கள் பெற்று ஆசிரியையாக வேலை பார்த்தாள். வஸந்தா தன்னைப் போல ஹிந்தி கற்பித்ததில் அப்பாவுக்கு நிறைவு ஏற்பட்டது.

ஞானம் நல்ல நிர்வாகத் திறமையும் புத்தி சாதுர்யமும் செயல்திறனும் உடையவள். வாழ்க்கையின் பல அல்லல்களுக்கிடையில் புன்னகை மாறாத முகத்தை உடையவள். பிளாஸ்டிக் வயர் (plastic wire) மற்றும் மணிகளை வைத்து அழகான பொம்மைகள் செய்தது, இரு சக்கர வாகனம் ஓட்டக் கற்றுக் கொண்டது, தையல் கற்றுக் கொண்டது என அவள் பல திறன்களை வளர்த்துக் கொண்டதைக் கண்டு அப்பா மகிழ்ச்சியடைந்தார்.

அப்பாவிடம் ஹிந்தி கற்றுக்கொண்டிருந்த நான் ஜயந்திக்கு ஹிந்தி சொல்லிக் கொடுத்து அவள் ப்ரசார் சபாவின் இரண்டாவது தேர்வான மத்யமாவை நேரே எழுதி அதில் தேர்ச்சியடைந்தாள். ஜயந்தி பின்னாளில் கரூர் வைஸ்யா வங்கியின் தலைமை அலுவலகத்தில் சுருக்கெழுத்தாளராகப் (stenographer) பணியில் சேர்ந்தாள். வங்கிகளுக்கான ஸி.ஏ.ஐ.ஐ.பி.(CAIIB) தேர்வுகளில் தேர்ச்சி அடைந்தாள். பிறகு அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றாள். அப்பா தன்னுடைய கடைசி மகளான ஜயந்தியின் முன்னேற்றத்திலும் பெருமிதம் கொண்டார்.

ரவி தனது மனநலக் குறைபாட்டுக்குப் பிறகும் சில பழைய பாடல்களை நன்கு பாடுவான். பழைய நிகழ்ச்சிகள் சிலவற்றை நன்கு நினைவுகூர்வான். ஆனால் அன்று காலையில் என்ன உணவு சாப்பிட்டான் என்று கேட்டால் ஞாபகமிருக்காது. அப்படிப்பட்டவன் ஒவ்வொரு சகோதரியின் கணவரையும் நன்கு ஞாபகம் வைத்திருப்பான். அதேபோல் அவன் தனது நான்கு சகோதரிகளின் குழந்தைகளையும் சரியாகப் பெயருடன் அடையாளம் கண்டுகொள்வது எங்களுக்கு மகிழ்ச்சி கலந்த ஆச்சர்யமாக இருக்கும்.

அப்பாவின் குலதெய்வமான கழனிவாசல் அய்யனார் கோயில் கிராமத்தின் உட்பக்கப் பகுதியிலிருப்பதாலும் நேரே சென்று வரும் பஸ் வசதி இல்லாததாலும் அங்கு அவ்வளவாகச் சென்று வர முடிந்ததில்லை. ஒரு முறை நாங்கள் மங்கநல்லூர் வரை பஸ்ஸில் பயணித்துப் பிறகு அங்கிருந்து மாட்டு வண்டியில் பயணித்துக் கழனிவாசல் அய்யனாரைத் தரிசனம் செய்து வந்தோம்.

அப்பா தன்னுடைய ஒவ்வொரு பெண்ணின் திருமணத்தின் போதும் வீட்டின் வெளிக் கொல்லை, உட்கொல்லை, இரண்டாம் கட்டு தாழ்வாரம் மற்றும் முதல்கட்டு தாழ்வாரம் என முறையே விற்றுத் திருமணச் செலவுகளைச் சமாளித்திருந்தார். விற்றது போக தரைத்

தளமும் மாடியுமாக மீதி இருந்த இடங்களும் அவர்கள் புழக்கத்திற்குத் தாராளமாகவே இருந்தன. கோடை விடுமுறைகளுக்கு வந்து ஓடி விளையாடிய பேரக் குழந்தைகளுக்கும் கும்பகோணத்துத் தாத்தா-பாட்டி வீடு பாசமான நினைவுகளுடன் மனதில் தங்கியது.

## 16. பழமொழிகளால் உரையாடிய பாட்டி



தாத்தா-பாட்டி, ரவி, அம்மா-அப்பா

பாட்டி பேசுவதில் எப்போதும் பழமொழிகளும் சொற்றொடர்களும் (idioms and phrases) நிறைந்திருக்கும். தங்கள் குல தெய்வமான வெங்கடரமண ஸ்வாமியிடம், ‘மலை போல வந்த கஷ்டத்தையெல்லாம் பனி போல நீக்கி வை ஏழுமலையானே’ என வேண்டிக்கொள்வார். குழந்தைகளைக் கொஞ்சிவிட்டு, ‘கோடி துக்கம் ஒரு குழந்தை முகத்தில் மறையும்’ என்பார். மகிழ்ச்சியான செய்தியைக் கேட்டால், ‘சந்தோஷம் சகல பலம்’ என மகிழ்வார். கடினமான செய்தியைச் கேட்டால், ‘சாண் ஏறினால் முழம் சறுக்குகிறது’ என வருத்தப்படுவார். அஞ்ச வேண்டியதற்கு அஞ்சாமல் யாராவது சுலபமாக வளையவந்து கொண்டிருந்தால் ‘எட்டு அரப்பையும் போட்டு அலம்பி வைத்திருக்கிறது ’ என்றோ அல்லது ‘ஒக்க சிரிச்சா வெக்கமில்லை’ என்றோ இடித்துக் காட்டுவார். ‘தங்க ஊசி என்றால் கண்ணில் குத்திக் கொள்ளமுடியுமா?’, ‘பித்தளையை பலக்க தட்டாதே’, ‘தன்

மனுஷா அழ அழச் சொல்லுவா, பிறத்தி மனுஷா சிரிக்கச் சிரிக்கச் சொல்லுவா', 'வேலில போன ஓணான இழுத்துவிட்டுண்டு குடையறதேன்னு சொல்ற மாதிரி', 'வேலிக்கு ஓணான் சாட்சி' முதலிய பல பழமொழிகளும் சொற்றொடர்களும் இன்னும் பாட்டியின் குரலிலேயே காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. பாட்டி தன் வார்த்தைகளால் பேசியதை விட பழமொழிகளால் பேசியதே அதிகமோ எனத் தோன்றும்.

தன் பேத்திகள் தத்தம் பிரசவத்திற்காகத் தாய்வீடு வந்த போதெல்லாம் தன்னால் முடிந்த ஒத்தாசைகளைத் தன் பெண்ணுக்குச் செய்துகொண்டும் குழந்தைகளைக் குளிப்பாட்டிவிடும் பொறுப்பை ஏற்றுக்கொண்டும் தன் கொள்ளுப் பேத்திகள்-பேரன்களைப் பார்த்து மகிழ்ந்துகொண்டும் நலமுடன் நடமாடிக்கொண்டிருந்த பாட்டியை அவரது எண்பதாம் வயதில் உடல் பலவீனம் வேகமாக ஆட்கொண்டது.

ஐந்து மாதங்களில் நான் மூன்று முறை சென்று பார்த்துவிட்டு வந்தேன். கடைசி மூன்று மாதங்களில் பாட்டி படுத்த படுக்கையாகி விட்டார். அம்மாவுக்குச் சமையல் வேலைகளும் இதர வேலைகளுமிருந்ததால் தாத்தா அந்த மூன்று மாதங்களும் பாட்டியின் அருகிலிருந்து அவரைக் கவனித்துக்கொண்டார். எனக்கு எப்பொழுதும் பாட்டியின் நினைவாகவே இருந்தது. 'அக்ஞானம் கிடந்து அடித்துக் கொள்கிறது என்று அடிக்கடி சொல்வாயே, அதுதானா இது? என்ன மாயம் செய்து இப்படி மனதெல்லாம் நிறைந்திருக்கிறாய், பாட்டி!' எனக் கேட்கத் தோன்றியது. பாட்டி 1993ஆம் வருடம் நவம்பர் மாதம் பத்தொன்பதாம் தேதி அன்று காலமானார். எல்லோரும் சென்று பாட்டிக்கு அஞ்சலி செய்து அவருக்குக் கண்ணீர் விடை கொடுத்தோம். பாட்டியின் கடைசி காலத்தில் கண்ணும் கருத்துமாக பார்த்துக்கொண்ட தாத்தாவே அவருடைய சடங்குகளையும் செய்தார்.

# 17. அம்மாவுக்கு ஏற்பட்ட பலமுனைச் சோதனைகள்




அம்மா,அப்பா,ரவி,தாத்தா

1994ஆம் வருடத்தில் அம்மா பல சோதனைகளை ஒரே நேரத்தில் சந்திக்க வேண்டியிருந்தது. அப்பாவிற்குக் காலில் ஏற்பட்ட ஒரு காயம் ஆறுவதற்கு வெகுநாட்களானதால் அப்பாவை மதராஸ் டாக்டர்களிடம் காட்டுவதற்காக அம்மாவும் அப்பாவுமாக சென்னைக்கு எங்கள் வீட்டிற்கு வருகை தந்திருந்தார்கள். கும்பகோணம் வீட்டில் தாத்தாவுக்கும் ரவிக்கும் தினசரி வந்து சமையல் செய்து கொடுத்துவிட்டுப் போக ஒரு உதவியாளரை அம்மா ஏற்பாடு செய்துவிட்டு வந்திருந்தார்.

அப்பாவுக்கு மதராஸ் பொது மருத்துவமனையில் சிறிது காலம் தங்கிச் சிகிச்சை செய்துகொள்ள வேண்டியிருந்தது. அந்த இடைப்பட்ட காலத்தில் எண்பத்தி ஐந்து வயதான தாத்தா ரவியைத் தனியாகவே கும்பகோணத்தில் பார்த்துக்கொண்டதை இப்போது நினைத்துப் பார்த்தால் கூட பிரமிப்பாக இருக்கிறது. அப்பாவின் சிகிச்சை முடிவதற்கு முன்னரே பாட்டியின் முதல் வருடத் திதிக்கான நாட்கள் நெருங்கிக் கொண்டிருந்தன. தாத்தாவுக்கு தான் செய்யக் கூடிய சிறிய உதவி இடையில் வந்த பாட்டியின் முதல் வருடத் திதியை குறைவின்றி நடத்திக்கொடுப்பதுதான் என அம்மா முடிவு செய்திருந்தார். மருத்துவ மனையிலிருந்த அப்பாவை நாங்கள் கவனித்துக்கொள்வதாகக் கூற அம்மா இடையில் நான்கு நாட்கள் கும்பகோணம் சென்றுவரத் தயாரானார்.

இதற்கிடையில் மதராஸிலிருந்த தங்கை ஞானம் பல மருத்துவச் சிக்கல்களுக்கிடையில் தன்னுடைய பேறு காலத்தை நெருங்கிக் கொண்டிருந்தாள். ஆனால் அந்த மாதம் செய்யப்பட்ட ஆய்வில் கர்ப்பத்தின் வளர்ச்சி திருப்திகரமாக இல்லாதது தெரியவர அவளை ஒன்றிரண்டு நாட்களில் மருத்துவ மனையில் சேரச் சொல்லி டாக்டர் நாள் கொடுத்தார். அந்த நாள் அம்மா ஊருக்குச் செல்லும் நாட்களுக்கிடையில் அமைந்துவிட்டதால் அம்மாவுக்குத் துயரத்தோடு தர்ம சங்கடமும் சேர்ந்துகொண்டது. மகளுக்குத் தன் அருகாமை தேவைப்படும்போது அவளை விட்டு ஊருக்குச் செல்வது அம்மாவுக்கு எளிதாக இல்லாவிட்டாலும் ஒரு கடமை வீராங்கனையாகப் புறப்பட்டு தாயின் முதல் வருடத் திதி வேலைகளைக் கவனிக்கச் சென்றார். தங்கையின் கணவரும் மாமியாரும் அவளுக்கு ஆறுதல் கூறி அவளைக் கவனித்துக் கொண்டனர்.

கும்பகோணத்து வேலைகள் முடிந்த பிறகு, அதற்கு மேலும் தாத்தாவையும் ரவியையும் தனியாக விடாமல் மதராஸுக்கு அழைத்து வருமாறு நானும் என் கணவரும் கூறியிருந்ததால், அம்மா, தாத்தா மற்றும் ரவி எங்கள் வீட்டிற்கு வர அதிலிருந்து ஒரு மாதத்தில் அப்பாவின் சிகிச்சையும் முடிந்து நால்வருமாகக் கும்பகோணம் திரும்பிச் சென்றனர். அப்பாவுக்கு ஏற்பட்ட உடல் உபாதைகளும் வலிகளும் அம்மாவின் கண்களில் நீர் துளிக்கச் செய்தாலும் அவர்கள் இருவருமாக அவற்றைச் சமாளித்து வளைய வந்த விதங்கள் குடும்பத்தினருக்கு ஆறுதலும் உறுதியும் அளிப்பதாகவும் அனைவரது மதிப்பையும் வெல்வதாகவுமிருந்தன.

(மதராஸின் பெயர் 1996ஆம் ஆண்டு ஜூலை மாதம் பதினேழாம் தேதி அன்று சென்னை என மாற்றப் பட்டதால் கட்டுரையின் இந்தக் காலகட்டத்திலிருந்து தற்போதைய பெயரான சென்னை என்பதே உபயோகப்படுத்தப்படும்.)

## 18. கர்மயோகி தாத்தா

தாத்தா வயதான பிறகும் சிறிதும் அசதியாக உட்கார்ந்துகொண்டு நாங்கள் பார்த்ததில்லை. நாங்கள் கும்பகோணத்திற்கு விடுமுறைக்குச் செல்லும்போது எங்களோடு உற்சாகமாக உரையாடுவார்; கோயில்களுக்கு வருவார். ரவியிடம் பேசிக் கவனித்துக் கொள்வதும் அம்மாவுக்குச் சிறு உதவிகள் செய்வதுமாகச் சுறுசுறுப்பாக இருப்பார். ஊருக்குத் திரும்பும் நாளில் நாங்கள் எடுத்துச் செல்வதற்காக காய்களும் பழங்களும் வாங்கிவருவார். அம்மாவும் அப்பாவும் தங்கள் மகள்கள் வீட்டின் முக்கியமான கொண்டாட்டங்களில் விட்டுக் கொடுக்காமல் பங்கு கொள்ள முடிந்ததற்குக் காரணம் தாத்தா அந்த நேரங்களில் ரவியைப் பார்த்துக் கொண்டதுதான்.

தாத்தாவின் எளிமை, சுறுசுறுப்பு, ஒப்படைக்கப்பட்ட வேலைகளைத் திறம்படச் செய்தல், நிர்வாகத் திறன், நேரந் தவறாமை, சுலபமாகப் பேசுதல், நட்புணர்வு, பரந்த அனுபவம், பரோபகாரம் முதலிய தன்மைகளின் காரணமாக உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அவரிடம் மிகுந்த மரியாதை உண்டு. தாத்தா சென்னை வந்தபோதெல்லாம் தனது தம்பிகள், தனது மைத்துனர் குழந்தைகள், தான் வேலை பார்த்த அரிசி மில்லின் முதலாளியின் உறவினர், பண்ணையின் முதலாளி மற்றும் அவரது உறவினர்கள் என ஒரு பெயர்ப் பட்டியல் தயார் செய்துகொண்டு முடிந்த வரை நெருக்கமானவர்களைப் பார்த்துவிட்டுச் செல்வார்.

என் கணவருக்கு 1997ஆம் வருடத்தின் மார்ச் மாதத்தில் ஒரு சாலை விபத்து ஏற்பட்டு அவர் பல நாட்கள் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட நேர்ந்தபோது தாத்தா தன்னுடைய எண்பத்தி எட்டாவது வயதில் சற்றும் தயங்காமல் தனியாகக் கும்பகோணத்திலிருந்து சென்னை வந்து அவரைப் பார்த்துச் சென்றார். அந்த வருடம் ஆகஸ்ட் மாதத்தில் தாத்தாவுக்கு உடல்நலம் அவ்வளவு நன்றாக இல்லை என அம்மா கடிதத்தில் தெரிவித்திருந்தார். நான் தாத்தாவைப் பார்ப்பதற்காக கும்பகோணம் சென்றபோது அவர் அவ்வப்போது அசதியுடன் படுத்துக் கொண்டதைப் பார்க்க முடிந்தது. மற்றபடி தாத்தாவும்

நானும் அந்தத் தடவையும் வழக்கம் போல சுவாமிமலை கோயில் தரிசனத்துக்குப் போய் வந்ததாக ஞாபகம்.

நவம்பர் மாதம் முதல் வாரத்தில் தாத்தாவை முடிந்தால் ஒருமுறை வந்து பார்க்குமாறு அம்மா கடிதம் எழுதியிருந்தார். நான் மீண்டும் கும்பகோணத்துக்குக் கிளம்பிய போது என் மூத்த மகளும் வருவதாகக் கூறவே இருவருமாகச் சென்றோம். தாத்தாவின் கணீர்க் குரலுக்குப் பழகியிருந்த எங்களுக்கு அவர் அதிகம் பேசாமல் படுத்திருந்ததை நம்புவதே கடினமாக இருந்தது. ஆனால் அவர் அப்போதும் கூட எல்லோருடைய நலத்தையும் விசாரித்துத் தெரிந்துகொண்டார்.

அம்மா தாத்தா செய்து வைத்திருக்கும் ஏற்பாடுகளைப் பற்றிக் கூறினார். தாத்தா தன்னுடைய புரோகிதரை அழைத்துத் தனக்கு ஏதாவது ஆகிவிட்டால் தன் மாப்பிள்ளை உடல் தெம்பு குறைந்தவராதலால் அவருக்குத் தோதாக எல்லாவற்றையும் விரைவில் முடித்துக்கொடுக்க வேண்டுமென்று ஒரு வாரம் முன்பு கேட்டுக் கொண்டிருந்தார் என அம்மா கூறியபோது தாத்தா ஏதோ புகைவண்டியில் முன்பதிவு செய்துவிட்டுப் பயணத்திற்குக் காத்திருக்கும் பயணி போலக் காட்சியளித்தார். அவர் வாழ்ந்து காட்டி எங்களுக்குச் சொல்லிக் கொடுத்திருந்த நற்கொள்கைகளை என்றும் நாங்கள் பின்பற்றுவோமென நானும் ஏதோ தாத்தாவிடம் விடைபெறுவது போலப் பேசிவிட்டு வந்தேன்.

சரியாக அன்றிலிருந்து இருபத்தி இரண்டாம் நாளில் டிஸம்பர் மாதம் முதல் தேதி அன்று தாத்தாவின் உயிர் பிரிந்தது என அம்மா அதிகாலையில் பொதுத் தொலைபேசியிலிருந்து அழைத்துத் தெரிவித்தார். என் கணவர் மீண்டும் ஒரு சிறு விபத்தில் சிக்கி நான்கு நாட்கள் மருத்துவமனையில் இருந்துவிட்டு முதல்நாள் மாலைதான் வீட்டிற்குத் திரும்பியிருந்தார். எனவே அவரால் வர இயலவில்லை. குழந்தைகளும் நானுமாக கும்பகோணத்திற்குச் சென்று தாத்தாவுக்குக் கண்ணீர் அஞ்சலி செய்தோம். பலவீனமான உடல்நிலையிலிருந்த என் அப்பாவைச் சிரமப்படுத்த வேண்டாமெனச் சொல்லி தாத்தாவின் தம்பியான இராமச்சந்திர தாத்தா தானே முன்வந்து தாத்தாவின் சடங்குகளைச் செய்தார். ஒரு நிறுவனத்தின் சகாப்தம் முடிந்தது போலத் தோன்றியது.

பின்னாளில் தாத்தாவின் ஒன்றுவிட்ட சகோதரரான சீனுத் தாத்தாவை அவரது அவரது இளைய சகோதரரான பஞ்சநதத் தாத்தாவின் சதாபிஷேகக் கொண்டாட்டத்தில் சந்தித்தபோது அவர் கூறியது எனது உள்ளத்தைத் தொட்டது. அவர் சென்னையில் ஏ.ஜி. அலுவலகத்தில் அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தான் தன்னுடைய வாழ்க்கை அனுபவங்களைச் சுமார் ஆயிரம் பக்கங்களுக்கு எழுதி வைத்திருப்பதாகவும் அதன் முகவுரையில், ‘நான் இவ்வளவு தூரம் எழுத முடிந்ததற்கு இரண்டு பேர்கள் காரணம் - அவர்கள் என்னுடைய அப்பாவும் வேணு அண்ணாவுமே’ என்று எழுதியிருப்பதாகவும் அதை வேணு அண்ணாவின் பேத்தியான என்னிடம் சொல்லத் தோன்றியது என்றும் அவர் கூறியபோது எனக்குத் தாத்தாவை நினைத்து மெய்சிலிர்ப்பு ஏற்பட்டது. அதே சமயம் தன்னுடைய தொண்ணூறாவது வயதிலும் எந்த விதமான ஞாபக மறதியும் தடுமாற்றமும் இல்லாமல் தெளிவாகப் பேசும் சீனுத் தாத்தாவைப் பார்த்தும் பிரமிப்பு ஏற்பட்டது.

‘என் அப்பாவும் வேணுத் தாத்தாவும்தான் என் முன்னேற்றத்துக்குக் காரணம்’ என்ற என்னுடைய வெகு நாளைய உள்ளக்கிடக்கையை அவர்களது எளிமை, தொலைநோக்குப் பார்வை, கடின உழைப்பு முதலிய கோட்பாடுகளால் வழி நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் நானும் இங்கு பதிவு செய்வது பொருத்தமாக இருக்கும்.

## 19. கும்பகோண வீட்டிலிருந்து விடை பெற்றது



அம்மா பெண்ணுடனும் பேத்தியுடனும்



அம்மா-அப்பா, ரவியுடனும் பேத்தியுடனும்

1997ஆம் வருடத்தின் டிஸம்பர் மாதத்திலிருந்து டபீர் நடுத் தெரு வீட்டில் அப்பா-அம்மா மற்றும் ரவி என மூவர்தான் வசித்துவந்தார்கள். அப்பா-அம்மா இருவருக்குமே உடலில் நாளுக்கு நாள் தெம்பு குறைந்து வந்தது. இருவருக்கும் உடல்நலப் பாதிப்புக்கள் ஒரே நேரத்தில் ஏற்பட்டன. நாங்கள் (மகள்கள்) சில சமயங்களில் சென்று கவனித்துக் கொண்டாலும் அவரவர் வாழ்க்கைகளில் சுழன்று கொண்டிருந்த எங்களுக்கு அது எப்போதும் சாத்தியப்படவில்லை. ‘எனவே அவர்கள் சென்னைக்கு ஜாகையை மாற்றிக் கொள்ளவேண்டும்’ எனப் பெற்றோரிடம் கூற ஆரம்பித்தோம். அவர்கள் அதற்கு இலேசில் செவி சாய்க்கவில்லை. கடைசியில் ஜயந்தியும் அவள் கணவரும் தங்களுடைய தாம்பரம் வீட்டில் தற்போது ஜாகை யாருமில்லையென்றும் அப்பா-அம்மா ரவியுடன் அங்கு வந்து இருக்கலாமென பல முறை எடுத்துச் சொல்லிய பிறகு அவர்கள் 2001ஆம் ஆண்டில் அந்த

ஏற்பாட்டுக்குச் சம்மதித்தார்கள். கும்பகோணம் வீட்டை விரைவிலேயே விற்றுச் செலவு போக மீதிப் பணத்தை வங்கியில் அப்பா-அம்மா பெயரில் டெபாஸிட்டாகப் போட்டார்கள்.

9, டபீர் நடுத் தெரு வீட்டில் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்த அப்பா-அம்மாவும் ரவியும் பாசமான நினைவுகளைச் சுமந்து வீட்டிடம் பிரியாவிடை பெற்றுக்கொண்டு சென்னைக்குக் கிளம்பினார்கள். 2001ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் முப்பதாம் தேதி அன்று அப்பா-அம்மா மற்றும் ரவியுடன் டே எக்ஸ்ப்ரஸில் (Day Express) நானும் பயணித்து அவர்களது சென்னை வருகைப் பயணத்தில் பங்குகொண்டேன்.

## 20. அப்பா-அம்மா மற்றும் தம்பியின் சென்னை வாழ்க்கை

மேற்குத் தாம்பரத்தில் அமைதியான தனி வீடாக இருந்த அந்த வீடு அப்பா-அம்மா மற்றும் ரவிக்கு விரைவில் பழகிப் போனது. அம்மா கும்பகோணத்தில் எப்படி வெளி வேலைகளையும் கவனித்துக்கொண்டாரோ அது போலவே அந்த புதிய சுற்றுப் புறத்திலும் கடைகள், வங்கி முதலியன சென்று வர நன்கு பழகிக்கொண்டார். அப்பா மிகவும் அவசியமிருந்தாலே வெளியில் கிளம்புவார்.

ஆறு மாதங்கள் கழித்து வந்த அப்பாவின் பிறந்த நாளன்று அவருக்கு எண்பது வயது பூர்த்தியானதால் என் தங்கைகளும் நானும் தத்தம் குடும்பத்துடன் தாம்பரம் வீட்டிற்கு வந்து பெற்றோரிடம் ஆசி பெற்றோம். பெற்றோருக்கும் ரவிக்கும் புத்தாடைகள் வாங்கினோம். விருந்து உண்டோம். சில புகைப்படங்கள் எடுத்துக்கொண்டோம்.



February 2002 : அப்பாவின் எண்பதாவது பிறந்த நாளன்று

பூஞ்சையான உடல்வாகு கொண்ட அப்பாவிற்கு நாளடைவில் தெம்பு குறைந்து வந்ததால் அவருக்கே அம்மாவின் உதவி தேவைப்பட்டது. வீட்டு வேலை மட்டும் வெளி வேலைகளோடு ரவியையும் முழுநேரமும் பார்த்துக்கொள்வது அம்மாவின் பொறுப்பானது. அப்பாவுக்கும் அம்மாவுக்கும் பதினைந்து வயது வித்தியாசமானதால் அம்மாவுக்கு அப்போது அறுபத்தி ஐந்து வயதுதான் என்றாலும் அவருக்கு இருந்த வேலைகளின் பளு அந்த வயதுக்கு மீறியதாக இருந்தது. அம்மா மனோதைரியத்துடன் எல்லாவற்றையும் சமாளித்தாலும் அவரது உடல்நிலை அவ்வப்போது கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

எனவே ரவியை ஏதாவது ஒரு காப்பகத்தில் (Home) சேர்க்கலாமென என் கணவரும் நானும் ஆலோசனை கூறிச் சில காப்பகங்களுக்குச் சென்று கட்டணம், சுற்றுச் சூழல், சுகாதாரம், கண்காணிப்பு, கவனம், பணியாளர்களின் சேவை முதலியவை பற்றித் தெரிந்து வந்தோம். அவற்றில் அருகிலிருந்த ஒரு காப்பகம் திருப்திகரமாக இருக்கவே பெற்றோரையும் அங்கு அழைத்துப்போய்க் காண்பித்தோம். ரவியை அங்கு சேர்க்கலாமென பெற்றோர் கனத்த மனத்துடன் முடிவு செய்தனர். அவனைக் காப்பகத்தில் சேர்த்த பிறகு

அப்பாவும் அம்மாவும் சில நாட்களுக்குச் சரியாகச் சாப்பிடவுமில்லை; யாரிடமும் பேசவுமில்லை. நாளடைவில் சிறிது சமாதானமடைந்தனர்.

அவனைக் காப்பகத்தில் சேர்த்துச் சில மாதங்கள் ஆகியிருந்த நிலையில் ஒரு நாள் தற்செயலாகத் தொலைக்காட்சிச் செய்தியைப் பார்க்க நேர்ந்த ஞானத்துக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அந்தச் செய்தியில் ரவியும் அவனுடன் காப்பகத்திலிருந்த மற்றவர்களும் காவல்துறை பாதுகாப்புடன் ஒரு வேனில் ஏற்றப்பட்டு வேறு இடத்துக்கு அழைத்துச் செல்லப்படுவதைப் பார்த்த அவள் உடனே பெற்றோருக்குத் தொலைபேசியில் தெரிவித்தாள். பெற்றோர் உடனே காப்பகத்தை அழைத்து நிலவரத்தைத் தெரிந்துகொண்டனர்.

அதாவது சமீபத்தில் ஏர்வாடியில் ஒரு மனநலக் காப்பகத்தில் நடந்திருந்த தீ விபத்திற்குப் பிறகு அரசு அதிகாரிகள் எல்லா காப்பகங்களுக்கும் சென்று சோதனை செய்வதாகவும் பாதுகாப்பு அம்சங்கள் குறைந்திருந்தால் அவற்றைச் சரி செய்த பிறகே காப்பகம் மீண்டும் செயல்படமுடியுமென்றும் அவர்கள் கூறியதிலிருந்து தெரியவந்தது. அது வரைக்கும் காப்பகத்திலிருந்தவர்கள் அயனாவரத்திலுள்ள அரசினர் மன நல நிறுவனத்துக்கு (Institute of Mental Health) அழைத்துச் செல்லப்பட்டிருப்பதாகவும் தெரியவந்தது. ரவி இருந்த காப்பகத்தினர் தங்களுக்கு இடப்பட்டிருந்த அரசாங்க ஆணைகளைத் தாங்கள் ஒரு வாரத்திற்குள் நிறைவேற்றமுடியுமென்றும் தெரிவித்தனர்.

பெற்றோரிடமிருந்து இந்தத் தகவல்கள் எங்களுக்குத் தொலைபேசியில் தெரிவிக்கப்பட்டன. அன்று மாலை என் கணவரும் நானும் அயனாவரம் மன நல நிறுவனத்துக்குச் சென்று ரவியைப் பார்த்தோம். எங்களைப் பார்த்ததில் அவனுக்கு மகிழ்ச்சி எனத் தெரிந்தது. அவனுடன் காப்பகத்திலிருந்த இரண்டு நண்பர்கள் எங்களிடம் ரவி சாப்பிடாததால் தாங்கள் ஊட்டிவிட்டதாகக் கூறியது நெஞ்சைத் தொடுவதாக இருந்தது. காப்பகம் ஒரு வாரத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துமுடித்து அரசாங்கத்தின் அனுமதியுடன் தன்னுடைய பொறுப்பில் விடப்பட்டிருந்தவர்களை அழைத்துக்கொண்டது.

பெற்றோர் காப்பகத்தில் அனுமதி கேட்டு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை அவனை ஒரு வாரம் வீட்டிற்கு அழைத்து வைத்துக்கொள்வார்கள். ஒரு வாரம் முடிந்த பிறகு திரும்பக் கொண்டுவிடும் போது அவர்களுக்கும் ரவிக்கும் அவ்வளவு சுலபமாக இருக்காது. மாதம் ஒரு முறை வீட்டிலிருந்து அவனுக்குப் பிடித்த மாதிரியான உணவுகளைச் செய்துகொண்டு போய் அம்மா அவனுக்குச் சாப்பாடு போட்டுவிட்டு வருவார்.

அப்பா-அம்மா தங்களது முதல் மூன்று பேத்திகளின் திருமண நிச்சயதார்த்தங்களிலும் திருமணங்களிலும் தம்பதியாகப் பங்குகொண்டு மகிழ்ந்திருக்கிறார்கள்.



ஃபிப்ரவரி 2004 : அம்மா-அப்பா

இரண்டு கொள்ளுப் பேத்திகளையும் ஒரு கொள்ளுப் பேரனையும் கொள்ளுத் தாத்தா-பாட்டியாகச் சேர்ந்து கொஞ்சியிருக்கிறார்கள். தங்களுடைய முதல் மூன்று பேத்திகளும் இரண்டு பேரன்களும் நன்கு படித்து நல்ல வேலைகளில் அமர்ந்ததையும் கடைசி இரண்டு பேத்திகளும் நன்கு படித்து வந்ததையும் சேர்ந்தே கண்டு மகிழ்ந்திருக்கிறார்கள். மகள்களின் வீடுகளுக்கு நாள், கிழமை மற்றும் வைபவங்களுக்குத் தம்பதியாக வருகைதந்து ஆசிர்வாதம் செய்திருக்கிறார்கள்.



2006 : அம்மா-அப்பா இரு மகள்களுடன்

2007ஆம் வருடத்தின் ஜூன் மாதத்தில் நான் அவர்களை உதவிக்கு வந்து இருக்குமாறு கேட்டுக்கொண்ட போது ஒரு வாரம் வந்து தங்கி உதவியாக இருந்தார்கள்.



02-12-2007 : அப்பா-அம்மா கொள்ளுப் பேத்தி மற்றும் கொள்ளுப் பேரனுடன்

2007ஆம் வருடத்தின் டிஸம்பர் மாதத்தில் அப்பாவுக்குப் பின் இடுப்பின் அடிப்பக்கத்தில் ஒரு கட்டி வந்து அது குணமாகாததால் மருத்துவ மனையில் சேர்க்கச் சொல்லி அறுவை சிகிச்சை செய்தார்கள். அதிலிருந்து ஐம்பத்தி மூன்று நாட்களுக்குப் படுத்த படுக்கையாக இருந்த அப்பா அதன் பிறகு எழுந்திருக்கவில்லை.

நான் அச்சமயத்தில் சில நாட்கள் பெற்றோர் வீட்டிலேயே தங்கி அலுவலகத்துக்குச் சென்று வந்தேன். பெரும்பாலான நாட்களில் பகல் அல்லது இரவு என ஒரு நேரமாவது அங்கு தங்கினேன். பஞ்சடைந்த கண்களுடன் படுத்திருந்த அப்பாவின் அருகில் என்னால் முடிந்த அதிகபட்ச நேரம் இருந்ததைத் தவிர என்னால் எதுவும் செய்யமுடியவில்லை.

அம்மாதான் அவருக்குத் துடைத்து விடுவது, ஆகாரம் கொடுப்பது முதலிய எல்லாப் பராமரிப்புக்களையும் செய்துவந்தார். அறுவை சிகிச்சை செய்யப்பட்ட இடத்தை வீட்டிற்கு வந்து ட்ரஸ்ஸிங் செய்வதற்கும் அம்மா ஒரு உதவியாளரை ஏற்பாடு செய்திருந்தார்.

அப்பாவைப் போலவே வரவு-செலவுக் கணக்குகளை டைரியில் எழுதிப் பராமரிக்கும் பழக்கம் உள்ள நான் 2008ஆம் ஆண்டின் டைரியின் கடைசிப் பக்கங்களில் அப்பாவின் கடைசி நாட்களின் நிகழ்வுகளை எழுதி வைத்திருக்கிறேன். அப்பா தன் வலிகளுக்கிடையில் மெல்லிய குரலில் ‘வாசுதேவ, வரதரூப, வனமாலாதர, வாரீச லோசன’ எனப் பாடியதையும் விட்டு விட்டு வந்த நினைவுகளுக்கிடையில் அவசரம் அவசரமாக, ‘கேசவா, மாதவா, வாசுதேவா, நாராயணா, இராமா, இராமா, ஓம் நமச்சிவாய...’ என்று அடிக்கடி முணுமுணுத்ததையும் குறித்து வைத்திருக்கிறேன். அந்த அவசரம் அவர் ஏதோ நேரில் கடவுளைப் பார்ப்பது போல் அருகிலிருப்பவர்க்குத் தோன்றும். ஜீவனின் கடைசி காலங்களில் கடவுள் வந்து தரிசனம் கொடுத்துத் தன்னைத் தெரிகிறதா என விசாரிப்பாரென்று நான் கதைகளில் கேட்டிருக்கிறேன். அதை அப்பா விஷயத்தில் கண் கூடாகப் பார்த்தேன்.

ஜனவரி பதினைந்தாம் தேதி அன்று என்னிடம், ‘நீ என் மேல எவ்வளவு அன்பு வெச்சிருக்கம்மா’ என்றார். பிறகு இரண்டு நாட்களுக்கு நினைவு இல்லை. அப்பா மிகவும்

சிரமப்பட்டுக்கொண்டிருந்ததால் அம்மா அவருக்கு பிராயச்சித்தம் செய்துவைப்பதைப் பற்றி புரோகிதரிடம் விசாரித்தார். புரோகிதர் அதைப் பதினெட்டாம் தேதி அன்று நடத்திவைத்தார். ஜனவரி இருபத்தி ஐந்தாம் தேதி அன்று 'கொஞ்சம் அமைதியா பேசாம இரு' என நான் எதுவும் பேசாமலிருந்தபோதே அப்பா கூறியதுதான் அவர் என்னிடம் கடைசியாகப் பேசியது. இருபத்தி ஆறாம் தேதி அன்று ஞானம் செய்து எடுத்து வந்திருந்த பழச் சாறு அவரது தொண்டைக்குள் வேகமாக இறங்கியது எங்களுக்கு ஓரளவு ஆறுதலாக இருந்தது.

இருபத்தி ஏழாம் தேதி அன்று தியாகப்பிரம்ம ஆராதனை தினமான பஹுள பஞ்சமியாதலால் காலையில் டிவியில் பஞ்சரத்ன கீர்த்தனைகள் ஒளிபரப்பப்பட்டன. பிறகு அன்று ஞாயிற்றுக் கிழமையாதலால் நான் வீட்டிற்குச் சென்று பார்த்து வருவதாகச் சொல்லிக் கிளம்பினேன். பஸ் நிறுத்தத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது எனக்கு நிம்மதியற்று இருப்பது போல் தோன்றவே திரும்பிப் பெற்றோர் வீட்டிற்கே வந்து சேர்ந்தேன். சற்று நேரம் கழித்து முற்பகலிலேயே ட்ரஸ்ஸிங் செய்பவர் வந்தார். அவர் அப்பாவிற்கு ட்ரஸ்ஸிங் செய்து கொண்டிருக்கும் போது நான் அப்பாவின் வேதனையைப் பார்க்க முடியாமல் தலையைக் குனிந்துகொண்டிருந்தேன். திடீரென அம்மா என்னை அப்பாவைப் பார்க்கச் சொன்னார். அம்மாவும் நானும் பார்த்துக்கொண்டிருந்தபோதே அப்பாவின் உயிர் பிரிந்தது. அப்போது வீட்டிலிருப்பதற்குத்தான் அப்பா என்னைத் திரும்ப அழைத்திருக்கிறாரெனத் தோன்றியது. என் கணவர் வந்தார். எனது தங்கைகளும் குடும்பத்துடன் வந்து சேர்ந்தனர். கைபேசியை வீட்டிலேயே மறந்து வைத்துவிட்டுக் கணவருடன் இரு சக்கர வாகனத்தில் அப்பாவைப் பார்க்க வந்து கொண்டிருந்த வஸந்தாவிற்கு என் அழைப்பு 'மிஸ்ட் காலில்' போய்விட, அவள் வீட்டை நெருங்கும்போது ஊகித்துக் கொண்டு அதிர்ச்சியடைந்ததாகக் கூறினாள். ஜயந்தி அலுவலகத்திலிருந்து கிளம்பி ரவியின் காப்பகத்திற்குச் சென்று அவனையும் அழைத்துக்கொண்டு வந்திருந்தாள். ஞானத்தின் கணவர் அப்பாவின் சடங்குகளை மிகவும் சிரத்தையுடன் செய்தார். ரவி மீண்டும் காப்பகத்தில் கொண்டுவிடப்பட்டான். நான் அம்மாவுடனேயே இன்னும் இரண்டு வாரங்கள் தங்கிப் பிறகு வீட்டிற்கு வந்தேன்.



டபீர் நடுத் தெரு வீட்டு வாசலில் ‘ரோஜா’ என்று கூவப்பட்ட போதெல்லாம் எனக்குப் பன்னீர் ரோஜா மலர்கள் பிடிக்குமென்பதற்காக அப்பா ஓடி ஓடி அவற்றை வாங்கி வந்தது ஞாபகத்துக்கு வருகிறது.

எனக்குப் பொருளாதார நிலை இன்னும் கொஞ்சம் சுலபமாக இருந்திருந்தால் அப்பாவுக்குத் தாராளமாக உதவி செய்திருக்கலாமே என்ற ஒரு வருத்தம் எப்போதுமுண்டு. அவர் பதவி ஓய்வு பெற்றதிலிருந்து கும்பகோணம் வீட்டை விற்றது வரையிலான சுமார் இருபது வருட காலத்தில்தான் அவருக்குப் பணப் பற்றாக்குறை அதிக அளவிலிருந்தது. ஆனால் அந்த இருபது வருடங்களும் என்னுடைய வீட்டின் பொருளாதாரத்தை நான் தாங்கிப் பிடிக்க வேண்டியிருந்த காலத்துக்குள் அடங்கியதால் நான் நினைத்தபடி அப்பாவுக்கு உதவ

முடியவில்லை. இருந்தாலும் கவிதை நயம் மிகுந்த என் அப்பா என்னை எப்போதும் கொண்டாடியே பேசியதால் எனக்குக் குற்ற உணர்ச்சி இல்லாமலிருக்கிறது. அவர் கவிதை நயம் மிகப் பேசுவாரே தவிர வார்த்தைகள் உண்மையாக இதயத்தின் ஆழத்திலிருந்து வரும்.

தான் தாம்பரம் வீட்டிலேயே இருக்கப்போவதாக அம்மா கூறினார். அப்பா தான் இருந்தபோதே, தனக்குப் பின் அம்மாவுக்கு வரும் குடும்ப ஓய்வூதியம், ரவிக்கு மனநிலை சரியில்லாததால், அம்மாவுக்குப் பின் ரவிக்கும் கிடைக்குமெனவும் தான் அப்போதே அதற்கு எழுதி வைக்க முடியாதெனவும் அம்மா குடும்ப ஓய்வூதியம் வாங்க ஆரம்பித்த பிறகு உடனடியாக அதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமெனவும் சொல்லிவைத்திருந்தபடி அம்மா அந்த ஏற்பாட்டை ஜயந்தியின் உதவியுடன் செய்து முடித்தார். அப்பாவின் எழுத்து முறைகளுக்குப் பழக்கப்பட்டிருந்த அம்மா எழுதிக்கொடுக்கும் கோரிக்கைக் கடிதங்கள் முத்துக் கோர்த்தது போன்ற அழகான கையெழுத்தில் இருப்பதோடல்லாமல் பொருத்தமான பொருள்(Subject) மற்றும் குறிப்பு(Reference) ஆகியவற்றுடன் தெளிவான விண்ணப்பமும் ஆதாரபூர்வமான சான்றுகளின் இணைப்புமாகத் தன்னிறைவுடையதாக இருக்கும். அம்மா மாதம் ஒருமுறை ரவியைப் பார்த்து வருவதும் எப்போதாவது முடிந்தபோது நான்கு நாட்கள் அழைத்து வருவதும் தொடர்ந்தது.

மாற்றுத் திறனாளிகளுக்கு அரசாங்கம் அளிக்கும் மாதாந்திர உதவித்தொகைகளைப் பற்றிச் சமூக நலத் துறை அமைச்சர் சில நிகழ்ச்சிகளில் பேசியிருந்த செய்திகளை நான் படித்தேன். அம்மாவுக்கு வந்த குடும்ப ஓய்வூதியமும் வங்கியிலிருந்து வந்த வட்டித் தொகையும் வீட்டுச்செலவுகள், ரவியின் காப்பகத்திற்கு மாதக் கட்டணம், மருந்து செலவு முதலியவற்றோடு நெருக்கிப்பிடித்து வந்ததால் ரவிக்கு அந்த உதவித்தொகை கிடைத்தால் அம்மாவுக்குச் சௌகரியமாக இருக்குமே என நினைத்தேன். அதற்கான நடைமுறைகளைத் தெரிந்துகொண்டு அப்போது மருத்துவச் சேவை இயக்குநரக வளாகத்திலிருந்து (DMS Complex) செயல்பட்டுக்கொண்டிருந்த மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்திற்குச் சென்று படிவங்களை வாங்கினேன். ரவியின் மனநிலைக்குச் சான்றிதழ் வாங்குவதற்காக அம்மா சிரமத்தைப் பொருட்படுத்தாமல் அவனைக் காப்பகத்திலிருந்து அண்ணாநகரிலுள்ள ஸ்கார்ஃப் (SCARF) நிறுவனத்துக்கு ஆட்டோவில் அழைத்துவந்தார். சான்றிதழ் வாங்கிவந்த பிறகு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தில் கொடுத்தபோது அடையாள அட்டை கொடுத்தார்கள். ஆனால், ‘உதவித் தொகை MR (mental

retardation) எனப்படும் மனவளர்ச்சி குறைந்தவர்களுக்குத்தான் உண்டு. உங்கள் சான்றிதழ் MI (mental illness) எனப்படும் மனநோயைக் குறிப்பிடுகிறது. எனவே உதவித் தொகை கிடையாது' என்றார்கள். மனநோயாளிகளுக்கும் அந்த உதவித் தொகை தரப்படவேண்டுமெனப் பலர் அவ்வப்போது குரல் கொடுப்பதை செய்தித்தாளிலிருந்து பிறகு அறிய முடிந்தது.

அதற்கு அடுத்த நிதியாண்டில் (2009-10) அந்தத் திட்டத்தைப் பற்றி செய்தித்தாளில் வந்திருந்த செய்தியில் தகுதியுள்ள நோய்களில் மனநோயும் குறிப்பிடப் பட்டிருந்தது. அலுவலகத்தில் விசாரித்ததில் அரசாங்க மருத்துவர் ஒரு வாரத்துக்குக் குறையாமல் கண்காணிப்பில் வைத்திருந்து சான்றிதழ் தரவேண்டும் என்றார்கள். அம்மா அசராமல் சம்பந்தப்பட்ட அரசு மருத்துவமனையில் ரவியை வைத்துக்கொண்டு ஒரு வாரம் தங்கி அரசு மருத்துவரிடமிருந்து சான்றிதழை வாங்கிவந்தார். அதை எடுத்துக்கொண்டு மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்திற்குப் போன பிறகு அவர்கள் அடையாள அட்டையிலேயே மருத்துவர் எழுதிக் கையொப்பமிட்டிருக்கவேண்டும் என்றார்கள். நானும் அசராமல் அந்த மருத்துவரின் தனிப்பட்ட ஆலோசனை மையத்துக்குச் சென்று அடையாள அட்டையிலேயே மருத்துவரின் சான்றிதழைக் கையொப்பத்துடன் வாங்கிவந்தேன். அவர்கள் கேட்டபடி எல்லாவற்றையும் கொடுத்த பிறகும் ரவி உதவித்தொகைக்குத் தகுதி பெறவில்லை என்றார்கள். சான்றிதழ் வாங்கிவருமாறு எங்களுக்கு வழிகாட்டிய பணியாளருக்குத் திட்டத்தைப் பற்றிய நுணுக்கமான புரிதல் இல்லை என்று தோன்றியது. ரவிக்கு இருந்த நோயின் தீவிரத் தன்மையால் அவனுக்கு உதவித்தொகை கிடைக்கும் என்று நாங்கள் நம்பியதாலேயே அவ்வளவு முயற்சி செய்தோம். அதற்குமேல் எங்களுக்கு அந்த திட்டத்தில் நம்பிக்கை போய்விட்டது. அப்பா இருந்திருந்தால் எப்படிச் செய்தித் தாளிலிருந்து தகவலைத் தெரிந்து கொண்டு உண்மையாக முயற்சி செய்திருப்பாரோ அப்படி நாமும் செய்தோம் என்ற திருப்தி மட்டும் ஏற்பட்டது.

இக்கட்டுரை எழுதும்போது கூட (06.06.2020) தமிழ்நாடு அரசாங்கத்தின் www.scd.tn.gov.in என்ற இணையதளத்தைப் பார்க்கிறேன். அதில் மாதாந்திர உதவித் தொகையில் Mental retardation பற்றி மட்டும்தான் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்கள்.

| | | |
|---|---|---|
| 1 | Gist of the Scheme | Maintenance Allowance is given at the rate of Rs.1,000/- per month to the Mentally Retarded persons with 45% and above. The allowance is sent through "Core Banking System" to bank account. |
| 2 | Eligibility Criteria | The extent of Mental Retardation should be 45% and above. |

கீழே கண்டிருப்பது போல், வீதிகளில் அலைந்து திரியும் Mentally ill நபர்களை மீட்டெடுத்து மருத்துவ மனை அல்லது புனர்வாழ்வு மையத்தில் சேர்ப்பது மட்டுமே அந்தத் துறை மனநோயாளிகளுக்காக வைத்திருக்கும் திட்டமாகும்!

| | | |
|---|---|---|
| 1. | Gist of the Scheme | Mentally ill persons wandering in the streets and other public places are rescued and admitted in Hospitals/Rehabilitation Home for the Mentally ill. |

மனநோயாளிகளைப் பார்த்துக் கொள்வதில் உடல் சிரமமும் மன அழுத்தமும் தவிர உதவியாளருக்குச் சம்பளம் அல்லது காப்பகத்துக்குக் கட்டணம் முதலிய பணச் செலவும் அதிகமாக ஆகிறபடியால் அரசாங்கம் மனநோயையும் மாதாந்திர உதவித்தொகை திட்டத்தில் கொண்டுவந்தால் நலத்திட்டம் முழுமையாகும்.

அம்மாவுக்கு கழுத்து எலும்புகள் தேய்ந்து வந்ததன் காரணமாக தலை சுற்றல், மயக்கம் முதலியன ஏற்பட்டதால் இனிமேல் அம்மா தனியாக இருக்கக் கூடாது என நாங்கள் அம்மாவிடம் வற்புறுத்த ஆரம்பித்தோம். அம்மா தன்னுடைய பெண்களின் வீட்டில் தன்னுடைய சௌகரியம் போலத் தங்கலாமென்பதை எல்லோருமாக எடுத்துக் கூறினோம். ஆனால் அம்மா இன்னும் தனக்கு உடல் நலம் நன்றாக இருந்த நாட்களில் எப்போதாவது ஓரிரு நாட்களாவது ரவியை வீட்டுக்கு அழைத்து வந்ததால் தாம்பரம் வீட்டை விட்டு வெளியே வர விரும்பவில்லை. ஆனால் நாளடைவில் உடல் தெம்பு அதற்கும் இடம் கொடுக்கவில்லை. அந்த வருட (2008) டிஸம்பர் மாதத்தில் ஒரு நாள் நள்ளிரவில் அம்மா தனக்குத் தலைசுற்றலாக இருந்ததைத் தொலைபேசியில் தெரிவித்த போது ஜயந்தி பொழுது விடியும் வரை அம்மாவுக்கு ஒரு துணை இருக்குமாறு ஏற்பாடு செய்தாள். பிறகு காலையில் சென்று அம்மாவை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றாள். அம்மா சில நாட்கள் மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை எடுத்துக்கொள்ளவேண்டியிருந்தது. அந்தக்

காரணங்களால் தாம்பரம் வீட்டில் தனியாக இருக்கும் தைரியம் அம்மாவிடமிருந்து விடைபெற்றது.

## 21. அம்மா சற்று ஓய்வாகப் பெண்களின் வீட்டில்...

2009ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து அம்மா தன்னுடைய பெண்களின் வீட்டில் தன்னுடைய சௌகரியம் போல இருந்து வருகிறார். 'பெண்கள் அனுசரணையாக இருப்பது பெரிய விஷயமில்லை, மாப்பிள்ளைகளும் ஒத்தாற் போல இருப்பதாலேயே தன்னால் பெண்கள் வீட்டில் சுலபமாக இருக்கமுடிகிறது' என அம்மாவுக்குத் திருப்தி.

மாதம் ஒரு முறை வீட்டிலிருந்து ரவிக்குப் பிடித்த மாதிரியான உணவுகளைச் செய்துகொண்டு போய் அவனைப் பார்த்து சாப்பாடு போட்டுவிட்டு வரும் அம்மாவின் நடைமுறை தொடர்ந்தது.

2009ஆம் ஆண்டின் நவராத்திரி ஆரம்ப தினத்திற்கு முதல் நாள் ரவியின் காப்பகத்திலிருந்து அவனுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டிருப்பதாகவும் ஆக்ஸிஜன் வைத்திருப்பதாகவும் தொலைபேசி அழைப்பு வந்தது. அம்மாவும் நானும் வீட்டிலிருந்து ஆட்டோவில் கிளம்பி வழியில் ஞானத்தையும் அழைத்துக்கொண்டு காப்பகத்திற்கு விரைந்தோம். நாங்கள் சென்ற போது அவனைக் காற்றோட்டமாகத் திறந்த வெளியில் நாற்காலியில் உட்காரவைத்து அருகில் உதவியாளர்கள் இருந்தார்கள். எங்களுக்கு நிம்மதிப் பெருமூச்சு வந்தது. நால்வருமாகக் கைபேசியில் புகைப்படமெடுத்துக் கொண்டோம். ஒரு மருத்துவ மனையில் இரண்டு-மூன்று நாட்கள் சேர்த்துத் தெம்பாக்கிக் கொண்டுவிடுமாறு காப்பகத்தில் கூறினார்கள். அவன் காப்பகத்தில் சேர்த்திருந்த அந்த எட்டு வருடங்களில் அந்த மாதிரி ஒரு தேவை ஏற்பட்டது அதுவே முதல் முறையாகும். ஞானம் அவள் வீட்டினருகில் ஒரு மருத்துவ மனையைப் பார்த்து ஏற்பாடு செய்தாள். அம்மா ரவியுடன் மருத்துவ மனையில் தங்கிக்கொள்ள ஞானம் சாப்பாடு கொண்டு கொடுத்துக் கவனித்துக்கொண்டாள். நான்கு நாட்களில் நல்ல தெம்பு வரவே ரவி மீண்டும் காப்பகத்தில் கொண்டுவிடப்பட்டான்.



2010ஆம் ஆண்டில் நடந்த பேரன்களது திருமணங்களில் அம்மா பங்கு கொண்டு ஆனந்தமடைந்தார். படித்துக்கொண்டிருந்த கடைசிப் பேத்திகளும் படிப்பை முடித்து நல்ல வேலைகளில் அமர்ந்தனர். அந்தப் பேத்திகளின் திருமணங்கள் முறையே 2013ஆம் ஆண்டிலும் 2015ஆம் ஆண்டிலும் நடக்க அம்மா மகிழ்ச்சியாகப் பங்குகொண்டார். கொள்ளுப் பேத்திகளையும் கொள்ளுப் பேரன்களையும் கொஞ்சி மகிழ்கிறார்.

ரவிக்கு உடல்நலக் குறைவு ஏற்படும்போதேல்லாம் காப்பகத்திலிருந்து தொலைபேசி அழைப்பு வருவதும் அவனை அழைத்துவந்து மருத்துவ மனையில் நாலைந்து நாட்கள் வைத்துக்கொண்டு ட்ரிப்ஸ் (drips) ஏற்றி அனுப்புவதும் வழக்கமாயிற்று. 2015ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து இந்த தொலைபேசி அழைப்புக்கள் அதிகமாயின. மார்ச் மாதத்தில் மிகவும் அவசரமாகவும் ஆபத்தான தொனியிலும் அழைப்பு வந்த அன்று ரவி தாம்பரத்திலுள்ள ஒரு தனியார் மருத்துவ மனைக்கு அழைத்து வரப்பட்டு ஒரு மாதத்திற்கு மேல் அங்கு தங்கநேர்ந்தது. அம்மா அவனுடன் தங்கி அவனைக் கவனித்துக்கொண்டார்.

அடிக்கடி உடல்நலம் குறைவதால் காப்பகத்தில் அவனைத் தொடர்ந்து வைத்துக்கொள்ளத் தயங்கினார்கள். எனவே ரவியை மருத்துவமனை வசதியுள்ள வேறு ஒரு காப்பகத்துக்கு மாற்றினோம். கிழிந்த துணி போல் இந்த காப்பகத்துக்கு வந்து சேர்ந்த அவன் ஒரு வாரத்தில்

நாற்காலியில் உட்காரும் அளவுக்கு உடல்நலம் தேறினான். எனக்கு ரவி கையால் ஏதாவது தானம் செய்யச் சொல்லலாமெனத் தோன்றவே நானே சில பொருட்களை வாங்கிக் கைபேசியில் புகைப்படமெடுத்து ஜயந்தி வீட்டிலிருந்த அம்மாவுக்கு அனுப்பிவைத்தேன். அம்மாவும் திருப்தியுடன் தாம்பரம் புரோகிதரை அனுப்பிவைத்தார். ரவியும் மகிழ்ச்சியாகத் தானம் செய்தான்.

இந்த காப்பகத்திலும் மாதம் ஒரு முறை வீட்டிலிருந்து ரவிக்குப் பிடித்த சாப்பாடு எடுத்துக்கொண்டு போகும் அம்மாவின் நடைமுறை தொடர்ந்தது. ஒருமுறை சற்று பார்க்கும்படியாகவும் மறுமுறை மிகவும் மெலிந்துமிருப்பான்.

2005ஆம் வருடம் வரை வடலூரிலிருந்த வஸந்தா பிறகு பத்து வருடங்கள் சென்னை வாசியாக இருந்த பிறகு 2015ஆம் வருடத்திலிருந்து பெங்களூரு வாசியாக ஆனாள். தமிழில் எம்.ஃபில் படித்திருந்த அவள் பெங்களூரு கிளம்புவதற்கு முன் வந்த எனது அறுபதாவது பிறந்த தினத்திற்கு கவிதை நடையில் எனக்குப் பிறந்த நாள் வாழ்த்து எழுதி வந்து என்னை அசத்தினாள்.

2015ஆம் வருடத்தின் டிஸம்பர் மாதம் முதல் தேதி அன்று சென்னையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க மழை பெய்தபோது நான் வீட்டில் தனியாக இருந்ததால் எனக்கு ரவியைப் பற்றிய எண்ணம் அடிக்கடி வந்தது. என் கணவர் ஒரு சிறு பயணமாக அமெரிக்காவிலிருக்கும் குழந்தைகளைப் பார்க்கச்சென்றிருந்தார்.

ஜயந்தி வீட்டிலிருந்த அம்மாவுக்கு ஒன்பதாம் தேதி அன்று காலை ரவிக்கு உடல்நலம் சரியில்லையென்றும் வந்து பார்க்குமாறும் காப்பகத்திலிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. ஜயந்தி அம்மாவை எங்கள் வீட்டிற்குக் கொண்டுவிட்டு அலுவலகம் செல்ல நானும் அம்மாவும் ஆட்டோ பிடித்து ரவியின் காப்பகத்திற்குச் சென்றோம். ரவி கண் விழிக்காமல் படுத்திருந்தான். காப்பகத்தின் நிர்வாகியும் பணியாளர்களும் அம்மாவிடம் மிகவும் அன்பாகப் பேசித் தைரியம் சொல்லி ‘இனிமேல் நாள் கணக்குதான், எதற்கும் தயாராக இருக்க வேண்டும்’ என்று கூறினார்கள். எவ்வளவு பணம் தயார் செய்துகொள்ள வேண்டும் மற்றும் என்ன நடைமுறைகள் இருந்தன என்பவை பற்றியும் கூறினார்கள். மறுநாள் ஞானமும் அவள் கணவரும் சென்றபோது ரவி கண்விழித்துப் பார்த்து அவர்களை அடையாளம்

தெரிந்துகொண்டிருந்தான். அதற்கும் மறுநாள் அம்மாவும் நானும் சென்றபோது ரவி கண்ணைத் துடைத்துக்கொண்ட அம்மாவிடம், ‘அழாதே’ என்று கூறி அவன் அருகில் உட்காரச் சொன்னான்.

அமெரிக்கா சென்றிருந்த என் கணவர் பதினைந்தாம் தேதி அன்று விடியற்காலையில் சென்னை வந்து சேர்ந்தார். சரியாக இருபத்தி நான்கு மணி நேரம் கழித்து பதினாறாம் தேதி அதிகாலை காப்பகத்திலிருந்து ரவியின் உயிர் பிரிந்தது எனத் தொலைபேசி அழைப்பு வந்தது. அத்திம்பேர் இந்தியா வருவதற்கே அவன் காத்துக் கொண்டிருந்தான் என எங்களுக்குத் தோன்றியது. ரவிக்குச் செய்ய வேண்டிய சடங்குகளை என் கணவர் செய்தார். அம்மாவும் சகோதரிகளாகிய நாங்களும் குடும்பத்தினரும் அவனது முப்பத்தி எட்டு வருடப் போராட்டத்திற்குப் பிறகு அவனுக்கு அமைதி கிட்டியது எனத் தேற்றிக்கொண்டோம்.

ரவி கும்பகோணத்திலும் தாம்பரத்திலும் வீட்டிலிருந்த காலத்தில் அம்மா சிறிது நேரம் கூட ஓய்வெடுக்க முடியாமல் அவனுடன் உழல நேர்ந்ததை நினைத்தால் எனக்கு வருத்தமாக இருக்கும். ஆனால் இப்போது ஒய்வு கிடைத்த நிலையிலும் அம்மா சிறிது காலம் நிலை கொள்ளாமலிருந்தார். பிறகு படிப்படியாகத் தனது பெண்கள், பேரக் குழந்தைகள் மற்றும் கொள்ளுப் பேரக் குழந்தைகளுடன் பேசிப் பேசிச் சாதாரண வாழ்க்கைக்குத் திரும்பினார். தன்னுடைய சௌகரியம் போலத் தன்னுடைய பெண்களின் வீட்டில் தங்கி வருகிறார்.

முன்பெல்லாம் படித்தால் சிரமமாகவும் தலை சுற்றலாகவும் இருந்ததாகச் சொல்லிவந்த அம்மா இப்போது நீண்ட நேரங்கள் செய்தித்தாளும் புத்தகங்களும் படித்துக்கொண்டிருப்பதைப் பார்க்க மகிழ்ச்சியாக இருக்கிறது.

பள்ளி மாணவியாக இருந்தபோது ரவியுடன் சேர்ந்து பஜனைப் பாடல்களைக் கற்றுக்கொண்டிருந்த ஜயந்தி சென்னையில் அலுவலகத்துக்குச் சென்று வர மின்சார வண்டியில் பயணித்த காலத்தில் அமைந்திருந்த தோழியர் குழுவுடன் பாடித் தன் பஜனைப் பாடல் திறனை வளப்படுத்திக்கொண்டாள். வங்கிக் கிளைகளில் இன்ஷ்யூரன்ஸ், ம்யூசுவல் ஃபண்ட், டிமேட் (demat) முதலிய இதர நிதிச் சேவைகளுக்கான பொருட்கள் விற்க ஆரம்பிக்கப்பட்ட பிறகு அவற்றிற்கான அங்கீகாரச் சான்றிதழ்த் தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்றுப் பல கிளைகளில் பணிபுரிந்தாள். கரூர் வைஸ்யா வங்கியின் மடிப்பாக்கம் கிளை சென்னையில் திறக்கப்பட்டபோது அவள் துவக்க மேலாளராகக் கிளையில்

பொறுப்பேற்றுக்கொண்டாள். அவளது புகைப்படத்துடன் 'டாக்' (Talk) செய்தித்தாளில் வந்த அச்செய்தியை நான் பெருமையுடன் கத்தரித்து பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன்.



**மடிப்பாக்கத்தில் கரூர் வைஸ்யா வங்கி கிளை திறப்பு**

INAUGURATION ON 28.08.2011

மடிப்பாக்கம், ஆக. 29-

கரூர் வைஸ்யா வங்கியின் 375 வது புதிய கிளை, மடிப்பாக்கத்தில், நேற்று துவக்கப்பட்டது.

மடிப்பாக்கம், மேடவாக்கம் மெயின் ரோட்டில், கரூர் வைஸ்யாவின் 375வது புதிய கிளை மற்றும் ஏ.டி.எம்., மையம் நேற்று துவக்கப்பட்டது. இதில், சிறப்பு விருந்தினராக அடையாறு ஆனந்த பவனின் நிர்வாக இயக்குனர் வெங்கடேசன் கலந்து கொண்டு, புதிய கிளையை திறந்து வைத்தார்.

அஞ்சகா மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் அனுசுயா ஜெகநாதன் குத்துவிளக்கு ஏற்றி, வங்கி சேவையை துவக்கினார்.

மடிப்பாக்கத்தில் கரூர் வைஸ்யா வங்கியின், 375வது கிளையை, அஞ்சகா மருத்துவமனையின் நிர்வாகி அனுசுயா ஜெகநாதன், குத்து விளக்கேற்றி நேற்று துவக்கி வைத்தார்.

மடிப்பாக்கம், வியாபாரிகள் சங்க தலைவர் ஜோன்ஸ் புதிய ஏ.டி.எம்., மையத்தை திறந்து வைத்தார்.

இதுகுறித்து வங்கி மேலாளர் ஜெயந்தி கூறுகையில், "மக்கள் சேவையில் கடந்த 95வருடங்களாக சிறந்து விளங்கும் கரூர் வைஸ்யா வங்கியின் புதிய கிளையை, தற்போது மடிப்பாக்கத்தில் துவக்குவது பெருமையாக உள்ளது. ஏ.டி.எம்., வசதி, லாக்கர் உள்ளிட்ட பல்வேறு நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த புதிய கிளை, வாரத்தின் ஏழு நாட்களிலும் செயல்படும்' என்றார்.

மூத்த அதிகாரியாகப் (senior manager) பதவி உயர்வு பெற்றுப் பணியாற்றிப் பிறகு வங்கிப் பணியியிலிருந்து விருப்ப ஓய்வு பெற்றாள். சென்னைக் கோயில்களில் பல பஜனை நிகழ்ச்சிகளில் தனது குழுவினருடன் பங்கு கொண்டு பாடியிருக்கிறாள்.

அம்மாவின் எண்பதாவது பிறந்த நாள் அன்று வஸந்தா தன்னுடைய அழகான முத்துமுத்தான கையெழுத்தில் அம்மாவுடனான தன்னுடைய நினைவுகளை மனம் திறந்து பகிர்ந்து கொண்டு ஒரு கடிதமாக எழுதித் தபாலில் அனுப்பி அம்மாவுக்கு மகிழ்ச்சியூட்டினாள். அப்பா, தாத்தா மற்றும் பாட்டிக்கு வெவ்வேறு தினங்களில் நினைவு மடல்களாக எழுதிச் சமர்ப்பித்தாள். அக்கடிதங்களைப் படித்தபோது அவள் எங்கள் அனைவரது சார்பாகவும் எழுதியிருந்தது போல இருந்தது. இப்புத்தகமும் என் தங்கைகளுக்கு அதே உணர்வுகளை அளிக்குமென நம்புகிறேன். அனைவரும் நலமுடனிருக்கக் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

## 22. எல்லைகளற்ற கல்வி

கல்வி நிறுவனங்களின் அமைப்பில் சார்ந்து முறைப்படி கற்பதுதான் (formal education) உயர்கல்வி என்றில்லாமல் சாதகமில்லாத சூழ்நிலைகளில் பிரத்தியேகமாகப் பாடம் கேட்டு, பெருங் கல்வியாளர்களாக உயர்ந்து, எளிமையாக வாழ்ந்து, உன்னதமாகத் தொண்டாற்றிய பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த இரு ஒப்பற்ற தமிழறிஞர்களின் கல்வி பற்றி இங்கு நினைவுகூர்வது இந்நூலுக்குச் சாரம் சேர்க்கும்.

1855ஆம் ஆண்டில் பிறந்த மஹாமஹோபாத்யாய உ.வே.சாமிநாதய்யர் அவர்களின் சுயசரிதையான 'என் சரித்திரம்' என்ற நூலைப் படிக்கும்போது அவருக்கு மாணவப் பருவத்தில் உற்ற இன்னல்கள் நம்மைப் பிரமிக்கவைக்கும். அந்நூலிலிருந்து, சங்கீத வித்வானாகவும் உபன்யாஸகராகவும் இருந்த அவரது தந்தை ஸமஸ்தானங்கள் மற்றும் ஜமீன்தார்களின் அழைப்பை ஏற்று ஊர் விட்டு ஊர் ஜாகை மாறியபோது மகனான சாமிநாதய்யரின் கல்விக்கு நிலையான ஏற்பாடுகள் இல்லாமலிருந்ததையும் அவரது பெற்றோரின் ஊர்மாற்றம் என்பது ஒரு மாட்டுவண்டிப் பயணத்துடன் முற்றுப்பெறும் அளவுக்கு அவர்களது வாழ்க்கை எளிமையாக இருந்ததையும் அறியமுடிகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் அயராமல் பல தமிழறிஞர்களிடம் பாடம் கேட்டு அவர் பெற்ற கல்வி அவரை முதலில் கும்பகோணம் கல்லூரியிலும் பின்னாளில் மாநிலக் கல்லூரியிலும் தமிழ்ப் பேராசிரியராக்கியது. பழந்தமிழ் இலக்கியங்களின் ஓலைச் சுவடிகளைத் தேடிக் கண்டுபிடித்து அவற்றைப் பதிப்பிற்குக் கொண்டுவந்ததால் அவர் தமிழ்த் தாத்தா என அறியப்பட்டார். தமிழ்த் தொண்டாற்ற அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளை அறியும்போது நமக்குப் புத்துணர்ச்சி எழுகிறது.

1883ஆம் ஆண்டில் பிறந்த திரு.வி.கலியாணசுந்தரனார் அவர்களின் சுயசரிதையான 'வாழ்க்கைக் குறிப்புக்கள்' என்ற நூலைப் படிக்கும்போது அவருக்குப் பள்ளிக் காலத்தில் ஏற்பட்ட கஷ்டங்கள் நம் நெஞ்சை உருக்கும். அவரது பள்ளிப் படிப்பு நான்கு வருடங்கள் அவரது நோயினாலும் பிறகு வேறு சில காரணங்களாலும் தடைப்பட்டு பிறகு மீண்டும் தொடர்ந்தது. அவர் திரும்பவும் முதல் மாணவராகப் பல பரிசுகள் வாங்கி வக்கீலாகவோ அல்லது கணிதப் பேராசிரியராகவோ ஆகும் குறிக்கோளுடன் மும்முரமாகப் படித்துக்கொண்டிருந்தபோது விதி அவரது படிப்பில் இரண்டாம் முறையாக விளையாடியது. யாழ்ப்பாணம் கதிரைவேற் பிள்ளை என்ற மிகப்பெரிய தமிழறிஞருக்காக நீதிமன்றத்தில் சாட்சியளித்து விட்டு வரும்போது போக்குவரத்தால் நேர்ந்த தொல்லைகளால் காலத்தில் பொதுத் தேர்வுக்குச் செல்ல முடியவில்லை. தேர்வு எழுத வேண்டுமென்றால் அந்த வகுப்பிலேயே இன்னொரு வருடம் படிக்கவேண்டும் என்ற நிலை எழுந்தபோது அதற்கு அவர் மனம் இசையாததால் அவரது பள்ளிப் படிப்பு முடிவுக்கு வந்தது அதன் பின் அவர் பல தமிழறிஞர்களிடம் பாடம் கேட்டு பல துறைப் படிப்புக்களைப் படித்து வெஸ்லி கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் பத்திரிகை ஆசிரியராகவும் நூலாசிரியராகவும் சுதந்திரப் போராட்ட வீரராகவும் தொழிற்சங்கத் தலைவராகவும் விளங்கிய விவரங்கள் படிப்பவர்க்குப் பரவசமூட்டும். திரு.வி.க. அவர்களின் மிடுக்கும் எழுச்சியும் வீரமும் நிறைந்த

தமிழ் நடைக்குச் சான்றாக விளங்கும் அவரது ‘தமிழ்த் தென்றல்’ என்ற நூலை நினைவுபடுத்தும் வகையில் அவர் தமிழ்த் தென்றல் என அழைக்கப்பட்டார்.

இவ்விரு மகான்களது கல்வி ஒரு நிறுவனத்தின் எல்லைகளுக்குக் கட்டுப்படாத பரந்து விரிந்த கல்விக்கு உதாரணமாகத் திகழ்கிறது. இவர்களின் மாணவப் பருவப் போராட்டங்கள் என் மாணவப் பருவத்தின் சௌகரியங்களை எனக்கு நினைவூட்டின.

## 23. முடிவுரை







चेन्नइ नग
भाषा कार्यान्वयन समि
CHENNAI TOWN OF
GUAGE IMPLEMENTATION COM
संयोजक
ओवरसीज़ बैंक
CONVEN
verseas Bank




வங்கிக்குள்ளும் வங்கிகளுக்கிடையிலும் ஆண்டுதோறும் நடந்த ஹிந்தி தின விழாக் கொண்டாட்டங்களின் போட்டிகளில் கலந்துகொண்டு நான் பரிசுகள் வாங்கியபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களில் சில இங்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அப்பா கொடுத்த கல்வி என் திருமணத்திற்குப் பிறகும், நான் வங்கியில் வேலைக்குச் சேர்ந்த பிறகும் மற்றும் முப்பது வருடப் பதவிக் காலத்திற்குப் பின் நான் விருப்ப ஓய்வு பெற்று ஓய்வாக இருக்கும் காலத்திலும் என்னுடன் துணைக்கு வந்துகொண்டிருக்கிறது. அந்தக் கல்வி மகிழ்ச்சியான நாட்களில் ஆனந்தம் சேர்க்கும் விருந்தாகவும் இன்னல்களுக்கிடையில் அமைதி தரும் மருந்தாகவும் தொடர்ந்து வருகிறது.

என் கணவர் என்னுடைய கல்வி முயற்சிகளில் ஒரு தந்தையைப் போல் பெருமிதம் கொள்கிறார். அந்தப் பெருமிதத்தின் தெம்புடன் என்னால் இன்றும் ஒரு கல்லூரி மாணவி போல் பாடங்களில் அமிழ்ந்துவிடமுடிகிறது. எங்களது மூன்று குழந்தைகளின் கல்விப் பயணங்களில் நானும் அவ்வப்போது உடன் பயணித்து இன்று பரஸ்பரம் உற்சாகமும் பெருமிதமும் கொள்கிறோம்.

நான் பணி புரிந்த இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கி எனக்கு ஒரு பல்கலைக்கழகம் போலமைந்து நான் பல துறைகளில் கற்பதற்கு எனக்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக்

கொடுத்தது. நான் கற்றதற்கு எனக்குச் சம்பள உயர்வு, பதவி உயர்வு, செலவு செய்த பணத்தை ஈடு செய்தல், ஊக்கத் தொகைகள் மற்றும் பரிசுகள் ஆகியவற்றைக் கொடுத்தது. மிகவும் தேடப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களில் ஒருவராக நான் பணிபுரிந்து அலுவலகப் பணியில் நிறைவு பெற்றேன்.

கல்வி கொடுக்கும் நிறைவால் பொருள் உலகத்தின் சௌகரியங்களில் அதிக நாட்டமின்றி மனம் விட்டு விடுதலையாக நினைக்கிறது.

இவற்றின் விரிவான சித்தரிப்புக்களை ‘இல்லறம்’, ‘ஜஓபி தந்த செல்வமும் கல்வியும்’ மற்றும் ‘விட்டு விடுதலையாக...’ என்ற மற்ற பாகங்களில் காணலாம்.



https://lalithasitaraman.in/

**About the Author :**

**Lalitha Sitaraman** is a former senior manager of Indian Overseas Bank. Her subjects of interest and training include Mathematics, Banking, Cost Accountancy, Computer Applications and Languages.

She is specially indebted to her father, a school teacher, for his steadfast support for her higher studies which led to her postgraduation in Mathematics. She is indebted to her mother, who makes it a point to go through her writings, for her blessings.

She is grateful a lot to her parents-in-law who fondly supported her educational pursuits.

She is immensely grateful to her husband, who takes a father's pride in her studies and writings, for his supportive nature. She is heartened about their three children's values, education, initiatives and accomplishments. She is thankful to her children and children-in-law for their words of encouragement for her writings.

She shined in Software Development, inside out, in the prestigious in-house developed software era of Indian Overseas Bank. She took voluntary retirement from IOB after thirty years of service. Her latest self learnings include Python and Machine Learning. The fulfilment she derives from continuous education drives her less towards materialism and more towards liberation.

**Literary Works by the Author:**

This Tamil book 'வாழ்க்கைச் சித்திரங்கள் - அப்பா கொடுத்த கல்வி' is the author's first Book. It is the first part of her Memoirs intended to be published in four parts.

She has to her credit a collection of twelve articles, mostly in Tamil and a few in English, written since 1981 in IOBian, the in-house journal of Indian Overseas Bank.

Her English articles on 'Make in India' and 'Demonetisation' had been published in 'Management Accountant' and the one on 'Financial Inclusion' had been published in 'Bank Quest'.

Her three short stories and a few articles in Tamil, featuring some social topics, remained with her without appearing anywhere!

Her earlier works, except two bank related articles in IOBian, have been now published in her website.

**Praise for the Author's Works:**

'Informative', 'inspirational', 'intellectual', 'excellently researched', 'neatly presented', 'thought provoking', 'coherent and lucid' and 'unbiased' are some of the readers' praises for her writings.

**Acknowledgement:**

She is thankful to her close relatives, young and old, and friends who glanced through this Book at the draft level and offered valuable suggestions. She is happy to hear from them that her Memoirs have blossomed out as positive and fast paced narratives.